Tamil Monthly Published in Canada

Marumoli

$ 1.25

மறுமொழி!

July &
August 1997





செவ்வாயில் உயிரினம்?



கிரிக்கட்டிலும்
ஊழல்





அபாய அறிவிப்பு

எயிட்ஸ்

கனடா தமிழரிடையேயும்
எயிட்ஸ் பரவுகிறது!

நிலா குகதாசன்

"இன்னுமொருமுறை
உயிர்ப்பான்....!"



1958 - 1997

ஆசிரியர்
த.சிவதாசன்

பலம்.. மஹா பயம்!

வரவேற்பு பூரிப்பாயிருக்கிறது. விளம்பரம் எதுவுமேயில்லாமல், முன்னறிவுப்பு ஒன்றுமேயில்லாமல் 'மறுமொழி' விற்றுத் தீர்ந்திருக்கிறது. வாசக அன்பர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

வாழ்த்துக்கள் , அதுவும் மனமார்ந்த வாழ்த்துக்கள், ஏராளம். எமக்குப் பெருமை சேர்ப்பதற்காகவல்ல. வாழ்த்துச் சொன்ன அந்த அன்பர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.


பத்திரிகை சாதனம் இவ்வளவு பலம் வாய்ந்ததாயிருக்குமென்று எதிர்பார்க்கவில்லை. நாம் எங்கே நிற்கிறோம் என்று சொல்லப்போய் 'நண்பர்கள்' எங்கே நிற்கிறார்கள் என்று அறிந்து கொள்ள ஏதுவாயிற்று. விமர்சனம் என்று நமது கருத்துக்களைச் சொல்லப்போய் வேலிகள் பலவற்றை எழுப்பியாயிற்று. எமக்குச் சரியென்ற கருத்துக்களை எழுதப்போய் நிறைய வாசகர்களைச் சேர்த்தாயிற்று. விற்பனையாகக்கூடிய சஞ்சிகையைத் தந்து விளம்பரதாரர்களை மகிழ்வித்தாயிற்று. பலம் மகாபலமேதான்.

முதலாவது இதழ், முதலாவது முயற்சி. இந்தச் சஞ்சிகை வெளிவருமா, வந்தாலும் நல்லாக வருமா, நல்லாக வந்தாலும் ஒழுங்காக வருமா, விற்பனையாகுமா அல்லது வெறுமனே கொடியை அலங்கரித்துவிட்டு கூடைக்குள் பதுங்கிக் கொள்ளுமா என்று ஆயிரம் கேள்விகள். இதனால் பல நல்ல படைப்பாளிகளும் கூடவே வர்த்தகர்கள் சிலரும் 'சந்தேகத்' தூரத்திரத்தில் நின்று கொண்டனர். புரிந்துகொள்ளப்பட வேண்டியதுதான். சந்தையில் பண்டத்தின் தரம்தான் பேரத்தையே தீர்மானிக்கிறது. ஒரு புள்ளியை மட்டும் வைத்துக் கொண்டு வரைபடமொன்றை வரைந்துவிட முடியாது. இரண்டாவது புள்ளி நம் முன்னேற்றத்தின் திசையைத் தீர்மானிக்கும்.

வாசகர்கள் நீங்கள். உங்கள் மனவெளியில் பிரசவிக்கும் கேள்விகளுக்கு 'மறுமொழி' இதுவல்லவானால் நாம் ஒதுக்கப் படுவோம்.

சொல்லுங்கள்! கேளுங்கள்! செவிமடுப்போம்.
அது வரையில் உங்கள் கேள்விகளுக்காய்ப் பார்த்திருக்கும், 'மறுமொழி'

நன்றியுடன்
ஆசிரியர்
சிவதாசன்



Shali Publications
Canada

இது இரண்டாவது இதழ். காலம் வழககம்போல கைகொடுக்க மறுத்துவிட்டது. தாமதத்திற்கு மன்னிப்பில்லை. சாத்தியமல்லாத சத்தியங்கள் எதற்கு? தொடர்ந்தும் முயற்சிகள் செய்கிறோம். காலூன்றுமாவது கைதாருங்கள் என்று கேட்டிருந்தோம். நிறையக் கைகள் நீண்டு வந்தன. மனப்பூர்வமான நன்றிகள்.

சுமி பகீரதன்

Cover Story

"எயிட்ஸ் வியாதிக்கும் தமிழருக்கும் என்ன சம்பந்தம்? அது வெள்ளைக்காரரின் வியாதி! எங்கள் கலாச்சாரத்தில் இப்படியான வியாதிகள் வருதற்கு சந்தர்ப்பங்களே கிடையாது!"

இப்படியெல்லாம் நம்மவர் பேசிக்கொள்வதைக் கேட்டிருப்பீர்கள். இந்த மாதிரியான கற்பனைகளில் தமிழர் சுகம் அனுபவித்த காலங்கள் மலையேறி விட்டன. தமிழர் மத்தியில் எயிட்ஸ் வியாதி பரவி வரும் ஆபத்தைப் பற்றி ஒரு செய்தி காதில் விழுந்தது. அது பற்றி மேலும் விசாரித்ததில் பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தன. கனடிய தமிழர் சம்பந்தப்பட்ட துயரமான பல சம்பவங்கள் இதில் அடங்கியிருப்பினும், இது உலகளாவிய பல துயரங்களின் ஒட்டு மொத்தமான கதைகள்தான்.

ஒரு மனிதனின் வாழ்க்கை முறை அவனது தேகாரோக்கியத்தில் மிக முக்கிய பங்கை வகிக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே. இருப்பினும் அறியாமையும் சில வேளைகளில் சுய வேட்கையின்பால் உருவாகும் அசட்டுத் துணிச்சலும் கண நேர இன்பங்களுக்காய் தேகாரோக்கியத்தை உதாசீனம் செய்யும் நிலைமைகளும் பரவலாக மனிதர் மத்தியில் காணப்படும் பலவீனங்கள். எயிட்ஸ் நோயின் பீடிப்புக்குள்ளான பலர் மரபிற்கு அப்பாற்பட்ட வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுப்பதும் அறியப்பட்ட காரணம் ஒன்றாகவிருப்பதனால் இது பற்றிய விவரணக் கட்டுரையின் அவசியமொன்று எமக்குத் தேவையாகவிருந்தது. தமிழர் கலாச்சாரங்களில் இறுக்கமான குடும்ப முறை சில வேளைகளில் இந் நோய் பற்றிய கரிசனையை விலக்கி வைக்கலாம். இருப்பினும் தவிர்க்க முடியாத உலக வலங்களும் மனித பலவீனங்களும் கலாச்சார வேலிகளைத் தகர்த்தெறியும் அனுபவங்கள் நமக்குப் புதியவையல்ல.

கனடாவில் தமிழர் சமூகத்தை "மறைந்திருந்து தாக்கும் மர்ம வியாதி" இந்த எயிட்ஸ் வியாதி. எயிட்ஸ் பாதிப்புக்குள்ளாகிவரும் சமூகங்களில் கனடிய தமிழர் சமூகமும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

இது ஒரு உண்மை கலந்தகதை



தோல்வி

சங்கவி கனடாவுக்கு வந்து நான்கு வருடங்கள். அழகான ஒரு தமிழ்ப் பெண். Fatal Attraction என்று சொல்வார்களே அப்படியான அழகு. கவர்ச்சி. தென்னிந்தியாவில் இருந்திருந்தால் பாலச்சந்தரோ பாரதிராஜாவோ லபக் என்று பிடித்திருப்பார்கள். வயதும் இருபத்தி ஐந்து. வாட்டசாட்டம்.

வந்த புதிதில் தன் உறவினருடன் தங்கியிருந்தவள். இப்போது தனியாக இருக்கிறாள். விதவைத் தாய் யாழ்ப்பாணத்தில். பருவம் பார்த்த இரண்டு மூத்த சகோதரிகளும் தாயுடன். ஆண் சகோதரர்கள் இல்லை. தாய்க்காக ஏதாவது உழைத்தேயாக வேண்டும். அதனால் படிப்புக்கெல்லாம் நேரமில்லை.

இவ்வளவு அழகாயிருந்தும் ஒரு ஆண் துணையைத் தேடிக்கொண்டு கல்யாணம் செய்து சீரும் சிறப்பாக வாழலாம். ஆனால் அவளுக்கு அப்படியான எண்ணம் எதுவுமில்லை. அவள் அப்படியாகவிருப்பதற்கு என்ன காரணம் என்பது அவளுக்குத்தான் தெரியும். அவள் அதை யாரிடமும் பகிர்ந்து கொள்வதாயில்லை. உஷ்.....

யாழ்ப்பாணத்தில் கல்லூரிப் பெண்ணாகவிருந்தபோது ஒருநாள் பக்கத்து வீட்டு மாலதி சொன்னாள் 'சங்கவி நான் நாளை கொழும்புக்குப் போகிறேன். கனடாவிலிருந்்து எனது மைத்துனர் வந்து நிற்கிறார். திரும்பிப் போறபோது இரண்டு பெண்களைக் கூட்டிக் கொண்டு போகலாமாம். நான் போறன் நீயும் வாறதாயிருந்தால் வா. காசு அங்க போய்க் குடுக்கலாம்' என்றாள்.

சட்டுப் புட்டென்று எல்லாமே நடைபெற்றது. கொட்டப்

பெட்டிக்குள் இருந்த சேமிப்பையும் தாலி கழற்றியதிலிருந்து பாரமற்றுப் போய்க் கிடந்த தாலிக் கொடியையும் மகளின் கைக்குள் வைத்துப் பொத்திக் கைகளை மூடி 'மகளே கொப்பா போனதிலிருந்து இதுதான் இதுவரை நான் சேமித்து வைத்த சம்பாத்தியம். உன்ர கொக்காவுக்காகத்தான் வைத்திருந்தனான். இப்ப உன்னட்டைத் தாறன். நீதான் இனிமேல் எங்களுக்கு ஆம்பிளைப் பிள்ளை. கனடாவுக்குப் போய் நல்லாப் படிச்சு எங்களையும் கெதியெண்டு கூப்பிடு. என்று சொல்லி கடைசியாக ஒரு வீபூதிக் குறியையும் வைத்து விட்டாள் அம்மா.

அது நான்கு வருடங்களுக்கு முன்பு. இப்போது சங்கவி முன்னைய சங்கவி இல்லை. அழகெல்லாம் உதிர்ந்து கண்கள் குழிவிழுந்து சரும வியாதி பீடித்து மெலிந்து நலிந்து தினமும் இருமிக் கொண்டு மருத்துவரும் வீடுமென அலையும் ஒரு நோயாளி. உறவினர் நண்பர் எல்லோருமே வெறுத்து ஒதுக்கிய ஒரு அபலை. வாழ்வதற்கு எதுவுமில்லை, எவருமில்லை என்று மனம் வெதும்பி நிற்கும் ஒரு வாழாவெட்டி.

சங்கவிக்கு நாள் குறிக்கப்பட்டு விட்டது. அம்மாவுக்கு 'ஆண் பிள்ளையாயிருந்து' எவ்வளவோ செய்யவேண்டும். அக்காமாரை வாழவைக்க வேண்டுமென்ற கனவுகளோடு வாழ்ந்து கொண்டிருந்த சங்கவியின் கதை விரைவில் முற்றுப்பெறப் போகிறது.

தொடர்ந்து வரட்டு இருமலாக இருக்கிறதே உடல் நிறை திடீரென்று குறையவாரம்பித்ததே என்று மருத்துவரிடம் காட்டியபோது மருத்துவரின் முகம் மாறியது ஆச்சரியமாகவிருந்தது. தொடர்ந்த பல பரிசோதனைகளின்பின் அந்த அதிர்ச்சி தரும் செய்தியை மருத்துவர் சொன்னார்.

சங்கவிக்கு HIV பொசிட்டிவ். அதாவது கூடிய விரைவில் அவளுக்கு எயிட்ஸ் வந்து விடும்.

வாழ்வின் அர்த்தம் முதன் முதலாக அவளுக்குப் புரிந்தது. போராட்டத்தின் முதல் அத்தியாயம் அவளுக்கு ஆரம்பமானது. அடுத்த நடவடிக்கை என்ன?. மருத்துவருக்கும் தனக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம் அது. 'சங்கவி இனித்தான் நீ பலமுள்ளவளாக இருக்க வேண்டும். நோயை விடவும் மன ஆறுதல் தருவதற்கு நல்ல நண்பர்கள், உறவினர்கள் வேண்டும். இவ் வியாதியைப்பற்றிய பூரண அறிவைப் நீ பெற்றாக வேண்டும். இவ் விடயங்களில் உதவி செய்ய யாராவது இருக்கிறார்களா?. வேண்டுமானால் தென்னாசியர்களுக்கு இவ்விடயங்களில் உதவி செய்யும் ஒரு சங்கம் இருக்கிறது. அதன் பெயர் ASAP (The Alliance for South Asian AIDS Preventian). தென்னாசியர்களிடையே எயிட்ஸ் பரவுவதைத் தடுப்பதில் தீவிரமாக உழைத்துவரும் ஒரு அமைப்பு. அதன் தொடர்பை ஏற்படுத்தித் தருகிறேன். தொடர்பு கொண்டு பார். அங்கும் எங்களைப்போல பெண்கள் கவுன்சிலர்களாக வேலை செய்கிறார்கள். தமிழில் கதைத்து வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம். நோய் வந்துவிட்டது என்பதற்காக நாளைக்கே நீ இறந்து விடுவாய் என்பதல்ல. உன்னைப் போன்ற பல நோயாளிகள் பல வருடங்களாக வாழ்கின்றனர். உன் காலத்துக்கு நாளையே இவ் வருத்தத்துக்கு உலகில் எங்காவது மருந்தைக் கண்டுபிடித்து விடவுங்கூடும். ஆனபடியால் நம்பிக்கையை விடாதே. முயற்சி செய்'

சங்கவிக்கு மருத்துவர் கொடுத்த தென்பு உற்சாகமூட்டுவதாயிருந்தது. அடுத்தபடியாக தான் மிகவும் நேசிக்கின்ற காதலன் யோகியிடம் தன் மனதைத் திறந்த எல்லாவற்றையும் கொட்டி அழவேண்டும். அவனது அன்பு இருக்குமட்டும் தனக்கு மானசீக ஆதரவுக்கு பஞ்சமில்லை என்ற நினைப்புடன் யோகியின் வீட்டுக்குப் போனாள்.

யோகிக்கு தலை விறைத்துப் போனது. இருவரும் சிறிது நேரம் அழுது கொண்டனர். தனக்கும் சங்கவிக்குமான உறவு பற்றியும் நோய் தன்னையும் பீடித்திருக்குமா என்பது பற்றியும் அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. இதுவரை தான் சங்கவியுடன்

எயிட்ஸ் என்றால் என்ன?

எயிட்ஸ் (AIDS) எனப்படுவது ஈட்டிய நிர்ப்பீடனக் குறைபாடு (Acquired Immune Deficiency Syndrome) என்று பொருள்படும். இங்கு 'ஈட்டிய' என்பது 'இன்னொருவரிடமிருந்து பெறப்பட்ட' அல்லது 'இன்னொருவரிடமிருந்து தொற்றப்பட்ட' என்று கருத்தாக்கம் பெறும். இந்த வைரஸ் தொற்றிக் கொண்டு அது குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து விட்டால் இக்கிருமியோடு போராடி அதை அழிக்கும் வல்லமையை உடல் இழந்து விடுகின்றது. இந்த வைரசினால் பீடிக்கப்பட்டவரை HIV+ நோயாளி என்பர்.

HIV வைரஸ் குருதி, சுக்கிலம் மற்றும் யோனிப் பதார்த்தங்களில் காணப்பட்டாலும் குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து கொள்ளும்போதுதான் 'நோய்' என்ற பெயரைப் பெறுகிறது. இவ் வைரஸ் மனித உடற் கலங்களினுள் நுழைந்து தன்னைத் தானே பிரதி பண்ணிக் கொள்வதால் பெருமளவில் கலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு உடலின் நோயெதிர்ப்புச் சக்தியை மேலும் மேலும் வலுவிழக்கச் செய்கின்றது. இவ்வெதிர்ப்புச் சக்தி குறையும் போது பல உயிராபத்தை உண்டுபண்ணக் கூடிய சளிசுரம் (pneumonia) புற்றுநோய் (cancer) போன்ற கொடிய நோய்கள் பீடித்து மனிதரின் இறப்புக்குக் காரணமாக அமைகின்றன.

உடலுறவு கொள்ளாமலிருந்தது ஒரு வகையில் மகிழ்வாகவிருந்தாலும் சங்கவிக்கு ஏன் இந்த வியாதி வரவேண்டும் என்பதை நினைத்தபோது அவள் மனம் இருளவாரம்பித்தது. சந்தேகம் தலைக்கேறியது.

சங்கவிக்கு இருந்த ஒரே ஒரு மானசீக உறவும் கலைந்து போனது. விஷயம் தெரிந்ததும் உறவினர்களும் ஒதுக்கி விட்டார்கள். அம்மாவுக்கும் சகோதரிகளுக்கும் எழுதிய கடிதத்தில் சுகமில்லை விரைவில் மாறும். வேலைக்குப் போகத் தொடங்கியதும் காசு அனுப்புகிறேன் என்று எழுதியதுதான் கடைசிக் கடிதம்.

இப்போது சங்கவிக்கு ASAP ஐத்தவிர உறவு நட்பு என்று எதுவுமில்லை. ASAP அலுவலகமும் ஒரு அறை கொண்ட நிலக்கீழ் அறையுடனும் அவள் வாழ்க்கை போகிறது. சிலவேளைகளில் யோசித்துப் பார்ப்பாள். கனடாவுக்கு வரவேண்டுமென்ற ஆசையில்லாதபோதும் அக்காமாருக்குக் கல்யாணம் ஆகவேணுமென்ற உத்வேகத்தில்தான் ஒரு தடவை மட்டும் 'அது நடந்தது'. சிங்கப்பூரில் ஒரு இரவு அவள் தங்கியிருந்த ஹோட்டேலுக்கு ஒரு தமிழர் வந்தார். நாளை பகல் பாளி நாட்டுக்குப் போவதாகவும் அங்கிருந்துதான் விமானமேறுவதாகவும் சொல்லிக் கூட்டிக் கொண்டு போனார். ஒரே ஹோட்டேலில் ஒரு இரவு தங்கி அடுத்த நாள் விடிய விமானமெடுத்துப் புறப்படுவதாக ஏற்பாடு. அவர் கணவனாகவும் அவள் மனைவியாகவும் இமிகிறேஷனில் சொல்லித்தான் வரவேண்டும். 'இருவரும் ஒன்றாக ஹோட்டேலில் தங்கியதற்கு அத்தாட்சி வேண்டும்' என்று அவர் சொன்னதற்கு மறுப்பென்ன சொல்ல முடியும்.

அன்றிரவு பலவீனம் வெற்றிகொண்டு விட்டது.

இந்த ஒன்றைத் தவிர பாலியல் என்று எதையுமே அறியாதவள் சங்கவி. ரொறோன்டோவில் வந்திறங்கியபின் 'அவரு'க்கு என்ன நடந்தது என்றே தெரியாது. தான் செய்ததை ஒரு குற்றமாகக் கருதி பைத்தியக்காரமாக அழுது ஓலமிடும் 'சினிமாத்தனமான' தமிழ்ப்பெண் தானல்ல என்பது அவளின் நிலைப்பாடு. அம்மாவும் அக்காமாரும் நெஞ்சுக்குள் இருக்குமட்டும் நடந்தது தன் கடமையில் ஒன்று என்றவாறே அவள் நினைத்தாள். அதனால்தான் அதை என்றுமே எவரிடமும் பகிர்ந்து கொள்ளாது தன் நெஞ்சுடன் வைத்துக் கொண்டிருக்கிறாள்.

இப்போது 'எயிட்ஸ்' வியாதியைப்பற்றி நிறைய அறிந்த பிறகுதான் பாளி ஹோட்டல் விவகாரத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று நினைத்தாள். வியாதி பற்றியும் தற்பாதுகாப்பு பற்றியும் உள்ள அறியாமையே இந்த நிலைக்குத் தன்னை உட்படுத்தியிருக்கிறது என்பதை உணர்ந்தாள்.

இனியென்ன. மருத்துவர் சொன்னது போல 'மானசீக ஆதரவுக்கு' இருக்கிறார்கள் என்று நம்பிய எல்லோருமே கைவிட்டுவிட்டார்கள். கடவுளை நம்பவும் நம்பாமல் விடவும் ஏற்ற மனநிலையில்லை. நீரில் மூழ்கும்போது துரும்பைக் கைப்பற்றிய நிலைதான். சோர்வும், நடுக்கமும் அதிகரிப்பதாக உணர்வு. 'வீட்டுக்கு கடிதம் எழுதி விட்டீர்களா' என்று மருத்துவர் கேட்டது ஏதோ முன்னறிவித்தல் போலவிருந்தது.

'மருத்துவ மனைக்குச் சென்று 'அட்மிட்' செய்யுங்கள்' என்ற மருத்துவரின் உத்தரவின் பேரில் 'பலியேட்டிவ் கெயர்' என்ற வார்ட்டில் அட்மிஷன் கிடைத்தது. சங்கவிக்கு நாட்கள் எண்ணப்பட்டு விட்டன என்பதன் அறிகுறியே அது. ASAP நண்பி ஒருத்தியின் மூலம் இறுதிப் பயணத்துக்காக தன்னைத் தயார் பண்ணினாள் சங்கவி. கடைசி நேரத்தில் தன் தாய் சகோதரிகளைப் பார்க்க முடியாது போய் விட்டது என்பது மனதைப் பிழிந்தெடுத்தது. யோகியை ஒரு தடவையாவது பார்த்து 'பயணம்'

ASAP

The Alliance for South Asian AIDS Prevention (ASAP) தென்னாசியர்களின் மத்தியில் எயிட்ஸ் பரவுவதைத் தடுப்பதில் தீவிர பங்கேற்று உழைத்து வருகிறது. எயிட்ஸ் தொற்றிக் கொண்டவர்களுக்கு சகல விதமான உதவிகளையும் செய்து அவ்வப்போது தேவையான ஆலோசனைகளையும் கொடுத்து வருகிறது.

இவர்களது சேவைகளில் சில

மொழி, கலாச்சாரப் பின்னணிகளைத் தெரிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நோய் பற்றிய அறிவு, ஆதரவு போன்றவற்றை வழங்கல்.

இனம், மதம், கலாச்சாரம், பால், சாதி, மத நம்பிக்கை, வல்லமை, தேசீயம் என்பன போன்ற பின்னணியினால் ஒருவர் பேதப்படுத்தப்படுவதை ஒழித்தல்.

HIV / AIDS ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய மதிப்பையும் பாதுகாப்பையும் வழங்கல்.

எயிட்ஸ் ஒரு தவிர்க்கக்கூடிய ஆனால் தொற்றிக் கொண்ட பின்னரும் பராமரிக்கக்கூடிய ஆயள் வியாதி என்பதை வலியுறுத்தல்.

தமிழ், ஹிந்தி, மலயாளம், பஞ்சாபி, உருது, குஜராத்தி, ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்பு, தொண்டர் சேவைகள், தகவல் சேவை ஆதியவற்றை வழங்கல்.

சொல்லிவிடலாமா என்று மனம் ஏங்கியது. அவள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிய ஒரு சீவன். அதுவும் கைகூடவில்லை.

ஒரு இரவு உலகமே நிசப்தமாகவிருந்த போது எவரையும் தொந்தரவு செய்யாது சங்கவி இன்னுமொரு உலகத்துக்குப் போய்விட்டாள். எதுவும் எவரும் இல்லாது அகதியாக வந்து எவரும் எதுவும் இல்லாது போய்விட்டாள்.

'இது என் அம்மாவின் தாலி. என்றோ ஒருநாள் நான் அம்மாவைச் சந்தித்து உன்னுடைய 'ஆண் பிள்ளை' தாலியை விற்காமலேயே சாதித்து விட்டேன் என்று சொல்லலாமென்றிருந்தேன். என்ன இருந்தாலும் நான் பெண்ணே தான் அதனால்தான் இந்த உலகத்திடம் தோற்றுப்போய் விட்டேன். இதை விற்றிருந்தால் சிலவேளை முடிவு வேறு விதமாயிருந்திருக்குமோ என்னவோ. இதை விற்று என் மரணச்செலவுகளுக்கு உபயோகியுங்கள். நன்றி'

(கடிதம் ASAP நண்பிக்கு எழுதப்பட்டிருந்தது.)

இதற்கு மருத்துவமே கிடையாதா?

HIV எனப்படும் இந்த வைரஸ் உடலில் தொற்றிக் கொண்டது என்றதுமே ஒருவருக்கு எயிட்ஸ் வந்துவிட்டது என்று கருதக்கூடாது. உண்மையில் எயிட்ஸ் என்பது ஒரு வியாதி என்பதை விட பல விதமான வியாதிகளின் கூட்டான நோயறிகுறி (*syndrome*) என்று சொல்வதே பொருத்தம். உடலின் நோயெதிர்ப்புத் தன்மை குறைந்ததும் பற்பல நோய்களும் தொற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது.

HIV தொற்றிக் கொண்ட பல நோயாளிகள் இவ் வைரஸைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதன் மூலம் நீண்ட காலம் வாழ்ந்து வருகின்றனர். சரியான மருத்துவம், முறையான உணவு வகையை உட்கொள்ளுதல், தேக அப்பியாசம், மாற்று வழி மருத்துவ முறைகள் ஆகிய முறைகளைப் பாவித்து *HIV* வைரஸைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கலாம்.

அறிகுறிகள்

வயிற்றோட்டம்

ஒரு நாளைக்குப் பல தடவைகள் இருக்கும் ஆனால் பல வாரங்களுக்கு நீடித்திருக்கும்.

இருமல்

வரண்ட இருமல். நோய் எதுவுமில்லாது வரண்ட இருமல் நீண்ட நாட்களுக்கு இருக்கும்.

சோர்வு

தொடரும் சோர்வு. நிரம்ப நித்திரை கொண்டாலும் உடற் தளர்வும் சாதாரண கடமைகளைக் கூட செய்ய முடியாத களைப்பு.

காய்ச்சல்

விடாத காய்ச்சல். 99—101 பாகைகளில் தொடர்து வரும் காய்ச்சல். ஆனால் வேறெந்த நோய்களும் இருக்காது.

வீங்கிய கட்டுக்கள்

கமக்கட்டு, கழுத்து முதலியவற்றில் தோன்றும் கட்டுக்கள். சில வேளகளில் நோவினையும் தரலாம்.

இரவில் வியர்வை

இரவில் காய்ச்சல் எதுவுமின்றியே படுக்கையை நனைக்குமளவுக்கு வியர்க்கும்.

சருமச் சிரங்கு

அரிக்கும் உணர்வுடன் கூடிய வீக்கங்கள், சொறிவுகள் உடலின் எந்த இடத்திலும் தோன்றிப் பரவலாம்.

எடை இழப்பு

உணவுக் கட்டுப்பாடு எதுவுமின்றி அதி விரைவில் 10 இறாத்தலுக்கு மேல் நிறை குறையலாம்.

வாய்க் கோளாறுகள்

முரசு, நாக்கு போன்றவற்றில் நோவுடன் கூடிய வெண் படர்வுகள் தோன்றலாம்.

என்ன செய்யலாம்?

வறுமை, நோய், துயரம் இவையெல்லாம் மானிடத்தின் பொதுவுடமைகள். எயிட்ஸ் வியாதியும் ஏனைய வியாதிகளைப் போன்றே பாதிக்கப் பட்டவரை மட்டுமல்லாது அவரைச் சூழ்ந்தவர்களையும் பல வழிகளிலும் அணுவணுவாகத் தின்று தீர்க்கும் வல்லமை கொண்டது. கண் முன்னால் உருகிக் கரைந்து போகும் உயிர்களை நேசிக்கின்ற எவருக்கும் இது பற்றாத ஒரு வியாதியேதான்.

இந்நோயைத் தடுப்பதிலும் ஒழிப்பதிலும் உலகம் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது. மேற்குலகில் மருத்துவ சமூகம் மட்டுமல்லாது சாதாரண மக்களும் தங்களாலான வரையில் இச் சமூகப் பணியில் பங்கேற்றி வருவதுடன் இந் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள். இந் நோய் பற்றிய அறிவும் அணுகுமுறையும்தான் இவ் வெற்றிக்குக் காரணம். 'இது ஓரின சேர்க்கையாளர்களுக்கும் போதை வஸ்த்து பாவனையாளர்களுக்கும் கடவுளால் கொடுக்கப்பட்ட தண்டனை' என்று பரிகாசம் செய்த காலம் போய் இன்று நம் எல்லோருக்கும் பொதுவான நோய் என்று கருதுமளவுக்கு மேற்குலகம் வளர்ந்திருக்கிறது. ஆனால் தென்னாசியாவில் எயிட்ஸ் இன்று சாதாரண குடும்பங்களைத் தாக்கும் நிலைக்கு கட்டுப்பாடின்றி வளர்ந்து கொண்டிருக்கிறது. அறியாமையும், வறுமையும் இந் நோய்க்கு ஆரோக்கியமான விளை நிலங்களாகிவிட்டிருக்கின்றன. வாழ்க்கை முறை மாற்றங்கள், பாதுகாப்பற்ற கலவி முறைகள் ஆதியன இவ் விளைநிலங்களுக்கு நல்ல உரமேற்றிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலைமையில் நாமென்ன செய்யலாம்?. மனிதனைப் போலவே நோய்க் கிருமிகளும் பலவிதமான தடைகளையும் தாண்டி புதுப் புது வடிவங்களில் புதுப் புது வியாதிகளைத் தோற்றும் வல்லமை கொண்டவை. சூழலின் நாசத்துக்கு மனிதனின் பங்கு எத்தகையதோ அதே போலத்தான் மனிதனின் நாசத்துக்கு கிருமிகளின் பங்கும். இதனால் நோய்களை ஒழிப்பதிலும் தடுப்பதிலும் மனிதனின் போராட்டம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கப் போகிறது. ஆகவே 'இந்த நோய் எங்களைத் தாக்காது' என்பது போன்ற தற்காப்பு வாக்கியங்களை விட்டு நாம் எல்லோரும் எங்களாலான ஒத்துழைப்பை இவ்வுலகத்துக்கு நல்க வேண்டும். நோயை ஒழிப்பதில் ஒத்துழைக்காவிடினும் பரம்புவதை நிறுத்துவதில் நிச்சயமாக ஒத்துழைக்கலாம். ஆரோக்கியமான வாழ்க்கைமுறைகளைக் கையாளலாம். நோயைப்பற்றிய விபரங்களைத் தேடியறிந்து எல்லோரும் பயன்பெறும் வகையில் கற்றுக் கொடுக்கலாம். மருத்துவ. சேவைப் பணிமனைகளில் நோய் பற்றிய விளக்கங்களும் ஆலோசனைகளும் இலவசமாகத் தரப்படுகின்றன. எமது சமூகத்தில் இந் நோய் பற்றிய அணுகுமுறை சற்று பின்தங்கியதாகவே இருக்கிறது. இந் நோயைப்பற்றிப் பேசுபவர்களையோ அன்றி இதன் பொருட்டு சமூக சேவையில் ஈடுபடுபவர்களையோ சந்தேகக் கண்ணோடு பார்க்கின்ற பழக்கம் அறியாமையையும் அநாகரீக மனப்பான்மையையுமே காட்டுவதாகிறது.

தடுப்பு முறைகள்

கலவி முறைகளும் பாலியல் பழக்கங்களும் விதம் விதமான கலாச்சாரப் பின்னணிகளுடன் மாறுபாடு கொள்பவை. தமிழரிமும், குறிப்பாகத் தென்னாசியரிடமும் இருக்கின்ற பழக்கங்கள் ஓரளவு பொதுவானவை. இருப்பினும் மேற்குலகின் பாதிப்பு இந்த சமூகத்தினரின் பழக்கங்களில் நிறையவிருப்பதனால் அதற்கேற்ற தடுப்பு முறைகளை அனுஷ்ட்டிப்பதும் தேவையாகிறது.

கொண்டோம் எனப்படும் கலவியுறை திரவ பதார்த்தங்களின் பரிமாற்றத்தைத் தடுக்கும் ஒரு கருவி ஆனால் நீர் சார்ந்த சளித்தன்மை இதற்கு அவசியம். 'பேபி ஒயில்' , பெற்றோலியம் ஜெலி போன்ற பதார்த்தங்களைப் பாவிக்கும்போது சில வகையான கலவியுறைகள் தடுப்புத்தன்மையை இழந்து விடுகின்றன. இதனால் HIV வைரஸ் தொற்றிக்கொள்ள ஏதுவாகின்றது.

கலவி நடவடிக்கைகளுக்கு முன்னர் பல் தீட்டிக் கொள்ளுதல், பல் வைத்தியரிடமிருந்து வந்தவுடனேயே முத்தமிடுதல் போன்றவை வாய்க்குள் இரத்தக் கசிவை உண்டாக்குவதால் இதன் மூலம் நோய் தொற்றிக் கொள்ள காரணமாகிறது.

இந் நோய் மர்மமானது. அமைதியாக ஆக்கிரமிக்கக் கூடியது. மௌனமானது. தெரிந்தபின் மனதையும் உடலையும் உருக்கி வதைக்கக் கூடியது. என்றோ ஒருநாள் எமக்கோ அல்லது நம்மோடு அன்பினால் நெருங்கியவர்களுக்கோ வரலாம். அதுவரைக்கும் பொறுத்திருக்க வேண்டுமா?

தென்னாசியர்களும் எயிட்ஸ் வியாதியும்.

நோய்க் கிருமி ஒன்றுதான் இவ்வுலகத்தில் வாழக்கூடிய 'சமதர்ம வாதி'. அதற்கு ஏழை — பணக்காரர், இனம், மதம், மொழி, ஆண், பெண் என்ற என்ற எந்தப் பாகுபாடும் இல்லை. HIV / AIDS வியாதிகள் தென்னாசிய சமூகத்தில் மிகவும் ஆபத்தான வேகத்தில் பரவிக் கொண்டு வருகிறது. சமீபத்திய உலக சுகாதார அமைப்பின் (World Health Organization) கணிப்பின்படி 6000 இலங்கையர்களும், 1,750,000 இந்தியர்களும் எயிட்ஸ் நோயின் முன்னோடியான HIV வைரஸினால் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிக்கப்படுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் HIV வைரஸினால் பீடிக்கப்பட்ட 80,000 குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றனர். இரண்டு நிமிடத்துக்கொரு தடவை ஒரு பெண் எயிட்ஸ் வியாதிக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றாள். இவர்களில் குடும்பப் பெண்களும் அடக்கம். இந்தியாவின் எயிட்ஸ் நோயாளிகளின் மூன்றிலொரு பங்கு வாலிப வயதினராவர். ●

அபாய அறிவிப்பு

விழிப்போடிருங்கள்...!



கனடிய தமிழரிடையே இந்தளவுக்கு எயிட்ஸ் பரவியிருக்கிறதா? ஆச்சரியமாகவிருக்கிது இல்லையா? நாமும் உங்களைப் போலத்தான் நினைத்திருந்தோம். இங்கு பிரசுரிக்க முடியாத அளவுக்கு மனதைப் பிழியும் வகையான சம்பவங்கள் நிறையவிருக்கின்றன. பாதிக்கப்பட்டோர் நிறைய அப்பாவிகள். எதிர்காலத்து இனிய கனவுகளுடன், நம்பிக்கைகளுடன் கரங்களை நீட்டி வாழ்வை எதிர்நோக்கி நிற்கின்ற....
வேண்டாம். எழுதவே இதயம் கனக்கிறது.

நம்பிக்கைத் துரோகம் பொல்லாதது. அதிலும் தன்னை நம்பியிருக்கின்றவர்களின் உயிர்கள் பறிபோவதற்குக் காரணமாகின்ற துரோகம் மன்னிக்க முடியாதது. தனக்கு வியாதியிருக்கிறது என்று தெரிந்த பிறகும் நம்பி வரும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் வியாதியைக் கொடுப்பது மஹா துரோகம். வியாதி எப்போதும் வரலாம், எவருக்கும் வரலாம். அதற்கு கால, தேச, வாத்தமானங்கள் கிடையாது. எப்போதோ நடைபெற்ற அறுவைச் சிகிச்சையோ, பல் வைத்தியமோகூட இதற்குக் காரணமாகலாம். ஆதலால் எல்லோருமே ஒவ்வொரு ஆண்டும் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதும் மருத்துவரின் ஆலோசனைகளையும் புத்திமதிகளையும் கிரமமாக அனுசரிப்பதும் கடமையாக வேண்டும். அது எங்கள் ஆரோக்கியத்துக்கு மட்டுமல்ல எங்களை நம்பியிருக்கும் எல்லோரினதும் ஆரோக்கியத்துக்குமேதான். இது ஏனைய வியாதிகளைப் போல் நோயாளிகளை மட்டும் தாக்கும் ஒன்றல்ல. நோயாளியை நேசிக்கும் அத்தனை பேரையும் பாதிக்கும் கொடிய வியதி.
தயவு செய்து அக்கறையெடுங்கள். விழிப்பாயிருங்கள். தேவையான அளவுக்கு ஆலோசனைகள் கிடைக்கின்றது. விடயங்கள் எப்போதும் அனாமதேயமாகவிருக்கும். தொடர்பு கொள்ளுங்கள். நோயைப்பற்றி அறிந்து கொள்ளுங்கள். உங்களையும், உங்களை நேசிப்பவர்களையும், உங்கள் குழந்தைகளையும், உங்கள் சமூகத்தையும் காப்பாற்றுங்கள்!!!

தென்னாசிய எயிட்ஸ் தடுப்பு இணையம்

(Alliance for Sout Asian AIDS Prevention)

ASAP

கனடாவில். குறிப்பாக ரொறோன்டோவில் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வைத் தென்னாசியர்கள் மத்தியில் ஏற்படுத்தி சேவைகள் செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டதே 'தென்னாசிய எயிட்ஸ் தடுப்பு இணையம்' எனப்படும் அமைப்பு. 1988ம் ஆண்டு இந் நோயின் பிடிக்கு ஆளாகி 'மொழி'ப் பிரச்சினை காரணமாக தருணத்தில் உதவி எதுவும் பெற முடியாது மரணித்துப் போன தமிழர் ஒருவரின் துயரச் சம்பவத்தின் மீது உருவான இவ்வமைப்பு பல வழிகளிலும் தன்னாலான முயற்சிகளில் பங்கெடுத்து வருகிறது. இவர்களின் உதவி தேவையானவர்கள் ASAP, (416) 599 2727 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
இவர்களது காரியாலயம் அமைந்திருக்கும் விலாசம்

The Maple Building
20 Carlton St.
Suite 126, Floor 'M'
Toronto, Ontario
M5B 2H5
Tel: (416) 599 2727
Fax: (416) 599 6011
Internet: http://members.aol.com/asapcanada
Email: asap Canada@aol.com

உங்கள் கவனத்திற்கு!!

இதில் தரப்பட்ட தகவல்கள் (சிறுகதை தவிர) ASAP அமைப்பிடமிருந்து பெறப்பட்டவை. மருத்துவ சம்பந்தமான விடயங்கள் குறித்து உங்கள் குடும்ப வைத்தியரிடம் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

விழிப்புணர்வூட்டுவதற்காக இவ்வளவு பாரதூரமாதொரு விடயத்தைப் பற்றிய பலவிடயங்களையும் அறிய தந்துதவிய ASAP அமைப்பிற்கு எம் நன்றிகள்.

ஆ—ர்

அலை தேன்

சிவதாசன்

செவ்வாய்க் கொற்றம்

ஜூலை 4, 1997.

சரியாக 1:07:25 பி.ப.

உலகம், குறிப்பாக அமெரிக்கா, குதூகலத்தில் மூழ்குகிறது. *Pathfinder* எனப்படும் விண்கலம் செவ்வாய்க் கிரகத்தின் மண்ணில் தரையிறங்குகிறது. 21 வருடங்களின் பின்னர் 500 மில்லியன் கிலோ மீட்டர் பயணத்தை முடித்து செம்மண்ணில் தடம் பதித்திருக்கும் *Pathfinder* விண்வெளி ஆராய்ச்சியில் இன்னுமொரு மைல்கல்லைப் பதித்துக் கொள்கிறது.



சுமார் இருபத்தைந்து வருடங்கள். பல தோல்விகள். பல சோதனைகள். இருந்தும் தம் தளராத முயற்சியின் பலனை இப்போது அறுவடை செய்திருக்கிறது நாசா. இந்த இருபத்தைந்து வருடங்களில் எடுத்த இருபது முயற்சிகளில் அரைவாசிக்கும் குறைவான பயணங்களே பயனுள்ளனவாக அமைந்திருந்தன. இதனால் இந்தத்தடவை பயணத்தைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாமலிருந்தது நாசா. Pathfinder எதிர்பார்த்த இடத்திலிருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் தரையிறங்கி பி.ப. 7:30 க்கு தனது முதலாவது படங்களை பூமிக்க அனுப்பியதும் நாசாவின் விண்பயணக் கட்டுப்பாட்டு முகவர் பிறையன் மியூர்ஹெட் மகிழ்ச்சியின் உச்சத்தில் கூறினார் " விண்வெளி மனிதர்களாகிய எங்களுக்கு இது முக்தி நிலை .(This is nirvana for us space guys).

விண் வெளி ஆராய்ச்சியில் Pathfinder பல சாதனைகளையும் புரிந்திருக்கிறது. வழமையாக விண்கலங்கள் கோளைச் சுற்றி பல தடவைகள் பயணம் செய்த பின்னரே குறிப்பிட்ட இடத்தில் தரையிறங்கும். ஆனால் இந்த விண்கலம் நேரடியாகவே தரையிறங்கியது. மணித்தியாலத்திற்கு 25,000 கிலோ மீட்டர் வேகத்தில் தரையிறங்கிய கலத்தை பாதுகாப்பாக இறக்குவதற்கு பாரசூட் ஒன்றை வெற்றிகரமாகப் பாவித்திருக்கிறார்கள் இந்தத் தடவை. தரையிறங்கும் போது மோதி உடைந்து போகாமலிருக்க கார்களில் பாவிப்பது போன்று வளிப் பைகளைப் (air bags) பாவித்திருப்பதும் இதுவே முதல் தடவை.

Sojourner எனப் பெயர் கொண்ட ஆறு சக்கர வாகனம் ஒன்றும் இவ் விண்கலத்தில் பயணஞ் செய்தது. றேடியோ சமிக்ஞையினால் நகர்த்தக்கூடிய இவ்வாகனம் செவ்வாய்க் கிரகத்தின் பல்வேறுபட்ட தரைகளிலும் ஊர்ந்து செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப் பட்டது. தன்னுடைய உருவத்திற்கும் பெரிதான பாறைகளைக் கண்டால் தானாகவே விலத்திச் செல்லும் ஆற்றல் கொண்டது. இவ் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள 3-D கமெரா தொடர்ந்தும் படங்களை எடுத்துப் பூமிக்கு அனுப்புமென்று

தேன் அகை

சிவதாசன்

எதிர்பார்க்கப்படுகிறது. இச் சிவப்புக் கிரகத்தின் தரையமைப்பு பற்றியும் அதில் உயிர்வாழ்தலுக்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றதா என்று அறிவதுதான் இப் பயணத்தின் நோக்கம் என நாசா விஞ்ஞானிகள் தெரிவிக்கிறார்கள். பூமியின் அன்ரார்ட்டிக் பிரதேசத்தில் சமீப காலங்களில் கண்டெடுக்கப்பட்ட எரிகற்களை (meteorites) ஆராய்ந்தபோது பிற கிரகங்களில் உயிர்வாழ்தலுக்கான ஆதாரங்கள் இருக்கின்றதாக அனுமானிக்கப்பட்டது. நமது சூரியக் குடும்பத்திலுள்ள கிரகங்களில் செவ்வாய்க் கிரகமே உயிர்வாழ்தலுக்கான சுவாத்திய நிலைகளைக் கொண்டிருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதியபடியால் மேற்படி ஆராய்ச்சியில் நாசா கூடிய கவனமெடுத்தது. ஆனாலும் pathfinder விண்கலத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட Viking பயணங்கள் செவ்வாய்க் கிரகத்தில் உயிர்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் எதையும் தரவில்லை. இந்தத் தடவை Sojourner ஆய்வூர்தி மூலம் தேர்ந்தெடுத்த மண் மாதிரிகளைக் கொண்டு கவனமாக ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று நாசா சொல்கிறது. அங்கிருந்து பெறப்படும் கற்துண்டுகளில் எவ்வகையான கனிப்பொருள் வளங்கள் இருக்கலாம். அவற்றில் உடற்பதிவுகள் (Fossils) இருக்கின்றனவா என்பது போன்ற ஆய்வுகளை மேற்கொள்ள இப்பயணம் வழிசெய்யும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் நாசா தெரிவிக்கிறது.

செவ்வாயில் மனிதக் கொற்றம் (ஆட்சி) நிலவ வெகு காலம் செல்லாது போலிருக்கிறது.

சொர்க்கமும் நரகமும்

மனித குலத்தை ஆள்கின்ற இயற்கை விதிகள் இரண்டே இரண்டு. முதலாவது சொர்க்கத்தை ஆள்கின்றது. அது குற்றமற்ற முழுமையான இசைவு கொண்டது. இரண்டாவது நரகத்தை ஆள்வது. உலகிலுள்ள இறப்பன யாவற்றையும் ஆளுகின்ற இழி வகையினது.'

இது 1600களில் மேற்குலகின் புத்திமான்களும், தேவாலய பிரதிநிதிகளும் சொன்னது. ஆனால் இதே காலத்தில் வாழ்ந்த ஐசாக் நியூட்டனோ இயற்கையையும் விதிகளையும் பற்றி வேறொரு வகையில் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தார். தேவாலய விதிகளை மீறி இயற்கையையும் கடவுளையும் விமர்சிக்கின்ற எவரும் தண்டிக்கப்படுவர் என்ற உண்மையும் இவருக்குத் தெரிந்திருந்தது.

பூமி சூரியனைச் சுற்றி வருகிறது' என்று சொன்னாலே தேவாலயம் அவருக்கு மரண தண்டனை விதித்து விடும். "சூரியன் இன்னுமொரு நட்சத்திரமே. இது போல் ஏராளமான சூரியர்களைச் சுற்றி எண்ணிலடங்காத பூமிகள் சதா சுற்றிக் கொண்டிருக்கின்றன' என்று சொல்லியதற்காக ஜியோர்டானோ புறூணோ என்பவர் ரோமாபுரியில் தேவாலயத்தினால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டார். இவர் நியூட்டன் காலத்தவர். சிலல வருடங்களின் பின்னர் கலிலியோ கலிலி என்ற பௌதீகவாதி இதே சூரிய—பூமிக் கதையை அரட்டப் போய் தேவாலயத்தின் கரங்களின் மரணப் பிடியை நினைத்ததும் தனது கண்டுபிடிப்பு பொய் என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார். (இருப்பினும் நீதிமன்ற வழக்கின்போது தான் பொய் சொன்னதாக ஒத்துக் கொண்டபோதுங்கூட 'பூமி உண்மையிலேயே சூரியனைச் சுற்றுகிறது' என்று தனக்குத்தானே குசு குசுத்துக் கொண்டு வெளியே வந்தாராம் கலிலியோ)

இப்படியான சூழ்நிலைகளிலும் விஞ்ஞானம் துணிச்சலான பாய்ச்சல்களை மேற்கொண்டு வந்திருக்கிறது. நியூட்டன் ஆங்கிலேயராகவிருந்ததாலும் ரோமாபுரியில் வாழவேண்டிய தேவை ஏற்படாததாலும் அவரது கண்டு பிடிப்புகளுக்கு அதிக குந்தகம் நேரவில்லை. இருப்பினும் விஞ்ஞானிகள் மீது தேவாலயங்களுக்கிருந்த காழ்ப்புணர்வு எத்தகைய கண்டுபிடிப்புகளையும் உலகம் ஏற்றுக் கொள்வதில் சிரமங்களைக் கொடுத்தது. இப்படியான சிரமங்களின் மத்தியிலும் நியூட்டன் 23வது வயதில் தனது முதலாவது விதியை நிறுவிக் கொண்டார்.

சந்திரன் பூமியை நோக்கி விழாமல் இருப்பதற்கு புவியீர்ப்பு விசைதான் காரணம் என்ற நியூட்டனுக்கும் கடவுளே காரணம் என்ற தேவாலயத்திற்கும் நடந்த 'விசைப் போரில்' இறுதியாக வெற்றி பெற்ற நியூட்டனே இன்று செவ்வாய்க் கிரகத்தில் விண்கலம் தரையிறங்கக் காரணம்.

தேன் ஓசை

போ கலாப மயிலே!

செவ்வாய்க் குற்றம் உள்ளவர்களுக்கு மணப் பொருத்தம் பார்ப்பது மிகவும் கஷ்டமான காரியம். சமீபத்தில் ரொறோன்டோவில் நடைபெற்ற 'கலாபம்' கலா நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கும் ரசிகர்களுக்கும் மனப் பொருத்தம் நன்றாக அமையவில்லை. யாரின் சாதகத்தில் 'எந்த வீட்டில்' செவ்வாய் இருக்கிறதோ தெரியாது. அல்லது வெவ்வேறு நீசக்கிரகங்களின் பார்வை பல கோணங்களிலிருந்தும் விழுந்திருக்குமோ தெரியாது. நிகழ்ச்சி முதல்நாள் குழம்பிப் போய்விட்டது.

பலரும் பலவிதமாக விமர்சித்தார்கள். குழப்பத்திற்குக் காரணம் 'வாலிப உள்ளங்கள்' என்கிறார்கள் சிலர். அமைப்பாளர் முறையாக ஒழுங்குகளைச் செய்யத் தவறிவிட்டார்கள் என்கிறார்கள். வேண்டுமென்றே சில 'நண்பர்கள் அன்புத் தொல்லை கொடுத்து' நிறுத்தி வைத்தார்கள் என்கிறார்கள் சிலர். எது எப்படியிருப்பினும் பொருத்தம் பார்க்காது இந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது என்பதுதான் இங்கு எழக்கூடிய நியாயமான குறை.

மண்டபம் சுமார் எண்ணூறு தொடக்கம் ஆயிரத்து இருநூறு பேர்களைக் கொள்ளக்கூடியது என்பது பலரது கணிப்பு. நுழைவுச் சீட்டுகள் அதற்கு மேலாகவும், முன்கூட்டியும் விற்கப்பட்டது என்பது இன்னுமோர் அவதானம். தொண்டர்கள் பலர் கதவுக் காவல்களுக்கு நியமிக்கப் பட்டிருந்தும் 'கன்னத்தின் மீது கன்னம் வைத்து' கன்னர்கள் உள்ளே புகுந்து விட்டதாகவும் தகவல். (கன்னத்தின் மீது கன்னம் வைத்ததால் கள்வர்கள் இவர்கள் என்று எண்ணி விடாதீர). பாட்டுக்குப் பாட்டு பாப்பதற்கு ஆவலோடு வந்திருந்த பெரியோர்களும் தத்தமது உறவினங்களுக்காகவும் நட்பினங்களுக்காகவும் 'சீட்' டுக்குச் 'சீட்' பிடித்து குடைகளையும் கைப்பைகளையும் நிகழ்ச்சி பார்க்க அழைத்து வந்திருந்தமை மக்களை அல்லோல கல்லோலப் படுத்தியிருக்கலாம் என்பது வேறு.

என்னவோ ஒரு நாள் நிகழ்ச்சி குழம்பி விட்டது. பாதிக்கப் பட்டவர்கள் மக்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர், நிகழ்ச்சிகளை வழங்க வந்த கலைஞர்கள். நடந்துபோன சம்பவங்களினால் நாறிப்போன தமிழர் சமூகம்.

இந்நிகழ்வைத் தடுத்திருக்க முடியுமா? 'ஆம் நிச்சயமாக.' என்று பலரும் சொல்லிக் கொள்ளலாம். இல்லை அது தற்போதைக்கு சாத்தியமில்லை. எங்கள் சமூகம் அதற்காக இன்னும் தயாராகவில்லை. நாகரீகத்தின் பின்னோக்கிய கூர்ப்பில் முதன்மையில் நிற்கும் சமூகம் நாம். யாழ்ப்பாணத்தில் , மட்டக்களப்பில், திருகோணமலையில், கொழும்பில், கண்டியில் நிகழ்ச்சிகள் நடைபெற்றதில்லையா?. இப்படியான குழப்பங்கள் அங்கே இருந்தனவா?. இல்லையெனில் குழப்பம் எங்கிருக்கிறது?

"நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தவர்களில் பெரும் பங்கு பிழை இருக்கிறது. இவ்வளவு செலவு செய்து மக்களுக்கு தரமான நிகழ்ச்சியொன்றைத் தரவேண்டுமென்ற உண்மையான நோக்கத்தில் யாருமே சந்தேகப்பட முடியாது. ஆனால் இந்த நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை வாலிப வயதினருக்காகத் தயாரிக்கப்பட்டவை என்று தெரிந்திருந்தும் இவர்களுக்காக மண்டப பாதுகாப்பு ஒழுங்குகள் செய்திருந்தது போன்ற உணர்வு இருக்கவில்லை. நுழைவுச் சீட்டுகள் வாசலில் விற்கப்பட்டிருந்தால் மண்டபம் நிரம்பியதும் மீதியானோரைத் திருப்பியனுப்பியிருக்கலாம் அல்லது இன்னொரு நாள் நிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்திருக்கலாம். நிகழ்ச்சித் தயாரிப்பில் எடுக்கின்ற கவனத்தைப் போலவே மண்டப ஒழுங்கு, நிர்வாகம் போன்றவற்றிலும் கவனமெடுக்கப் பட்டிருக்க வேண்டும். நுழைவுச் சீட்டில் பாதி பிடித்து வைக்கப்பட்டிருந்தால் யார் யார் 'இலவசங்கள்' என்று அறிய வாய்ப்பைத் தந்திருக்கும்."

இப்படியெல்லாம் வந்தவர்கள் வராதவர்கள் என்று பலர் விமர்சித்தார்கள். நிச்சயமாகக் கவனத்திலெடுக்கப்பட வேண்டியவை நிறையவிருக்கின்றன. இருப்பினும் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த 'கலாபம்' குழுவினர் தங்களாலானவரைக்கும் முயற்சி செய்தார்கள். தோற்றுப் போனார்கள். 'இன்று போய் நாளை வருவோம்' என்றார்கள். மீண்டும் வந்தார்கள். வெற்றிகரமாக முடித்தார்கள். அந்த வரைக்கும் ரசிகர்களுக்கு வெற்றி.

என்ன இருந்தாலும் இங்கு தோற்றுப் போனது சாட்சாத் நமது சமூகம் தான். ஏனைய சமூகத்தின் மத்தியில் பகிரங்கமாக வைத்து சேலை உரியப்பட்டுக் கொண்டிருக்கின்ற சமூகமாக எங்கள் சமூகம் மாறிக் கொண்டிருக்கிறது. மிகவும் வேதனையான விடயம். 'இது எங்களுடைய நிகழ்ச்சி', 'எங்களுக்காக எங்களுடைய சிலர் ஒழுங்கு செய்யும் நிகழ்ச்சி' 'இதில் எங்கள் மானம் தானே போகிறது' என்று எத்தனை பேர் நினைத்தார்கள்? எங்கள் சமூகத்தையே பிற சமூகங்களிடம் அடகு வைக்கின்றவர்கள் எத்தனைபேர்?

மறுமொழி.........?

........எம்மிடமில்லை!

இன்னுமொரு முறை சிரிப்பான்!

'இளைய நிலா' வின் பின்னால் கிரகணமாக இருந்து கொண்டிருந்த நிலாவெளி குகதாசன் சொர்க்கத்திற்குச் சென்றுவிட்டார். முழத்துக்கு முழம் முகாம்கள் அமைத்துக் கொண்டிருக்கும் கனடிய தமிழிலக்கிய உலகில் எல்லா

முகாம்களுக்கும் சென்று 'இன்னும்' சிரித்துக் கொண்டே வெளியே வரும் ஒரே ஒரு இலக்கியவாதி இந்த 'இன்ப நிலா'. 'சுகவீனம், ஆனால் விரைவில் சுகமாகி வெளியே வருவார்' என்று தான் சொன்னார்கள். 'இன்னொரு நாளில் உயிர்ப்பேன்' என்று கவிதையில் சேதி சொன்னது காதில் விழவில்லை.

பிரிவு துயரமானது. மீளாத பிரிவுக்காய் தயார் செய்து கொள்ள வேண்டி வரும்போது உள்ளம் படும் பாடு உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது. இளம் மனைவி, இனிய மகள். அபலைகளாக விட்டுப் போகிறேன் என்ற நினைப்போடு சில நாட்கள் கழித்திருப்பார். கொடிய நாட்கள்.

இலக்கியத்தில் இவரது பக்கங்கள் இனிமையானவை. வயல் வரப்புகள் ஆறு நீர் நிலை ஏரி என்று எல்லா இடங்களுக்கும் வாசகர்களை அழைத்துச் சென்றவர். நாட்டைப் பிரிந்த துயரங்களை தன் கவிதை யாழில் நரம்புகளாக்கி இளைய சந்ததியினருக்கு விட்டுச் சென்றவர். 'இளைய நிலா' என்னும் வீடியோ சஞ்சிகையை முதன் முதலாக கனடிய தமிழருக்கு அறிமுகமாக்கி எங்கள் வாழ்வுகளைச் சிறைப்பிடித்து விட்டுப்போனவர்.

எல்லாவற்றையும் விட்டு விட்டு அந்த இனிமையான சிரிப்பை மட்டும் தன்னுடன் கொண்டுபோய் விட்டார். ஏதோ, 'இன்னுமொருமுறை சிரிப்பார்' என்ற நம்பிக்கையோடு, முகாமுக்குத் திரும்புவோம். வேறு வழியென்ன?

தங்கத்துரை கொலை

தமிழர் கூட்டணியைச் சேர்ந்த தங்கத்துரை கொலைசெய்யப்பட்டுள்ளார். பலரும் பலரையும் சுட்டிக்காட்டுகிறார்கள். இருப்பினும் தங்கத்துரை தனிப்பட்ட காரணங்களுக்காக அல்லாமல் அரசியல் காரணங்களுக்காவே கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று எல்லோருமே அனுமானம் செய்கிறார்கள்.

இது அரசியல் கொலையானால் அது தேவைதானா ? இதனால் பயனடைகிறவர்கள் யார்?. கூட்டணியையோ அல்லது பேச்சுவார்த்தை நடத்துகின்ற இதரகட்சிகளையோ அச்சுறுத்துவது தான் காரணம் என்றால் அமிர்தரின், யோகேஸின் கொலைகள் இவற்றைச் சாதித்தனவா?. அப்படியானால் காலங்காலமாக நடைபெற்றுவரும் இனக்கலவரங்களின்போது நடைபெற்ற தமிழர் கொலைகளும் 'அச்சுறுத்தலுக்காகவே' நடைபெற்றனவா? இன்று தமிழர் வாழிடங்களின்மீது பொழியப்படும் 'ஷெல்' மழைகளும் வெறும 'அச்சுறுத்தலுக்காக' நடைபெறுகின்றனவா? தங்கத்துரையின் கொலையை 'அச்சுறுத்தலுக்காக' வென்று யாராவது நியாயப்படுத்தினால் நமது போராட்டம் நியாயமற்றதாகிவிடும். மாறாக தங்கத்துரையினால் விடுதலைப் போராட்டத்துக்கு இழுக்கு என்றால் அவர் ஒரு பலம் வாய்ந்த தனி மனித இயக்கமாக இருக்க வேண்டும். அதுவுமில்லாதபோது இது ஒரு நியாயமற்ற கொலை. தமிழர் விடுதலைக்காக இக் கொலைகள் நடைபெற்றிருப்பின் அப்படியான விடுதலை மனச்சாட்சியுள்ள தமிழருக்குத் தேவைதானா?

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்ட அப்பாவித் தமிழரின் உயிர்கள்? போராட்டத்தில் இது சகஜம் என்று கருதப்பட்டடால் வன்னியில் வாடுகின்ற அப்பாவி மக்களின் துன்பங்களும் 'சகஜம்' என்றே கொள்ளவேண்டும்.

முடியுமா?

இந்த இடத்தில் செழியனுடைய 'துப்பாக்கிகளைப் பற்றி' என்ற கவிதையிலிருந்து சில வரிகள்....

'..... அதிகமாக இந்த மனிதன்
என்ன செய்திருக்க முடியும்?
ஜனநாயகத்தைப் பற்றி
அதிகம் பேசியவனாய் இருக்கலாம்
அதிர்ஷ்டம் கெட்டவன்
ஏதாவது
கொலை கொள்ளையைப் பார்த்துத்
தொலைத்திருக்கலாம்
அல்லுதம் போனால்
எதற்காகவேனும் நியாயம் கேட்டிருப்பான்'

இலக்கியம்

இலக்கியத்தைப் பற்றி விஸ்தரிக்கலாம், விவாதிக்க முடியாது, சூத்திரத்தால் விளங்கப்படுத்த முடியாது. தர்க்கத்துக்கு இடங்கியதல்ல. சிருஷ்டி வகையே அப்படித்தான். தர்க்கத்தின் வழியாக இலக்கியத்தைப் பார்க்க முடியாது. இலக்கியம் சிருஷ்டியின் மேதையுடன் எதிரெதிரான விடயங்களை உள்ளடக்கியிருக்கலாம். தர்க்கம் ஒரு படிக்கட்டு வழியாக, ஒரு பரிசோதனை வழியாக விடயங்களை நோக்க முயலுகிறது. அதர்க்கு ஒன்று சரியென்று பட்டுவிட்டால் மற்றவை இருக்க நியாயமில்லை: இருக்காது என்ற கொள்கை, ஆனால் இந்த வாழ்க்கை அவ்வளவு லேசான கட்டுக்கோப்பில் சிருட்டிக்கப்படவில்லை. தர்க்கத்தின் பிரியமான அந்தரங்கமான கொள்கைகளைச் சிதறடிக்கும்படி வாழ்க்கை இருந்து வருகிறது. அதே மாதிரித்தான் இலக்கியமும். வாழ்க்கை தான் இலக்கியம்.

நன்றி: காலச்சுவடு

டிஜிட்டல்

பாலசுந்தரன்


தொலைத் தொடர்பு மனிதனுக்கு மிக அவசியமான காரணிகளில் ஒன்று. இத்துறை இன்று பாரிய மாற்றங்களுக்குள்ளாகியுள்ளது. தூதுவன் ஓலை மூலம் செய்தியைக் கொண்டு சென்றதை இன்றைய டிஜிட்டலுடன் ஒப்பிட முடியாது எனினும் அவை அடிப்படையில் ஒன்றே.


டிஜிட்டல் தொலைத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தியோர் அதன் துல்லியத்தைப் புரிவர். மிக மிகத் துல்லியம். ஆயிரம் ஆயிரம் மைல்கட்கும் அப்பாலும் துல்லியம். டிஜிட்டலுக்கு முன்னைய அனலொக் (analog) துல்லியம் இல்லை.

அனலொக் வகையில் (உதாரணமாக) ஒலி அலை மின்னலையாக மாற்றப்படும். இதற்காக ஒரு உருமாற்றி (transducer) பாவிக்கப்படும். இந்த உருமாற்றி மின்னலையை ஒலியலையாகவும், ஒலியலையை மின்னலையாகவும் மாற்றக்கூடியது. முன்னயதை 'ஸ்பீக்கர்' எனவும் பின்னயதை 'மைக்கிராபோன்' எனவும் உதாரணம் கொள்ளலாம்.

இந்த மின்னலைகள் பின்னர் 'காவி அலைகள்' எனப்படும் (Carrier Frequency) மூலம் தூர இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வாறு தூர இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்போது இவ்வலைகள் தம் சக்தியை இழக்கின்றன. இதற்குப் பரிகாரமாக மீள் பரிவர்த்தனை நிலையங்கள் (Re-transmitters) வழியெங்கும் பாவிக்கப்படும். சக்தியிழந்த மின்னலைகளுக்குப் புத்துயிர் கொடுப்பதே இந்த Re-transmitters இன் வேலை. என்ன இருந்தாலும் சிதைவுற்ற அலைகளை 100 வீதம் திரும்பப் பெறமுடியாது. இலங்கையில் கொக்காவிலுள்ளது ஒரு (Re-transmitters) ஆகும். (Re- transmitters) களிடம் ஒரு நியம அலை இல்லாமையே இந்தக் குறைபாட்டுக்குக் காரணம்.

டிஜிட்டல் பரிமாற்ற முறையில் மேற்படி குறைபாடுகள் பாரிய அளவில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் 100 வீத திருத்தம் என்று சொல்வதற்கில்லை. இங்கும் நியமிக்கப்பட்ட அளவு வழுவல் (error) உண்டு.





(2)

டிஜிட்டல் தகவல் பரிமாற்ற முறையில் முதலில் செய்தி அலை PCM இற்கு உட்படுத்தப்படும். இங்கு அலையானது பல நிலைக்குத்துத் துண்டங்களாக (samples) பிரிக்கப்படும். பின்னர் இந்த நிலைக்குத்துத் துண்டங்கள் பல மட்டங்களாக (levels) பிரிக்கப்படும். அவ்வாறான மட்டங்கள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடலாம்.



(3)

இங்கு அலையின் ஒரு சிறிய பகுதி '7' இனூடு செல்கிறது. எனவே '7' ஏனைய இலக்கங்களை விட வேறுபட்டது. இதற்கு பெறுமதியாக '1' கொடுக்கப்படும். நிலைக்குத்துத் துண்டத்தின் ஏனைய பிரிவுகளை அலை ஊடுருவிச் செல்லாத படியால் அவற்றின் பெறுமதி '0' ஆகக் கருதப்படும். இப்பொழுது அனலொக் அலையின் ஒரு துண்டு டிஜிட்டலாக்கப்பட்டு விட்டது. (படம் 11) இந்த டிஜிட்டலாக்கப்பட்ட 'அலை' நீண்ட தூரத்துக்கு பரிமாறப்படும்போது சிறிது சிதைவடையலாம்

ஆனாலும் (Re- transmitters) எனப்படும் புனருத்தாரணக் கருவி 1,2,3,4,5,6,8 களை '0' என்று உணரும் அதே வேளை '7' ஐ மட்டும் '1' என உணரும். பின்னர் இக்கருவியிலிருக்கும் அலை சுத்திகரிக்கும் பகுதி இந்த '1' ஐ மீள் வடிவாக்கி பரிமாற்றத்தைத் தொடரும்.

மேற்குறிப்பிட்ட 'அலையைத் துண்டாடும்' பணியைச் செய்யும் கருவியை 'Analog to Digital Converter' என்று அழைப்பர். எவ்வளவு மெல்லிதாக மட்டங்கள் (levels) துண்டாடப்படுகிறதோ அவ்வளவுக்கு வழுவல் குறைந்து துல்லியமாக அலையைப் பெறமுடியும். அசல் அலைக்கும் நகல் அலைக்குமுள்ள வித்தியாசம் இந்த நடைமுறையினாலேயே தீர்மானிக்கப் படுகிறது. எவ்வளவுக்கு துல்லியமாக மீளுருவாக்கல் தேவைப்படுகிறதோ அவ்வளவுக்கு செலவும் அதிகரிக்கும்.



(4)

பொதுவாக 256 மட்டங்கள் (levels) பாவிக்கப்படும். இது 2^8 ஆகும். அதாவது 8 தானங்களை (digits) கொண்ட அடி — இரண்டு முறையை (base 2) பயன்படுத்தும். பொதுவாக 256 மட்டங்களும் ஒரே உயரத்தைக் கொண்டிருக்க மாட்டாது. அதியுயர் (உச்சி) பகுதிகளிலும் அதி தாழ் (தாழி) பகுதிகளிலும் மட்டங்களுக்கு இடையிலான வெளி விசாலமானதும் மத்திய பகுதியில் நெருக்கமாகவும் இருக்கும்.



மனமேடை

எந்த பிரச்சினை களையும் தமக்குள் தாமே வைத்துக் கொண்டு அமுங்கிக் கொள்வோர் எவரையுமே நம்பாதவர் என்பர் மனோதத்துவ நிபுணர். இவர்கள் நாளடைவில் ஆரோக்கியத்தை இழந்து, நண்பர்கள் உறவினரை இழந்து மன நோயாளிகளாகி விடவும் நேரிடுகிறது. இப் பிரச்சினைகளை எவரோடும் பகிர்ந்து கொள்ளும்போது மனச்சுமை தளர்வதோடு மட்டுமல்ல அப்பிரச்சினைகளுக்கான பல வகையான தீர்வுகளும் அங்கு பரிந்துரைக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரிக்கின்றன.

புலம் பெயர்ந்த மக்களில் பலர், குறிப்பாக முதியோர், இந்தமாதிரியான மனச்சங்கடங்களுக்கு ஆளாகின்றர்கள். இவர்களது பிரச்சினைகளுக்கு நல்ல வடிகால் அமைத்துக் கொடுக்காதவரை பல்முகப்பட்ட அழுத்தங்களுக்கும் இவர்கள் இரையாகப் போய் விடுவார்கள். கனடாவில் எமது மக்களைக் கொல்கின்ற இரண்டு பிரதான நோய்கள் இருதய வியாதியும் புற்று நோயும் என்று மருத்துவர்கள் சொல்வார்கள். நோயாளிகளை மகிழ்வாக வைத்திருப்பதன் மூலம் மேற்கூறியது போன்ற வியாதிகளைக் குணப்படுத்த முடியும் என்று பல மருத்துவர்கள் நம்புகிறார்கள். மனச்சுமைகள் தளர்த்தப்பட்டு மகிழ்வாக இருக்கும்போது உடலின் நிர்ப்பீடன ஆற்றல் அதிகரிப்பதாக மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

மனமேடை' என்று இங்கு ஆரம்பமாகும் பகுதி வாசகர்களின் மனவுறுத்தல்களைப் பகிர்ந்து கொள்ளும் மேடையாகவும் அதேவேளை வாசகர்களின் மனவுறுத்தல்களுக்கு இதர வாசகர்களின் ஆலோசனைகளையும் தீர்வுகளையும் முன்வைக்கும் களமாகவும் பயன்பட வேண்டும் என்பதே நோக்கம்.

உங்களுக்கோ அல்லது உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கோ மனங்களை உறுத்துகின்ற ஆனால் பிறருடன் பகிர்ந்து கொண்டு ஆறுதல் பெறமுடியாத பிரச்சினைகள் இருக்கலாம். உண்மையான பெயர்களைக் குறிப்பிடாமல் அம்பலம் தந்து இப்பிரச்சினைகளுக்கு மறுமொழி காண 'மறுமொழி' விழையும். எதையும் எழுதுங்கள். ஆனால் பிறரை ஏளனம் செய்யும் மறை நோக்குடன் எழுதாதீர்கள்.

ஒரு வாசகரின் கடிதம் இந்த இதழில் 'மனமேடை'யை ஆரம்பித்து வைக்கிறது.

கனடாவில் குடும்பங்களில் பெண்களைக் கணவர்கள் தாக்குவது பற்றி அடிக்கடி பத்திரிகைகளில் வருகிறது. இவற்றுக்கெல்லாம் ஆண்கள் தான் காரணம் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. இது எந்தளவுக்கு உண்மை?. எனது கதையைக் கேளுங்கள்.

எனக்கு வயது முப்பத்தியாறு. மணம் முடித்து இரண்டு குழந்தைகள். மனைவியுடனும் அவளது பெற்றோருடனும் ஒரு வீட்டிலிருக்கிறேன். வீடு சொந்தமானது. இரண்டாவது பிள்ளை பிறந்ததிலிருந்து மனைவி வேலைக்குப் போவதில்லை. இதனால் நான் இரண்டு வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமிருக்கிறது.

எனது பிரச்சினை என்னவென்றால் எனக்கும் மனைவிக்கும் அடிக்கடி சண்டை வருகிறது. நான் வீட்டிற்கு எத்தனை மணிக்கு வந்தாலும் மனைவி ஏதோ காரணத்தை வைத்துக் கொண்டு எரிந்து விழுகிறாள். எனக்கோ இரண்டு வேலைகளினாலும் ஏற்பட்ட களைப்பு. ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது. நான் கடுமையாக ஏதும் சொல்லி விட்டால் அவளும் உச்சி கிழியக் கத்தவாரம்பிக்கிறாள். ஒரு தடவை அடித்தும் போட்டேன். அவள் பொலிஸை அழைத்து மானத்தை வாங்கி விட்டாள். இப்போது என் கைகள் இறுகக் கட்டப்பட்டது மாதிரி. என்னால் எதையுமே கதைக்க முடியவில்லை. கொஞ்சம் சத்தமாகக் கதைத்தால்கூட 'பொலிஸைக் கூப்பிடுவேன் என்கிறாள். எனக்கும் இரண்டு பிள்ளைகளுக்கும் 'வெல்பெயர்' நிறைய வரும் நாங்கள் தனியவிருந்து சீவிப்பம்' என்றவாறு கதைக்கிறாள். சில வேளைகளில் விடிய வேலைக்குப் போகும் போது திரும்பி வராமலே விடுவோமா என்று யோசிப்பேன். பிள்ளைகளின் முகங்கள் கண்ணுக்குள் நிற்கும் போது என்னால் எதுவுமே செய்ய முடிவதில்லை. எங்கள் பிரச்சினைக்கு அவளின் பெற்றோர்களும் ஒரு காரணம் என்று நினைக்கிறேன். அவளுக்காகவே பெற்றோர்களைக் கூப்பிட்டேன். இதனால் என் பெற்றோர்களைக் கூப்பிட முடியாமல் இருக்கிறது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமலிருக்கிறது.

ஆண்களும் ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்களே. என்னைப் போன்ற பலர் இருக்கலாம். சட்டம் ஏன் ஒரு சாராருக்கு மட்டுமே உதவி செய்கிறது?

நன்றி.

குமரன்.

மேற்கூறிய பிரச்சினைக்கு சார்பானதும் எதிரானதுமான பல கருத்துகள் இருக்கலாம். வாசகர்களது அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. உண்மையான பெயர்கள் குறிப்பிடப்பட வேண்டுமென்று அவசியமில்லை.

ஆ—ர்

சஞ்சிகையின் பெயர் 'மறுமொழி' யென்றதும் பக்கம் பக்கமாகக் கேள்விகளை நிரப்பி விடுவதாக எண்ண வேண்டாம். வீடு வாங்குவது பற்றிய 'நேர்மையான' பார்வையை கேள்வி — பதில் மூலம் விளக்கமாக முன்வைக்கலாமே என்று ஒரு ஆலோசனை கிடைத்தது அவ்வளவுதான்.

வீடு வாங்குவது பற்றி எழும் பல கேள்விகள்!

பொதுவாக உலக அனுபவத்தை அதிகம் பெற்று 'பிஞ்சில் பழுப்பவர்கள்' டாக்சி ஓட்டுபவர்கள்தான். இவர்களுக்குத் தெரியாத விஷயமும் தெரியாத ஆட்களும் தெரியாத இடங்களும் இருப்பது குறைவு. டாக்சிக் காரர்களுக்கு அடுத்த படியாக இப்படியான அனுபவங்களைப் பெற்றவர்கள் 'றியல் எஸ்டேட் காரர்' என வெறுப்போடு அழைக்கப்படும் 'வீட்டுத் தரகர்கள்'. பல அனுபவப்பட்ட 'ஏஜன்ட்' டுகளிடம் கதைத்தால் தெரியும் காரில் ஒரு காலும் காசியில் இன்னொரு காலுமாக நிற்பார்கள். எப்போதடா இந்தத் தொழிலை விட்டு ஒதுங்கி விடலாமென்று அங்கலாய்ப்பவர்கள் இவர்கள். இருந்தாலும் வருவாயை நினைத்ததும் மனம் மாறிவிடும்!.

இவர்களிடமும் நிறைய 'கதைகள்' இருக்கின்றன. அதேவேளை 'வீடு வாங்கி' வங்கியிடம் 'முக்தி'யடைந்து நிர்வாண நிலையெய்திய பெருமக்களிடமும் நிறையக் கதைகள் இருக்கின்றன. இவ்விரண்டு சாராரிடமிருந்தும் பொதுவாக எழுகின்ற கேள்விகளைத் தொகுத்துப்பார்த்தோம். விளைவுகள் கீழே


வீடு வாங்கப் புறப்படும் ஒருவர் வழக்கமாக கேட்கும் கேள்விகள் என்ன?

ஒவ்வொரு ஏஜன்டும் பல வீடுகளைக் கையில் வைத்துக்கொண்டு விற்பதற்கு அலைகிறார்கள் என்ற அபிப்பிராயம் பலருக்கு உண்டு. 'அண்ண உங்களிட்ட இரண்டு லட்சம் டொலர் விலையில வீடு ஏதும் இருக்குதோ?' என்பது போன்ற கேள்விகள் அடிக்கடி கேட்கப்படுபவை.

பொதுவாக MLS (Multple Listing Service) எனப்படும் கம்ப்யூட்டர் தரவு வங்கியிலிருந்தே ஏஜன்ட்டுகள் வீடுகளைப் பார்வைக்காகத் தெரிவு செய்கிறார்கள். இத்தரவு வங்கியை Toronto Real Estate Board எனப்படும் அமைப்பு (TREB) நிர்வகிக்கிறது. ரொறோன்டோ மற்றும் சுற்று நகரங்களிலுள்ள றியல் எஸ்டேட் கம்பனிகள் TREB ல் அங்கத்தவராகுவதன் மூலம் இத்தரவுகளைப் பெற்றுக் கொள்கின்றன. மாதாந்தப் பணத்தைச் செலுத்துவதன் மூலம் ஒரு ஏஜன்ட் தனது வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ ஒரு கம்ப்யூட்டரை இணைத்துக் கொண்டு இத்தரவுகளை ஒருநாளில் 22 மணித்தியாலங்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம். விற்பனைக்காக வரும் புதிய வீடுகள் உடனுக்குடன் இத்தகவல் வங்கிக்கு வரும். எந்த ஏஜன்ட்டும் எந்த நேரத்திலும் ஒரே தகவலைப் பெற்றுக் கொள்ளலாம்.

வீட்டின் படம், விற்பனை செய்யும் கம்பனி, விற்பனைக்கு வீட்டைத் தரகு செய்யும் ஏஜன்ட், வீட்டின் விலை, வீட்டைப்பற்றிய விபரங்கள், இந்த வீடு முன்பு என்ன விலைக்கு வாங்கப்பட்டது, யார் முந்திய உரிமையாளர் என்பது போன்ற தகவல்களை இந்த கம்ப்யூட்டர் வங்கியில் பெற்றுக்கொள்ளலாம்.

வாடிக்கையாளருக்குத் தேவையான அம்சங்களுள்ள வீடுகளை கம்ப்யூட்டரின் உதவியுடன் தெரிவுசெய்யும் ஒரு ஏஜன்ட் அந்த வீடுகளை விற்பதற்கு பொதுச்சந்தையில் விட்ட கம்பனிகளை அழைத்து வீடுகளைப் பார்வையிடுவதற்கு நேர ஒழுங்குகளைச் செய்கிறார். இதேவேளை அதே வீடுகளை வேறு பல



வாங்க.. வீடு வாங்க..

ஏஜன்ட்டுகளும் கம்ப்யூட்டரில் பார்த்து தமது வாடிக்கையாளர்களுக்கும் காட்டுகிறார்கள்.

அதேவேளை, ஒரு ஏஜன்ட் தான் விற்கவென்று பொறுப்பெடுத்த வீட்டைக் கம்ப்யூட்டர் வங்கியில் போடாது பிரத்தியேகமாக தானே விற்கவும் முனையலாம். பத்திரிகைகளிலும் டெலிவிசன் போன்ற சாதனங்களிலும் பிரத்தியேக விளம்பரம் செய்தே இவ்வீடு விற்கப்படும். விற்பனை ஏஜன்ட் (Listing Agent) மற்றும் விற்றுக் கொடுக்கும் ஏஜன்ட் (Selling Agent) ஆகிய இரண்டு பேரின் வேலைகளையும் ஒரே ஏஜன்ட் செய்கிறார். இப்படியான சந்தர்ப்பத்தில் அந்த ஏஜன்டினுடைய ஊதியம் அதிகரிக்கிறது. கம்ப்யூட்டர் வங்கிக்கு வராதபடியால் இந்த வீட்டைப்பற்றிய விபரங்களை ஏனைய ஏஜன்டுகள் அறியமுடியாது. விளம்பரக் குறைவினால் இந்த வீடு தாமதமாகவே விற்கப்படும்.

'வீடு விற்பனைக்கு' என்ற பலகையைப் பார்த்து அதிலுள்ள தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்கிறார்கள். இதனால் ஏற்படும் நன்மை தீமைகள் என்ன?

'வீடு விற்பனைக்கு' என்ற விற்பனைப் பலகை இரண்டு வகையினது. முதலாவது பிரத்தியேக விற்பனைக்கென்று (Private Sale).வீட்டின் உரிமையாளரே போடுவது. பொதுவாக ஏஜன்ட் இந்தவிதமான தரகுவேலையில் இறங்கமாட்டார். காரணம் அவரது ஊதியத்தை வீட்டின் உரிமையாளரே கொடுக்கவேண்டும். உரிமையாளர் அப்படி விரும்புவாராயின் அவர் ஒரு றியல் எஸ்டேட் கம்பனியினூடாகவே அவர் வீட்டை விற்க முனைந்திருப்பார். இரண்டாவது வகையினது றியல் எஸ்டேட் கம்பனியினால் போடப்படுவது. இந்தப் பலகையில் விற்பனை ஏஜன்டின் (Listing Agent) தொலைபேசி இலக்கம் இருக்கும். இவருடன் தொடர்பு கொண்டு வீட்டைத் தரகு செய்யும்போது ஒரே ஏஜன்ட் வீட்டு உரிமையாளருக்காகவும் வீட்டை வாங்குபவருக்காகவும் பேரம்பேசுவார். உரிமையாளருக்கு அதிக விலையையும் வாங்குபவருக்கு மலிவான விலையையும் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த 'ஒரே' ஏஜன்டுக்குரியது. அது எப்படி முடியும்? அதே வேளை இந்த ஏஜன்ட்டுக்குரிய ஊதியத்தை உரிமையாளரே கொடுக்கப் போகிறார். அப்படியிருக்கும்போது உரிமையாளருக்கு அதிக விலையைப் பெற்றுக் கொடுப்பதில்தான் இந்த ஏஜன்ட் குறியாகவிருப்பார். உரிமையாளர் கொடுக்கும் ஊதியம் மொத்தமாக இந்த ஏஜன்ட்டுக்கே போய்ச்சேரும்.

சில நேர்மையான ஏஜன்ட்டுகள் விற்றுக் கொடுக்கும் ஏஜன்டுக்குரிய (Selling Agent) பங்கினைச் சேமித்து விற்பவருக்கோ அல்லது வாங்குபவருக்கோ கொடுப்பார்கள் அல்லது விலையில் தள்ளுபடி செய்துவிடுவார்கள்.

பல ஏஜன்டுகளோடு ஏக காலத்தில் வீடு பார்ப்பதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வீடு வாங்குபவர்களைப் பொறுத்த வரையில் இதனால் லாபம் என்று பலர் நினைக்கிறார்கள். அது தவறு. ஒரு வாடிக்கையாளரின் விருப்பு வெறுப்புகளை நன்றாக அறிந்து அதற்கேற்ற வீடுகளைக் காட்டி இறுதியில் அவர்கள் விரும்பிய வீட்டை வாங்கிக் கொடுப்பதே நல்ல ஏஜன்டினுடைய கடமை. இதற்காக ஒரு ஏஜன்ட் பல மணித்தியாலங்களைச் செலவிட்டு கம்ப்யூட்டர் தரவு வங்கியிலிருந்து நூற்றுக்கணக்கான வீடுகளைத் தேடியெடுத்து அவற்றுள் வாடிக்கையாளரின் விருப்பத்திற்கமைந்த வீட்டைத் தெரிவுசெய்து அதை அவர்களுக்குக் காட்ட ஒழுங்கு செய்வார்.

இந்த நேரத்தில் அந்த வாடிக்கையாளர் வேறு ஒரு ஏஜன்டுடன் வீடு பார்க்கப் போய்விட்டால் முதலாவது ஏஜன்டினுடைய நேரம் வீணாக விரயமாகப் போய் விடுகிறது. அந்த நேரத்தில் அவர் இன்னுமொரு வாடிக்கையாளருக்கு தனது சேவையை வழங்கியிருக்கலாம்.

வீடு வாங்குவதற்கு இப்போ நல்ல தருணமா?

பல காரணங்கள் இதற்கான பதிலைத் தீர்மானிக்கின்றன. முதலாவதாக. பொதுவாக குறைவான வட்டி வீதம் அடமானத்துக்கான மாதக் கட்டுக்காசின் தொகையைத் தீர்மானிக்கிறது. தற்போது நீண்ட காலக் கடனுக்கு 6 தொடக்கம் 7 வீதம் வரை வட்டி கிடைக்கிறது. இப்படி மலிவான வட்டி வீதம் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை.

வட்டி வீதம் நாட்டின் பொருளாதாரத்தில் தங்கியிருக்கிறது. கனடா. ஏனைய மேற்கத்திய நாடுகளைப் போல தனது தேவைகளுக்கு வெளிநாட்டு 'முதலாளி'களின் முதலீட்டில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறது. இங்கு வட்டி வீதம் நன்றாகவிருந்தால் வெளிநாட்டாரின் பணம் இங்கு முதலீடு செய்யப்படும்.. தனது கடன் தேவைகளுக்காக அரசு வெளிநாட்டுக் காசில் நம்பியிருக்கும் மட்டும் வட்டி வீதம் அதிகம் இருப்பதையே அரசு விரும்பும். ஆனால் வட்டி வீதம் அளவுக்கு மீறினால் உள்நாட்டு உற்பத்தித் துறை தாங்கள் வங்கியில் வாங்கிய கடனுக்கு வட்டி கட்டித் தாங்க முடியாமல் வங்குறோத்துகள் அதிகரிக்கும். தனியாரும் அடமானக் கடனுக்கு வட்டி கட்ட முடியாது வங்குறோத்தாகி விடுவர் .தனால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும். இதனால் நாட்டிடின் கடன் பளுவைக் குறைக்கும் மட்டும் அரசு வட்டி வீதத்தில் ஒரு சமநிலையைப் பேணியேயாக வேண்டும்.

மாறாக பொருளாதாரம் சீரடைந்து வேலையில்லாதவர் எண்ணிக்கை மிகக் குறைவாக வரும்போது மக்கள் 'இதை விட்டால் இன்னொரு வேலை' என்ற தலைக்கனத்தில் சம்பள உயர்வை நிர்ப்பந்திப்பார்கள். சம்பளம் பெருக பணப் புழக்கமும் செலவுகளும் அதிகரிக்க நாட்டின் பண வீக்கம் அதிகரிக்கும். பணவீக்கத்தைக் குறைக்க அரசுகள் கையாகும் ஒரு வழி வட்டி வீதத்தை அதிகரிப்பதே.

தற்போது நாட்டின் பொருளாதாரம் சீராகி வருகிறது. வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. பணவீக்கம் சிறிதாக அதிகரிக்கிறது. அமெரிக்காவிலும் இதே நிலைமைதான். அங்கும் வட்டி வீதம அதிகரிக்கப்பட்டு விட்டது. அடுத்தது கனடாதான்.

இதையெல்லாம் பார்க்கும்போது தற்போதுள்ள மலிவான வட்டி வீதத்தைப் பாவித்து வீடுகளை வாங்குவது நல்லது.

மநு நீதி

மநுநீதி போன்ற பழைய நூல்களை மீண்டும் பிரசுரிப்பதன் நோக்கம் இரு வேறுபட்ட காலங்களில் இந்திய சமூகங்களின் வாழ்க்கை முறைகளை ஒப்பிட்டுப் பார்க்க வைக்கும் முயற்சியே. வளர்ந்திருக்கிறோமா அல்லது தேய்ந்திருக்கிறோமா என்பதைத் தீர்மானிப்பது வாசகர்களைப் பொறுத்தது

அறிவுகளுக்கெல்லாம் மூலம் வேதம் என்பர். அவற்றுள் இலௌகீக வாழ்க்கைக்கு இன்றியமையாத நெறிகளை அமைத்துக் காட்டி மறுமைக்கும் உதவுவன ஸ்மிருதிகள் எனப்படும் தரும சாஸ்திரங்களாகும். இவற்றில் மிகத் தொன்மையானதும் பலரால் போற்றப்படுவதுமான தரும சாஸ்திரம் மநு என்ற முனிவரால் இயற்றப்பட்ட மநு தரும சாஸ்திரம் என்ற நூலாகும். இந்து இந்தியாவின் ஆணை நூல்களுக்கு மூலாதாரமாகிய இத்தரும சாஸ்திரம் இன்று உலகின் பல நாடுகளினதும் நீதி பரிபாலனத்திற்கும் முன்னோடியாக விளங்குகின்றது.
கி.மு. இரண்டாம் நூற்றாண்டு காலத்திற்குரியது என்று அனுமானிக்கப்படக்கூடிய இந்நூல் ஒரு நாட்டின் பண்பாடு, பொருளாதார நிலை, தொழில், வியாபார நிலைகள் முதலிய பலதிறப்பட்ட சமூக அறிவு பெறுவதற்கு மிகவும் உதவுகின்றது. மநு தருமம் பின்பற்றப்படும் காலங்களை அவதானிப்பின் இந்து சமூகம் நான்கு வருணப் பிரிவுகளிலும், கூட்டுக் குடும்ப முறையிலும், சொத்துடைமையிலும் பெருமதிப்புக் கொண்டிருந்ததுடன் மணவினை, நல்ல மக்கட்பேற்றை உதவுவதையே சிறந்த நோக்கமாகக் கொண்டிருந்ததும் தெரியவருகிறது.

மநு தரும சாஸ்திரத்துக்கு பலர் உரையெழுதியிருந்தாலும் கல்யாணி நகரத்தை ஆண்ட சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தன் (கி.பி. 1070— 1100) காலப்பகுதியில் வாழ்ந்த விஞ்ஞானேசுவரர் என்பவர் எழுதிய உரைக்கே பெருமதிப்பிருந்தது. விஞ்ஞானேஸ்வரீயம் என அழைக்கப்பட்ட இந்நூலை திருநெல்வேலி நகரில் வாழ்ந்த சங்கர தேசிகன் என்பவர் தமிழாக்கம் செய்தார்.



முகவுரையை விட லட்சணங்கள் என அழைக்கப்படும் 49 நூற்பகுதிகளைக் கொண்ட இந்நூல் நீதி கேட்கும் முறை, சொல்லும் முறை, அதனைக் கேட்டு முடிவு கூறி நீதியை நிலை நிறுத்தும் அரசன் , நீதிபதி, அதிகாரி, சபையோர் முதலியோரின் இலக்கணங்களையும், கடன் கேட்டல் கொடுக்கல் வாங்கல் முதலியவற்றில் உண்மை கண்டறிவதற்குரிய மானிட, தெய்வப் பிரமாணங்கள், சொத்துப் பிரிவினையின்போது ஏற்படும் எல்லைப் பிழைமுதல் குற்றவியல் வரை நீதியை செவ்வனே பரிபாலிக்க எடுக்க வேண்டிய நடைமுறைகள் பற்றிய விளக்கங்களையும் இந்நூல் தருகிறது.

பாகம் 2

வழக்கு (விவகாரம்) கேட்கும் லட்சணம்

வாதி பிரதிவாதிகள் தங்கள் வழக்குகளைக் கொண்டு வரும்போது அதை அவர்களே கூறவேண்டும். அப்படியிருந்தும் நீதிபதியானவர் ஒரு சில வழக்குகளைக் கேட்கக்கூடாது. உதாரணமாக கணவன் மீது மனைவி, பெற்றோர்க்கெதிராக பிள்ளை, எஜமானுக்கெதிராக அடிமை, பிறனுக்காக உத்தரவின்றி வரும் ஒருவன் ஆகியோர் கொண்டுவரும் வழக்குகளை நீதிபதி கேட்கக்கூடாது.

மன்றத்தில் வாதி வழக்கைக் கூறியவுடன் பிரதிவாதி அழைக்கப்படுவார். எதிரி வந்த பிறகு வாதி இன்னுமொரு தடவை வழக்கைக் கூறவேண்டும். வாதி, பிரதிவாதிகளை உச்சி முதல் கால்கள்வரை நன்றாக உற்றுப்பார்த்து, இருவர் சொல்வதையும் வருடம், ருது, மாதம், பட்சம், தேதி, இரவு, பகல் முதலிய குறிப்புகளுடன் எழுதிக் கொள்ள வேண்டும். வழக்கில் சம்பந்தப்பட்ட பொருளின் அடையாளங்களையும், வாதி,

பிரதிவாதி, சாட்சி ஆகியோரின் பெயர்களையும் மற்றும் பல நுட்பமான செயல்களையும் நீதிபதி எழுதிக்கொள்ள வேண்டும். வழக்கு அழிவழக்கு என்று கண்டால் அதனைத் தள்ளிவிட வேண்டும். பிரதிவாதி வரமுடியாதபடி உடல்நலம் குன்றியிருப்பின் அவன் மகன் அல்லது வேறு உத்தரவு பெற்ற உறவினர் அவனுக்காக வரலாம். ஒருவன் மீது பல வழக்குகள் இருந்தால் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக விசாரிக்க வேண்டும்.

கடன் கொடுக்கிற லட்சணம்

வழக்குகள் பதினெட்டுக் காரணங்களினால் தோன்றுமெனினும் அவற்றுள் கடன் கொடுத்தல் முதலானது எனக் கூறப்படும். கடன் கொடுத்தல், கடன் வாங்குதல், கடன் மீட்டல், பிணை நிற்றல், அடகு வைத்தல் என ஐந்து பகுதிகளில் இது விளக்கப்படுகிறது.

பந்தகக்கடனுக்கு (mortgage) மாத வட்டி ஒன்றேகால் வீதம், வெண்கடனுக்கு இரண்டு வீதம், காட்டில் போய் வியாபாரம் செய்பவருக்கு பத்து சதம், கடல் வியாபாரிக்கு இருபது சதம் என்று வட்டி அறவிடப்படும். கைக்கடன் வாங்கியவன் திரும்பக் கொடாமல் ஊரிலேயே வெகுகாலம் இருப்பின் ஆறமாதத்துக்கு மேல் வட்டியுண்டு. வலியவனிடம் எளியவன் கடன் வாங்கிக் கொடாமலிருந்தால் அம் முதலுக்கு வட்டியுண்டு. வெளியூர் போய்விடின் மூன்று மாதத்திற்கு மேலும் வட்டியுண்டு. ஆடை, தானியம், தைலம், அடிமை ஆகியவற்றையும் இந்நாளில் கடன்பெறும் மரபு இருந்தது.

கொடுத்த கடனை வாங்கும் லட்சணம்

இதமாகப் பேசியும், உண்டி கொடுத்தும், வஞ்சனையாலும், இப்படிப்பட்ட பல உபாயங்களைப் பாவித்து கொடுத்த கடனை வாங்க வேண்டும். அப்படியும் கொடுக்காவிட்டால் மன்னனிடம் முறையிடலாம். இவ்வகையில் அரசன் கடனை மீட்டுக் கொடுப்பானாகில் அதற்குரிய கூலியான பத்திலொரு பங்கை கடனாளி அரசனுக்குக் கொடுக்க வேண்டும். அதேவேளை கடன் கொடுத்தவனும் கடனின் ஐந்திலொரு பங்கை அரசனுக்குக் கொடுக்க வேண்டும்.

கடனுக்கு அரசன் கெடு வைத்தல், கடனுக்குப் பதிலாக வேலை வாங்குதல் இக் காலத்தில் வழக்கமாகவிருந்தது. ஒருவனுக்குக் கொடுத்த கடனை அவன் மகன், பேரன் முதலியவர்களிடமிருந்து வாங்க, கடனின் தன்மைகளுக்கேற்ப விதிகள் குறிப்பிடப்படுகின்றன. கடனை ஒருவன் திருப்பும்போது ஒருவன் வாங்க மறுத்தால் அதற்கு வட்டியில்லை.

கடன் அடைக்கும் லட்சணம்

டும்பச் செலவுக்குப் பொதுவாக வாங்கப்பட்ட கடன் அக் குடும்பத்தில் பிரிவினையாகாவிட்டால் அது குடும்பப் பொதுக்கடனாகும். குடும்பத் தலைவன் வெளியூர் போயிருந்தாலும், இறந்துபோய் விட்டாலும் குடும்பமே அக்கடனை அடைக்க வேண்டும். தன் சொந்தத்திற்காக குடும்பத் தலைவன் வாங்கிய கடனை மகன் அடைக்க வேண்டும். பேரன் முதலை மட்டும் கொடுக்க வேண்டும். பேரனின் மகனுக்கும் (பூட்டன்) கடனுக்கும் சம்பந்தமில்லை. சொந்தமாகக் கடன் பெற்றவனின் மனைவியும், தாயும் அக்கடனை அடைக்க வேண்டியதில்லை.

மனைவி உழைப்பைக் கொண்டு உண்கின்ற கணவர் தம் மனைவி பட்ட கடனை அடைக்க வேண்டும். மனைவி தான் வாங்கிய கடனையும் தான் ஒப்புக்கொண்ட புருசனின் கடனையும் கொடுக்க வேண்டும். குடிகாரன், காமன் ஆகிய புருசர் கொண்ட கடனை மனைவி கொடுக்க வேண்டியதில்லை.

ஒருவன் மனைவியை மற்றொருவன் ஏற்றுக் கொண்டால் முன்னவன் பட்ட கடனையும் அவள் காரணமாக அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிணை நிற்கும் லட்சணம்.

குடும்பப் பிரிவினைக்குமுன் சகோதரர்க்குள்ளும், கணவன் மனைவியர்க்குள்ளும், தகப்பன் மகனுக்குள்ளும், பிணை, சாட்சி, கடன் கொடுத்தல் ஆகிய மூன்றும் செல்லுபடியாகாது. பிறருள், 'அவன் ஆஜராகவேண்டிய காலத்தில் ஆஜர்ப்படுத்தல் என் கடமை' என்றும், 'என் வார்த்தையை நம்பிக் கடன்கொடு, அவன் ஏமாற்றமாட்டான்' என்றும், 'அவன் கொடுக்கத் தவறினால் நான் கொடுப்பேன்' என்றும் மூன்று நிபந்தனைகளின்மேல் பிணை கொடுக்கப்படும். முதலிரண்டும் பிணை கொடுத்தவன் உயிருள்ளவரை அவனையே சாரும், பிள்ளைகளைச் சாரா. மூன்றாவது வகை பிணை மகனைச் சாரும் ஆனால் பேரனைச் சாராது. 'இவன் ஓடிவிட்டால் நான் பிணை' என்று ஒருவன் தன்னையே பிணை வைப்பது மானிடப் பிணையாகும்.

அடகு பிடிக்கிற லட்சணம்.

வாங்கிய கடனுக்கு உத்தரவாதமளிப்பது இரண்டு வகை. ஒன்று பிணை மற்றது அடகு. அடகு வைத்தவன் கெடு கழிந்து நான்கு நாட்களுக்குள் முதலையும் வட்டியையும் திருப்பி விட்டால் அடகைத் திருப்பிவிட வேண்டும். தவறினால் முதலாளி அடகுப் பொருளை விற்றுவிடலாம். கெடு









'நாராயணு' ஸ்வாமிஜி
எழுதும்

கடிகாரம்

கலாபம் நிகழ்ச்சி பொலிஸ் அடிபிடியென பாதியிலே குழம்பி விட்டது. இரண்டாம் நாள் நிகழ்ச்சி அமர்க்களமாக நிறைவேறியது. தீயணைப்புப் பாதுகாப்பு காரணம் காட்டி மண்டப நிர்வாக வெள்ளை ஊழியர் குழம்ப அவருக்கு லஞ்சம் கொடுத்து காரியம் சாதிக்கலாமென ஓரிரு மேதாவிகள் தமிழிலே முயல வெளியேற்றப்பட்ட இளைஞர் பட்டாளம் காவலுக்கு வந்த பொலிசொருடன் 'வானம் பொழிகிறது பூமி விளைகிறது' என வீர வசனம் பேச.... (கஷ்ட பொம்மன்கள்).

கடைசியில் விஷேட அதிரடி பொலிஸ் வந்து ஈழத் தமிழர்கள் அனைவருமே ஒற்றுமையாக வெளியே துரத்தப் பட்டனர். அண்ணே என்றால் டேய் என்பதும் டேய் என்றால் அண்ணே என்பதும் தானே தமிழர் பண்பாடு.

இதை உறுதி செய்வது போல இருந்தது இரண்டாம் நாள் சுப்பர் லீட்ஸ் இசை நிகழ்ச்சி. மண்டப பந்தோபஸ்துகளை சுப்பர் லீட்ஸ் குழுவினர் மாபியா பாணியில் **Go ahead..... make my டேய்!** என்று சொல்வது போல நின்று கொண்டு கவனிக்க அந்தப் பாதுகாப்பு படையைத் தாண்டி எந்தப் பிரச்சினையும் உள்ளே நுழையவில்லை.

டிக்..டிக்...டிக்..டிக்...

'செய்வன திருந்தச் செய்' என்பார்கள். செய்வன அறிந்து செய் என்றும் சொல்லலாம். சுப்பர் லீட்ஸ் இந்த இரண்டுக்கும் ஒரு உதாரணம் . ஆர்ப்பாட்டமில்லாத ஆனால் அசந்து போக வைக்கும் இசைக்குழு இது என அடித்துச் சொல்லலாம். எத்தனையோ இசைக் குழுக்களை மேடையில் பார்த்திருக்கிறோம். இசைக்குழுத் தலைவர்கள் என்று சொல்பவர்கள் அடிக்கும் பந்தாவும் மற்றவரைப் புழுப்போல நினைத்து 'அறிவிக்கும்' அறுவைப்பாளர்களும் கலர் காட்டும் பாடகர்களும் இல்லலாத இசைக்குழு இது.
குமரன். அஜித் இருவரினதும் விடாமுயற்சி தரத்தில் பிரதிபலித்தது. Keep it up!!!

டிக்..டிக்...டிக்..டிக்...

கடைக்குப் போனேன். Broken Palmyra இன் தமிழ்ப் பதிப்பு 'முறிந்த பனை' விற்பனைக்கு இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது. அதே சமயம் அந்த புத்தகத்தை எழுதியதால் அநியாயமாக பலியாகிப் போன ராஜினியின் நினைவும் மனதில் நெருடியது. இந்தப் புத்தகத்திற்கு எத்தனை எதிர்ப்பு ஒருகாலத்தில் இருந்தது.

இன்னும் ஞாபகமிருக்கிறது. 12.08.1990 அன்று தற்செயலாக மொன்றியாலிலுள்ள ஒன்றியத்தின் தொலைபேசிச் செய்திச் சேவைசெய்திச் சேவையைக் கேட்டபோது அதிர்ச்சியடைந்தேன். காரணம் அன்றய செய்தியை வாசித்தவர் தான் அந்த 'முறிந்த பனை'ப் புத்தகத்தை (அப்போது ஆங்கிலத்தில் வந்திருந்தது) வாசித்ததாகவும் அதில் தமிழ் ஈழத்திற்கு எதிரான நச்சுக் கருத்துக்கள் இருப்பதாகவும் மக்களை அப்புத்தகத்தை வாங்கிப் படிக்க வேண்டாம் என்றும் எச்சரிக்கை விடுத்து செய்தி வாசித்தார். இவர் யாரென்று நினைக்கிறீர்கள்?. தற்போது ரொறோன்டோவில் 'பிரபலமான' சமூக குட்டி சேவையாளராக இருக்கும் சாட்சாத் பிரான்சிஸ் சேவியர் (முன்னாள் அடிகளார்) அவர்களேதான்.

காலம் மாறியிருக்கிறது. ஒரு வரலாற்றுப் புத்தகத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்திற்கு சமூகம் மாறியிருக்கிறது. (சேவியரும் மாறியிருப்பார் ?).

டிக்..டிக்...டிக்..டிக்...

வல்மொறின் ஆலய தேருக்குப் போயிருந்தோம். நம்ப மாட்டீர்கள். தமிழ் ஜனத்திரள்..... பத்தாயிரம் இருக்குமோ?. ஆலயக் கிராமத்தைச் சுற்றி காவடியாட்டங்களும் அரோகராக் கோஷமுமாக பக்த கோடிகள் சென்றதே புல்லரிக்க வைத்தது என்னவென்றால் அக் கோஷங்களையிட்டு பரவசப் பட்டவர்கள் வெள்ளைக் காரர்களே!. காவடி எடுத்த வெள்ளைக்காரர்களும்

காவியுடுத்த வெள்ளைக்காரர்களும் முற்பிறப்பின் இந்துக்களோ?

மோர்த்தண்ணீர் ,சக்கரைத்தண்ணீர் பந்தல்கள்....

"ஆகா மோர்த் தண்ணி.. give me some **more**" என்று மோர் மோராக வாங்கிக் குடித்தேன்.. ஸ்ரைறோபோம் கப்புகளில் வாங்கி நம்மவர்கள் சிலரும் குடித்தார்கள். பின்பு வெறுங் கப்புகளை சுழற்றி வீசினார்கள். போதாததற்கு பலர் அது பூமாலை என்று நினைத்தோ என்னவோ கப்புகளைப் பிய்த்துப் பிய்த்து எறிந்தார்கள். (அடுத்த பிறப்பிலயாவது மனிதராப் பிறவுங்கோ..).

அந்தக் குப்பைகளையும் ஆச்சிரமத்து வெள்ளைக்காரர்களே பொறுக்கிச் சுத்தம் செய்து கொண்டு இருந்தார்கள்.

தமிழனென்று சொல்லடா தலை கழன்று நில்லடா!

டிக்..டிக்...டிக்..டிக்...



பராசக்தி படத்தில் ஆரம்பித்த சிவாஜி கணேசனின் சமிபத்தைய படமான ஒன்ஸ் மோர் படத்திற்கு போனேன். சிவாஜியைத்தவிர படத்தில் எதுவுமே சரியில்லை. .. காதலும் கத்தரிக்காயும். ஹீரோவாக நடிப்பவர் விஜய் எனகின்ற ஒரு கத்தரி வெ— — . ஹீரோயின் பெயர் சிம்ரான். தியேட்டரில் விசில் அடிக்கிறான். கத்திரான் சிம்ரான்.

வண்ஸ் மோர் பார்க்கத் தூண்டவில்லை.

டிக்..டிக்...டிக்..டிக்...

நடிகர் அப்பாஸைப்பற்றி எழுதுமாறு ஒரு இளம் குரல் கேட்டுக்கொண்டது. அப்பாஸைப் பற்றி இதோ...

நாலு வயதாகவிருக்கும்போது...

எனது அப்பா ஒரு சுப்பர் மான். அவரால் எல்லாமே செய்ய முடியும்.

ஐந்து வயதாகவிருக்கும்போது...

எனது அப்பாவிற்கு நிறைய நிறைய விஷயங்கள் தெரியும்.

ஆறு வயதாகவிருக்கும்போது...

போடா என்ர அப்பா உன்ர அப்பாவைவிடக் கெட்டிக்காரன்!

எட்டு வயதாகவிருக்கும்போது...

உம்....அப்பாவிற்கு எல்லாம் சரியாய்த் தெரியுமென்றில்லை.

பத்து வயதாகவிருக்கும்போது...

அப்பா வளர்ந்த காலம் மாதிரி இப்ப இல்லை. இப்போ எல்லாமே மாறிவிட்டது.

12 வயதாகவிருக்கும்போது...

அப்பாவுக்கு ஒன்றும் தெரியாது.

14 வயதாகவிருக்கும்போது...

ஊஹீம் அப்பா பழைய காலத்து ஆள். இந்தாளைக் கணக்கெடுக்கக் கூடாது.

21 வயதாகவிருக்கும்போது...

ஐயோ அப்பரோ! கடவுளே! ஆள் ஒரு மண்டை கழன்ற மனிசன்.

25 வயதாகவிருக்கும்போது...

அப்பாவுக்கு இது பற்றி கட்டாயம் கொஞ்சமாவது தெரிந்திருக்கும். ஒருக்கா அவரிட்ட கேட்டுப் பார்த்த பிறகு செய்வம்.

30 வயதாகவிருக்கும்போது...

இதைப்பற்றி அப்பா என்ன நினைக்கிறாரோ தெரியேல்லை. ஒருக்கா அவரைக் கேட்டுப் பார்த்த பிறகு செய்வோம் .

35 வயதாகவிருக்கும்போது...

அப்பாவோட இதைப்பற்றிப் பேசின பிறகுதான் நான் முடிவு எடுப்பன்.

40 வயதாகவிருக்கும்போது...

பிரச்சினை வரேக்கதான் அப்பற்ற கெட்டித்தனம் தெரியுது. அந்தாள் இந்த மாதிரி விஷயங்களைக் கிளீனாகச் செய்து முடிக்கும்.

50 வயதாகவிருக்கும்போது...

இந்த இடத்தில என்ர அப்பா மட்டும் இருந்திருந்தா....ஆளிட்ட இதுபற்றியெல்லாம கேட்டிருக்கலாம். சீ.. இந்தாள் இருக்கேக்க அவரின்ர அருமை எனக்குத் தெரியாமப் போய்ச்சு. ஆளிட்ட நான் நிறையப்படிச்சிருக்க வேணும். விட்டிட்டன்.

இது அநேகமாக எல்லலாருக்கும் தெரிஞ்ச **அப்பாஸ்.**

டிக்..டிக்...டிக்..டிக்...

நிலா குகதாசன்

இவலன் பிறப்பதுமில்லை.
எக்காலத்திலும் இறப்பதுமில்லை.
இவன் ஒணருமுறையிருந்து
பின்னர்
இல்லாது போவதுமில்லை.
இவன் பிறப்பற்றான்.
அனவரதன்
பழையோன்
உடம்பு கொல்லப்படுகையில்
இவன் கொல்லப்பட்டான்.

என்ற பாரதியாரின் வரிகள் இவனுக்கு அர்ப்பணம்...!

டிக்..டிக்...டிக்..டிக்...

ராஜேஸ்வரி முத்துலிங்கம் *Dip. A.M., RIMP*

அறுவைச் சிகிச்சைக்கு புதிய கருவி!

கம்ப்யூட்டர்களும் நுண் தொழில்நுட்பப் பரப்புகளில் சமீபகாலமாக அதிகரித்துவரும் முன்னேற்றங்களும் மருத்துவத்துறையினருக்கு பல வரப்பிரசாதங்களை அளித்து வருகின்றன. குறிப்பாக அறுவைச் சிகிச்சை வைத்தியத்தில் கத்தியும் இரத்தமும் இல்லாது பல சாதனைகளை மருத்துவர்கள் சாதிக்கத் தொடங்கி விட்டனர். லப்பறோஸ்கோப்பி (*Laparoscopy*) எனப்படும் கட்புலக் கருவிகளினுதவியுடன் உடலினுள்ளே அறுவையில்லாது சிறுதுளை வழி சென்று பார்வையை விசாலித்து பழுதாகிய சிற்றுறுப்புக்களைப் பரீட்சித்துப் பின்னர் நுண்ணறுவைகளின் மூலம் இவற்றை அகற்றும் முறை கடந்த சில வருடங்களாகப் பிரபலமாகி வருகிறது. இதன் மூலம் நோயாளியின் வலி குறைவாகவும். மிகக் குறுகிய நேரத்தில் மருத்துவ மனையில் தங்கும் தேவையைக் குறைத்தும் சிக்கலின்றி அறுவைச் சிகிச்சையை முடித்து விடக் கூடிய அனுகூலம் இருக்கிறது.

ஆனால் இச்சிகிச்சையின்போது மருத்துவரின் இரண்டு கைகளுமே இரண்டு விதமான கருவிகளைக் கையாள வேண்டிய தேவை ஏற்படுவதாலும் தாதிகளின் உதவி மட்டுப்படுத்தப் படுவதாலும் இம் மருத்துவர்களுக்கு உதவிசெய்யவென இன்னுமோர் கருவியை உருவாக்கியிருக்கிறார்கள் பிரிட்டிஷ் கொலம்பியாவைச் சேர்ந்த இரு இளம் விஞ்ஞானிகள். அலி பாராஸ் வில்லியம் லீ எனப்படும் இவ்விருவரும் மூன்று தளங்களிலும் இலகுவாக நகர்ந்து மருத்துவரின் லப்பரோஸ்கோபிக் கருவிகளை சரியான நிலைகளில் பிடித்துக் கொள்ளும் 'உதவிக் கரம்' ஒன்றை உருவாக்கித் தந்துள்ளனர். இதனால் மருத்துவர்களின் 'சொந்தக் கைகள்' விடுதலை பெற்று ஏனைய முக்கிய கருமங்களை ஆற்ற முடிகின்றது.

வைட்டமின் -D

பலமான எலும்புத் தொகுதி மனித ஆரோக்கியத்துக்கு. மிக அவசியம். மனித உடலின் பெரும்பாலான பகுதிகள் பழயன கழித்து புதியன பெற்று தொடர்ந்தும் புனருத்தாரண வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றன. இப் புனருத்தாரண வேலைகளுக்கு மிக அவசியமான மூலப் பொருட்கள் வைட்டமின்கள். தாதுப் பொருட்கள் ஆதியன.

வயது முதிர்ச்சியுடன் கல்சிய இழப்பு அதிகரிக்கின்றது என்பது அறியப்பட்ட விடயம். குறிப்பாக பெண்களில் மாதவிடாய் காரணமாக கல்சிய இழப்பு ஆண்களை விடவும் அதிகமாகவே இருக்கிறது. ஒஸ்ரியோபொறோசிஸ் (*osteoporosis*) எனப்படும் கல்சிய இழப்பு எலும்பின் பலத்தைக் குறைப்பதனால் அதை ஈடு செய்து மீண்டும் கட்டியமைக்க வேண்டிய தேவையிருக்கிறது.

உடம்பில் கல்சியம் குறைந்துவிட்டதே என்பதற்காக கல்சியம் மாத்திரைகளை அள்ளி விழுங்குவதினால் இக்குறை நிவர்த்தியாகி விடாது. எவ்வளவுதான் கல்சியத்தைச் சாப்பிட்டாலும் உடல் எவ்வளவு கல்சியத்தை உள்வாங்கிக் கொள்ளவேண்டுமென்பதை வைட்டமின் 'டி' ஊட்டசத்துதான் கட்டுப்படுத்துகிறது.

வைட்டமின் 'டி' ஊட்டச்சத்து மனித உடலினாலேயே உற்பத்தியாக்கப்படும் வகையினது. சூரியக் கிரணங்கள் மனித சருமத்தில் படும்போது புறஊதாக் கதிர்களின் (*Ultra Violet Rays*) தாக்கத்தால் வைட்டமின் 'டி' உற்பத்தியாகிறது. இதனால் கனடாவில் வாழ்கின்ற பெரும்பாலானவர்களுக்கு கார்த்திகை தொடக்கம் பங்குனி வரையிலான காலத்தில் சூரிய வெளிச்சக் குறைவினால் இவ் வைட்டமின் உற்பத்தி தேக்கமடைகிறது. அதிலும் எங்கள் முதியவர்கள் வருடம் முழுவதும் வீட்டிற்குள்ளேயே அடைபட்டுக் கிடப்பதால் வருட முழுவதுமே இயற்கையான வைட்டமின் 'டி' உற்பத்தியின்றிப் பாதிக்கப்படுகிறார்கள்.

ஒரு சராசரி மனித உடலுக்கு நாளொன்றுக்கு 500 I.U. (சர்வதேச அலகுகள்)வைட்டமின் 'டி' தேவை. இதில் 400 I.U. இயற்கையாக சூரிய ஒளியின் உதவியுடன் சருமத்தினால் தயாரிக்கப்படுகிறது. மிகுதி 100 I.U. உண்ணும் உணவு வகைகளிலிருந்து பெறப்படுகிறது.

இதற்கான மூலங்கள்

2 — கிண்ணம் பசுப்பால் அல்லது
4 — தே.க. மார்ஜரின் அல்லது
6 — அவுன்ஸ் சல்மன் மீன். ஆதியன.

100 தொடக்கம் 400 I.U. வரையிலான வைட்டமின் செறிவுள்ள மாத்திரைகளை உட்கொள்ளலாமெனினும் அளவுக்கதிகமாக உட்கொண்டால் அதுவே நஞ்சாகிவிடும் ஆபத்தும் இருக்கிறது. இவற்றை அதிகமாக உடகொள்ளும்போது வயிற்றுப் பிரட்டல். பசியின்மை. தலைவலி. களைப்பு. அளவுக்கதிகமான சலப்போக்கு ஆதியன அறிகுறிகளாயிருக்கும்.

மனோ நிலையும் இருதய வியாதியும்

'உங்களுக்கு அடிக்கடி கோபம் வரும். எப்போதும் சிடுமூஞ்சியோடு இருக்கிறீர்கள். உங்களைச் சுற்றியுள்ளோர்

எல்லோருமே எதிரிகளாகவே படுகிறார்கள். மற்றவர்கள் சொல்கின்ற எதிலுமே உங்களுக்கு நம்பிக்கையில்லை. உங்களுக்கு வயது நாற்பதைத் தாண்டியிருக்கும். அப்படியானால் உங்களுக்கு இருதய வியாதி வருவதற்கு வெகுநாட்களில்லை.'

நெதர்லாந்தைச் சேர்ந்த மனோதத்துவ நிபுணர் டாக்டர் அட் அப்பெல்ஸ் என்பவர் கருத்துப்படி மேற்கூறிய குணாதிசயங்கள் இருதய வியாதிகளின் முன்னறிவிப்புகள் தாம். சமீபத்தில் மொன்றியல் நகரில் நடைபெற்ற மஹாநாடொன்றில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின்படி மேற்கூறிய குணாதிசயங்களைக் கொண்டிருந்த இருதய வியாதிக்காரர்களில் 45 வீதமானோர் (நாடிகளை விரிவாக்கும் அஞ்சியோபிளாஸ்ரி சிகிச்சை செய்தபின்னரும்) மாரடைப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

கோபத்தை உடனுக்குடன் வெளிக்காட்டுபவர்களும், எதையுமே மனதுக்குள் புதைத்து வைத்து புழுங்கிக் கொள்ளாதவர்களும் மிகக் குறைவான அளவிலேயே இருதய வியாதிகளால் பாதிக்கப்படுகிறார்கள் என தென் கரோலினாவிலுள்ள மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சூசன் சதர்லான்ட் குறிப்பிட்டுள்ளார்.

கோபம், நம்பிக்கையீனம், மனப்புழுக்கம், கரவு ஆதிய மனோநிலைகளைக் கொண்டிருக்கும் மனிதரின் நாடிகளில் கொழுப்புச் செதில்கள் படிவது அதிகமாகவிருப்பதே இவ்விருதய வியாதிகளுக்குக் காரணம் என்று மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

உள்ளத்தைக் கிள்ளும் உள்ளி!

நோயைத் தள்ளி வைப்பது உள்ளி. காலம் காலமாக உலகம் முழுவதுமே உள்ளியின் மகிமை பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறது. உள்ளி பற்றி எழுதாத நூல்கள் உலகத்திலேயே கிடையாது.

உள்ளியின் மகத்துவம் பற்றி நம்நாட்டு சித்த, ஆயுர்வேத வைத்தியங்களில் 'ஏட்டுக்கு ஏடு' ஆகக் குவிந்து கிடக்கிறது. மணத்திற்காக அதைப் 'படித்த நம்மவர்கள்' தள்ளி வைத்தாலும் மேற்கில் உள்ளியின் மணம் பரவத் தொடங்கிய பிறகு 'அய்யோ அதுவா' என்று உள்ளிக் குளிகைகளுக்காய் பார்மசிகளில் தவம் கிடக்கிறார்கள்.

உள்ளி தீய பக்டீரியாக்களைக் கொல்கிறது. சில வகையான புற்றுநோய்களைத் தடுக்கிறது. கொலஸ்ரறோல் எனப்படும் கொழுப்புப் படிவுக்கான காரணிகளைக் குறைக்கிறது. உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது என்றெல்லாம் மருத்துவ சமூகம் பட்டியலிட்டுக் காட்டுகிறது. நூற்றுக்கும் அதிகமான பிணிகளைத் தீர்க்கும் இந்த அற்புதமான மருந்தை நம் வீட்டுத்தோட்டத்திலும் வளர்க்கலாம்.

உள்ளியில் அப்படி என்னதான் இருக்கிறது?. நமது பாட்டிக்குத் தெரிந்த அளவு டாக்டர்களுக்குத் தெரியாது. ஆனால் இருவருமே ஒத்துக்கொள்ளுமளவுக்கு அதன் மகாத்மியம் இருக்கிறது. உள்ளியை நசுக்கும்போது அலிசின் *(allicin)* என்ற கூட்டுப்பதார்த்தம் உருவாகிறது என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். இந்த அலிசின் வயிற்றுல் வரும் புற்றுநோய்களைக் குறைப்பதாக சீனாவிலும் இத்தாலியிலும் செய்த ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. இவ்விரு நாடுகளிலும் உள்ளி தாராளமாக உண்ணப்படுகிறது என்பது உண்மை. அத்துடன், அஜோயீன் *(ajoene)* எனப்படும் இன்னுமொரு பதார்த்தமும் உள்ளியிலிருப்பதாகவும் அது அலிசினோடு சேரும்போது கொலஸ்ரறோலையும் இருத்த அமுக்கத்தையும் குறைக்கின்ற வல்லமை உண்டு என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

பிறிதொரு ஆராய்ச்சியில் ஒவ்வொரு நாளும் ஒரு உள்ளிக் குமிழை உண்டுவந்தால் தீய கொலஸ்ரறோலை 9 வீதத்தால் குறைக்கலாம் என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும் மாரடைப்பைத் தடுக்கக்கூடிய சக்தி உள்ளிக்கு இருக்கிறதென்பதற்கு தீர்க்கமான ஆதாரம் இதுவரைக்கும் எதுவுமில்லை.

ஆண்களுக்கு மட்டும்!

ஆண்கள் ஏன் பெண்களை விடவும் உயரமாகவிருக்கிறார்கள்? மறுமொழி நியூசிலந்து விஞ்ஞானிகளிடமிருந்து கிடைத்திருக்கிறது. நியூசிலந்து நாடு மந்தை விவசாயத்தில் முன்னணியில் நிற்கும் நாடு. மந்தை உற்பத்திகளின் மகசூல் அதிகரிப்பிற்காக அக்றிசேர்ச் என்ற நிறுவனம் வைக்காற்றோ பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும்போது தற்செயலாக ஒரு தவறு நிகழ்ந்தது. மந்தைகளின் பாலுற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு செய்யப்பட்ட ஆராய்ச்சியில் எலியொன்றில் பாலுற்பத்திக்குப் பொறுப்பான பரம்பரை அலகு *(gene)* என்று இனங்காணப்பட்ட *STAT5b* உடலினின்றும் அகற்றப்பட்டது. இந்த பரம்பரை அலகு அகற்றப்பட்டபின்னர் கருக்கொண்ட எலிகளில் வளர்ச்சி குன்றியது மட்டுமல்லாது பருமன், உரோமச்செறிவு ஆதியனவும் குறைந்து விட்டது. ஆனால் பாலுற்பத்தியில் மாற்றமேதும் ஏற்படவில்லை. இதற்குப் பொறுப்பான பரம்பரை அலகு ஸுவுயுவு5ய என்பது பின்னர் கண்டுபிடிக்கப் பட்டது. *STAT5b* இன் கண்டுபிடிப்பு தற்செயலாக நிகழ்ந்ததெனினும், பருமனானதும் உயரமானதும் உரோமச் செறிவுமுள்ள ஆண் மந்தைகளை விருத்தி செய்வதனாலும் உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்று கூறுகிறார் இவ்வாராய்ச்சிக்குப் பொறுப்பான ஹெலன் டே

காலமும் நேரமும்

நேரம் என்பது படைப்பு முதல் அழிப்பு வரை ஒரே நேர் கோட்டில் செல்வதாகவே கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் கருதுகிறார்கள். ஆனால் ஒரு யுகத்தின் ஆக்கமும் அழிவும் படைப்புக் கடவுளான பிரம்மனின் வடிவிலேயே வருவதாக இந்து தத்துவம் சொல்கிறது. பிரம்மா சுவாசத்தை உள்வாங்கும்போது சகல பௌதீக உலகங்களும் நிர்மூலமாகி அவனுடைய ஆத்மாவுடன் கலந்து விடுவதாகவும் இந்த நேரத்தில் 'நேரம்' என்பது நிறுத்தி வைக்கப்படுகிறது என்றும் வெளிச் சுவாசத்தை மேற்கொள்ளும்போது புதிய யுகம் ஒன்று உருவாகுவதாகவும் கூடவே புதிய 'நேரமும்' பிறக்கிறது என்றும் இந்து தத்துவம் கருதுகிறது. பௌத்தர்களுக்கு நேரம் என்பது 'பிறவித் துன்பத்தின் தொடக்கத்தையும் முடிவையும் தீர்மானிப்பது' என்ற எண்ணமிருப்பதால் நேரமென்பது ஒரு நட்புக்குரிய அம்சமில்லை என்பது கருத்து. ஒருவர் பிறப்பு , இறப்பு, மறுபிறப்பு என்ற சக்கரத்தில் கிடந்து உழன்று மனிதப் பிறவியை உதறித் தள்ளி என்று மோட்ச நிலையை அடைகிறாரோ அன்றுதான் அவர் 'நேரத்திலின்றும்' விடுதலை பெறுகிறார் என்கிறது பௌத்த தத்துவம்.

இந்து தத்துவத்தில் நேரம் என்பது காலன் என்ற கடவுளாகவும் இதுவே சிவன் எடுக்கின்ற பைரவ உருவமெனவும் அப்போது காலனின் (பைரவனின்) மனைவியான காளியாக பார்வதி உருவெடுப்பதாகவும் கருதப்படுகிறது. ஒருவரின் 'காலம்' கனிகின்றபோது 'காலன்' தோற்றம் தருவதாகச் சொல்லப்படுவது இறப்பைக் கொண்டுவரும் சிவனின் இன்னுமொரு தோற்றம்தான் எனவும் கூறப்படுகிறது.

ஜைன (Jain) மதத்தினரின் நம்பிக்கைகளின்படி நேரமென்பது சுழல் சக்கரத்தின் பரிதியில் அசைகின்ற ஒரு புள்ளி' என்று கருதப்படுகிறது. நேரமென்பது சாசுவதமாக (முடிவற்ற) மேலும் கழுமாக அசைந்து கொண்டிருக்கும் ஒரு புள்ளி என்றும், உலக அழிவின் ஆரம்பத்தில் துர்ப்பாம்பு ஒன்றின் ஆதிக்கத்தில் இப் புள்ளி கழே இழுக்கப் படுவதாகவும், இக்காலத்தை 'அவசர்ப்பினி' என்று அழைப்பர் என்றும் கூறுவர். படைப்பின் போது நல்ல பாம்பின் ஆதிக்கத்தில் இப் புள்ளி மேல் நோக்கி அசைகிறது என்றும் இக்காலத்தை 'உத்சர்ப்பினி' என்று அழைப்பரெனவும், மக்கள் இக் காலத்தில் மிக்க மகிழ்ச்சியாகவிருப்பார்கள் எனவும் கருதுகிறார்கள். இக்காலகட்டத்தை 'சூசம' காலமெனவும் கெட்ட காலத்தை 'தூசம' காலமெனவும் அழைப்பர். சூசம காலத்தில் மக்கள் உயரமானவர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் இருப்பார்களெனவும், தாய்மார் எல்லோரும் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுப்பரெனவும் இப்பிள்ளைகள் நாலே நாட்களில் தம்மைத்தாமே பார்த்துக் கொள்வர் எனவும் இதைத் தொடர்ந்து ஏழு வாரங்களில் பெற்றோர்கள் இறந்து விடுவர் எனவும் இந்நடைமுறைகளினால் உலக சனத்தொகை கட்டுப்பாட்டிலிருக்குமெனவும் ஜைன மதத்தத்துவம் கருதுகிறது. இப்படியாக ஐந்து யுகங்கள் கழிந்து ஆறாவது தூசம யுகத்தில் நாமிருப்பதாகவும் மிகவும் கெட்ட துன்பமான காலகட்டமெனவும், இதைத் தொடர்ந்து 'தூசம, தூசம' என்ற இரட்டைத் துன்பமான காலம் வரவிருக்கிறது எனவும் பஞ்சமும், பட்டினியும், கொள்ளை நோய்களும், பெரும் புயல்களும் உலகை வாட்டி வதைக்குமெனவும் குகைகளில் வாழுகின்ற வெகு சிலரே தப்பி உயிர் வாழ்வரெனவும் இதன்பின் உத்சர்ப்பினி காலம் ஆரம்பித்து மக்கள் மகிழ்ச்சியாக வாழ்வரெனவும் ஜைன தத்துவம் சொல்கிறது.

சாணக்கியனின் சாணக்கியம்

சாணக்கியம் என்ற பதம் ஒருவரின் தந்திரோபாய விவேகத்தைக் குறிக்கும். சாணக்கியன் (இவனுக்கு கௌதில்யன் என்று இன்னுமொரு பெயரும் உண்டு) என்ற இந்திய ராஜதந்திரி ஒருவனது புத்தி சாதுர்யத்தின் விளைவால் உருவானது இப்பதம். 'அர்த்த சாஸ்திரம்' என்ற அரசியற் கலை பற்றிய நூலை எழுதிய இவன் சந்திரகுப்த மாமன்னனுக்கு முதல் மந்திரியாகவிருந்து திறம்படச் சேவை செய்தவன்.

ஒருநாள் சந்திரகுப்தன் தான் புதிதாக நிர்மாணித்த அரண்மனைக்குள் சென்று பார்வையிடத் தீர்மானித்தான். சாணக்கியனோ அரசனைத் தடுத்து நிறுத்தி தான் அரண்மனையைப் பரிசோதித்த பின்னரே அரசன் அரண்மனைக்குள் அடியெடுத்து வைக்கலாம் என்று உறுதியாகக் கூறிவிட்டான்.

உள்ளே சென்று தானே வெறுமனேயிருந்த அரண்மனை முழுவதையும் பரிசோதித்த சாணக்கியன், நன்றாக ஆயுதமேந்திய படையினர் சிலரினைத் தந்துதவுமாறு அரசனிடம் வேண்டுகோள் விடுத்தான். ஆச்சரியமாகவிருந்தாலும் சாணக்கியனின் புத்தி சாதுர்யத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்த மாமன்னன் தேவையான அளவு படையினரை சாணக்கியனின் உதவிக்குப் பணித்தான்.

அரண்மனை முழுவதையும் முற்றுகையிடும்படி படையினரைப் பணித்த சாணக்கியன் படையினரைக் கொண்டு நிலத்தில் பதிக்கப்பட்டிருந்த பலகைகளை உடைத்தெறியும்படி கட்டளையிட்டான். அப்போது நிலப்பலகைகளுக்குக் கீழே ஆயுதபாணிகளாக சதிகாரர்கள் பலர் அரசனைத் தாக்குவதற்காக மறைந்துகொண்டிருந்தனர். அரசனைத் தாக்கி அழிக்கும்படி தங்களுக்குக் கட்டளையென்று பிடிபட்ட சதிகாரர்களின் தலைவன் ஒத்துக் கொண்டான். மாமன்னனின் பணிப்பின் பேரில் பிடிபட்டவர்கள் கழுவிலேற்றப்பட்டனர்.

'சதி பற்றி எப்படித் தெரியவந்தது?' என்று அரசன் சாணக்கியனை வினவியபோது சாணக்கியன் சொன்னான் ' நிலப்பலகைகளை நான் பரிசீலித்தபோது சில எறும்புகள் ரொட்டித் துகள்களைக் காவிக்கொண்டு சென்றதைக் கண்டேன். ஒருவருமே குடியிருக்காத அரண்மனைக்குள் எப்படி ரொட்டித் துண்டுகள் வரலாம் என்று சந்தேகித்தேன். அவ்வளவுதான்' என்று சாவகாசமாகப் பதில் கூறினான்.

விமர்சனம்

தின்னா முரசு

மூர்த்தி (மொன்றியால்)

ஒரு
அரசியல்வாதி மதகுரு
பத்திரிகையாளன்
மூவருக்குமிடையே ஒரு போட்டி வைக்கப்பட்டது.

காரமுள்ள மிளகாய், மீன் இந்த இரண்டையும் ஒரு பூனையைத் தின்ன செய்ய வைக்க வேண்டும். எப்படி தின்னச் செய்வது?

"பூனையே.. பூனையே.. நீ மிளகாயையும் மீனையும் தின்னாவிட்டால் உனக்கு பாவம் உண்டாகும். நரகத்துக்கு போய்விடுவாய் எனப் பூனைக்கு பயம் காட்டினால் அச்சத்தில் பூனை இரண்டையும் தின்றுவிடும்" என்றார் மதகுரு.

"பூனையே..! இந்த மிளகாயை முதலில் தின். பரிசாக உனக்கு மீன்கிடைக்கும் என்று ஆசை காட்டினால் பூனை இரண்டையுமே தின்றுவிடும்" என்றார் அரசியல்வாதி.

"மிளகாயை மீனுள் ரகசியமாக திணிக்க வேண்டும். பூனையையும் பட்டினி போடவேண்டும். பிறகு, பூனையே... இந்தா மீன் சாப்பிடு என மிளகாய் திணித்த மீனைக் கொடுத்தால் பூனை இரண்டையும் தின்றுவிடுமே..." என்றான் வெற்றிகரமான பத்திரிகையாளன்.

> **ஜனநாயகத்தின் காவல் நாய்தான் பத்திரிகை. ஜனநாயகத்தின் தூண்களுக்கு எந்தவித பாதிப்பும் வராது காப்பாற்றவேண்டியதும், ஜனங்கள் பாதிப்புக்குள்ளாகும் சமயத்தில் அவர்களை எச்சரித்துப் பணிபுரியவேண்டியதும் பத்திரிகையின் கடமை.**

தினமுரசு ஒரு வெற்றிகரமான பத்திரிகை. கொழும்பை மத்தியாகக் கொண்டு வெளிவர ஆரம்பித்து இன்று உலகெங்கும் சிதறிக்கிடக்கும் ஈழத்தமிழர் அனைவருக்கும் பொதுவான ஒரு சர்வதேச பத்திரிகையாகிக் கொண்டுள்ளது தினமுரசு. இந்த தினமுரசு வெளிவரமுன்பு ஈழத்தமிழர்களிடையே பாரம்பரிய பத்திரிகைகளாக இருந்த வீரகேசரி, ஈழநாடு போன்றவற்றுக்கு இல்லாத ஒரு புது வாசகர் வட்டம் இன்று தினமுரசுக்கு இருக்கின்றது என்றால் அது பிழையான கணிப்பு அல்ல. செய்திகளை முதன்மைப்படுத்தும் கொழும்பு பத்திரிகைகளுக்கும்சரி யாழ்ப்பாண பத்திரிகைகளுக்கும்சரி கிடைக்காத பரபரப்பு வாசகர் வட்டம் வாராவாரம் இப்போது தினமுரசின் வரவிலேயே உருவாகின்றது. கனடாவிலும் சரி வேறு பல நாடுகளிலும்சரி ஈழத்தமிழரிடையே தினமுரசு இப்போது ஒரு *Opinion maker*. இப்பெரும் வளர்ச்சி குறுகிய காலத்தில் எப்படி ஏற்பட்டது?

இலங்கையில் அச்சிடப்பட்ட பாரம்பரியப் பத்திரிகைகளான ஈழநாடு, வீரகேசரி என்பன செய்திகளை தாங்கிவந்ததாலே அவற்றிற்கான எதிர்பார்ப்பு எப்போதும் தொடர்ச்சியாக மக்களிடையே இருந்தது. இது எந்த ஒரு செய்தித் தினசரிக்கும் இருக்கக்கூடிய பொதுவான குணாதிசயமே. (இவ்வகை செய்தி பத்திரிகைகளுள்தான் தினபதி, தினகரன் போன்றவை இருந்தபோதும் மக்கள் மனதில் எப்போதுமே அவை இரண்டாம் தரமாக இருந்து வந்திருக்கின்றன. அதனால் அவற்றைப்பற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.) வீரகேசரி வடக்கு, கிழக்கிலே தனது பெரும்பான்மை வாசகர்களை கொண்டிருந்தாலுங்கூட கொழும்பில் வைத்துத்தான் அச்சிடப்பட்டது. கொழும்பிலிருந்து வடக்கு, கிழக்கிற்கு வினியோகிப்பதால் ஏற்படும் தாமதங்கள் காரணமாக பிந்திக்கிடைக்கும் செய்திகளை வழமையான பதிப்புக்களில் சேர்த்துக்கொள்வதில் வீரகேசரி பின்னடைவு கண்டது. வீரகேசரியின் இந்த பின்னடைவை ஈழநாடு சாதகமாக்கிக்கொண்டது. ஈழநாடு யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டதால் மிக மிகப் பிந்திய செய்திகளை தொலைபேசி, ரேடியோ மூலமாக பெற்றால்கூட அதையே பரபரப்பாக அச்சேற்றி பரவலாக வடக்கு கிழக்கு வாசகர்களுக்கு தர அதனால் முடிந்தது. மோசமான அச்சமைப்பு, மோசமான காகிதம் என பல இருந்துங்கூட மக்கள் ஈழநாட்டை விழுந்தடித்துக்கொண்டு வாங்க இந்த அம்சம் ஒன்றே போதுமானதாகக் காணப்பட்டது. வீரகேசரி, ஈழநாடு ஆகிய இரு பத்திரிகைகளுக்குமிடையே போட்டி இருந்தபோதும் இரண்டையுமே வாசகர்கள் நேசித்தனர். இன்றும்சரி முன்பும்சரி யாழ்ப்பாணத்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் எத்தனையோ செய்திப் பத்திரிகைகள் வெளிவந்தாலும் வீரகேசரியும் ஈழநாடும் எப்போதுமே தனித்தன்மையுடன் கவரப்பட்டதற்கான ஒரே காரணம் அவை செய்திகளை திரிபுபடுத்துவதையும், பிரச்சாரங்களுக்கு அப்பட்டமாக உதவிபுரிவதையும் கூடிய வரை தவிர்த்து ஒரு பத்திரிகாதர்ம நியாயத்துக்கு கட்டுப்பட்டதேயாகும். இப்பத்திரிகைகளைப் படிக்கும்போது அவை ஒரு *Institution* என்பது தன்னையறியாமலே மனதில் தோன்றியதற்கு அவை செய்திகளை எழுதும் விதங்களில் காட்டிய சீர்கொண்ட தன்மையே காரணம் என்பதை மறுக்க முடியாது. ஆனால் துரதிஷ்டவசமாக காலவோட்டத்தில் ஈழநாட்டில் வீசிய புயலுக்கு தாக்குப் பிடிக்க முடியாது ஈழநாடு உடைந்து நின்று போய்விட்டது. வீரகேசரி மட்டும் எஞ்சியது.

காலம் மாறியது. ஒரு தலைமுறை மறு தலைமுறையை முந்திக்கொண்டது. ஈழத்து அரசியல் நிகழ்வுகளின் வேகமும், ஆயுதபோராட்ட அரசியலின் காரமும் அதிகரித்தன. இவற்றுள் வறுத்தெடுக்கப்பட்ட மக்கள் செய்திகளோடு அரசியல் சார்பு, மாற்றுக் கருத்துக்களையும் அறிய ஆர்வப்பட்டனர். இவையெல்லாம் வீரகேசரிக்கு பெருமளவு ஒத்து வந்ததாக தெரியவில்லை. கருத்துக்களை விட செய்திகளையே வீரகேசரி இன்னும் நம்பியது. அரசியல் சார்பின்மை, மாற்றுக் கருத்துக்களை தொடாதமை என்பவற்றால் செய்திகளில் நம்பகத்தன்மை இருந்தாலும்கூட யாழ்ப்பாணத்தில் இருந்து தனது பத்திரிகையை வெளியிடும் உரிமையே வீரகேசரி நிர்வாகத்துக்கு மறுக்கப்பட்டது. இவ்வாறு வடக்கு கிழக்கில் வீரகேசரி மட்டுப்படுத்தப்பட்டாலும் மவுசு குறையவில்லை. வெளிநாடுகளில் வீரகேசரியை கண்ணால் பார்ப்பதற்கு அகதிகள்

தவம் கிடந்த காலமும் உண்டு. தொடர்ந்தும் செய்தியை முதன்மைப்படுத்தியதால் உள்நாட்டிலும்சரி வெளிநாட்டிலும்சரி ஈழத்தமிழர்களுக்கான நம்பகத்தக்க ஒரேஒரு பத்திரிகை என்ற பெயர் வெகுநாட்களாக வீரகேசரிக்கு மட்டுமே கிடைத்தது.

ஜனநாயகத்தின் காவல் நாய்தான் பத்திரிகை. ஜனநாயகத்தின் தூண்களுக்கு எந்தவித பாதிப்பும் வராது காப்பாற்றவேண்டியதும், ஜனங்கள் பாதிப்புக்குள்ளாகும் சமயத்தில் அவர்களை எச்சரித்துப் பணிபுரியவேண்டியதும் பத்திரிகையின் கடமை. மக்களுக்கான பத்திரிகை மக்களுக்கு பிரச்சாரங்களை செய்வதில்லை. மக்களுக்கான கடமையைத்தான் துணிச்சலாக செய்யவேண்டும். மக்களுக்காக என்று சொல்லிக்கொள்ளும் அரசியல் அமைப்புக்கள் மக்களுக்குப் பாதகமான நிலைப்பாடுகளை எடுப்பதைத் தெரிந்துகொண்டும் பத்திரிகைகள் மௌனித்தால் அது துரோகம். பொதுவாக அரசியல் அமைப்புக்கள் பத்திரிகை நடாத்தும்போதுதான் ஏதோ ஒரு காலகட்டத்தில் அவை தம் கடமையைவிட தாம் சார்ந்த அமைப்புக்களுக்கான பிரச்சாரத்தையே கவனத்தில்கொள்ளும் அபாயம் இருக்கிறது. இதனால்தான் அரசியல் நிர்வாகிகளின் தொடர்பே இல்லாத, கட்சிகள் அமைப்புகளின் பக்கபலமில்லாத பத்திரிகை நிறுவனங்களே நம்பகமானவை என கணிக்கப்படுவதுண்டு.

வீரகேசரி ஒற்றையாட்சி செய்த நேரத்தில் காலம் தொடர்ந்தும் ஓடியது. இராணுவ பலங்கள் அதிகரித்தன. மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தன. அரசியலில் பிரச்சனைக்குரிய ஆயுதங்கள் பல பிரயோகிக்கப்பட்டபோதும் அவையெல்லாம் பூடகமான செய்திகளாக மட்டுமே வீரகேசரியில் வெளிவந்துகொண்டிருந்தன. அத்து மீறல்கள், பலம் வாய்ந்தவர்க்கு மாற்றுக் கருத்துக்கள், அபிப்பிரயாயங்கள் என்பவற்றை அறிய வாசகர்கள் ஆர்வம் காட்டினாலும் வீரகேசரிக்கு தொடர்ந்து ஏற்பட்ட பல நடைமுறைச் சிக்கல்கள் அவற்றைத் தொடவே அனுமதிக்கவில்லை.

இந்நிலையில் வீரகேசரிக்கு மாற்றாக செய்திகளை துணிச்சலாக தரும் ஒரு மாற்று தினசரி வெளிவரவேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் ஏற்படலாயிற்று. இவ்வெண்ணம் பத்திரிகை வெளியிட்டு பணம் சம்பாதிப்பதற்காக என்பதைவிட கருத்துக்களின் வெளிப்பாடுகளை மறைக்காததுடன் அவற்றை மறுக்காத பத்திரிகை ஒன்று வேண்டும் என்ற ஆதங்கத்தில் எழுந்தேயாகும். இவ்வெண்ணம் தீராத ஏக்கமாக மாறிய நேரத்தில், பலர் முயன்றும் முடியாத நிலையில் ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் என்றுகொண்டு இயக்க பின்னணி கொண்ட சிலர் முன்வந்தனர்.

தினமுரசு உருவாகியது.

ஆரம்பத்தில் தினமுரசு ஒரு தினசரிப் பத்திரிகையாக வெளியிடப்படவே திட்டமிடப்பட்டிருக்கவேண்டும். 'தின'முரசு என்ற பெயர் இருந்தும் நிர்வாக வசதி காரணமாகவோ என்னவோ வார வாரா தினமுரசாக இது வெளிவர ஆரம்பித்தது. ஆரம்பத்தில் பத்திரிகையின் உள்ளடக்கமும், நிறமும் ஒரு திருப்பு முனையாக ஈழத்தமிழ் வாசகர்களுக்குத் தெரிந்தது.

என்னவிருந்தாலும் தினமுரசு வாரமலர் வீரகேசரி, ஈழநாடு என்பவைபோல செய்திப்பத்திரிகை அல்ல. அதில் செய்திகளும் இருக்கிறது! அரசியல் ஆய்வுக் கட்டுரைகள், அரசியல் வரலாற்றுக்கட்டுரை இருக்கிறது. அதைவிடவும் சினிமாக்கிசுகிசு, ஆன்மீகம், கவிதை, கவிதைப்போட்டி, வாசகர் கடிதம், தகவல்கள், லேடீஸ் ஸ்பெஷல்ஸ், சமையல் குறிப்பு, ராசிபலன், பரிசுப்போட்டிகள், பாப்பா பகுதி, வர்ணம் தீட்டும் போட்டி, சிறுகதைகள், தொடர்கதைகள், பேனாநண்பர் பகுதி, கேள்வி பதில் பகுதி, ராமாயணம், இதிகாச தொடர், இலக்கிய பகுதி, புகைப்படவிநோதங்கள் எனப் பல விடயங்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கும். குமுதம், ஆனந்தவிகடன் போன்ற தமிழக சஞ்சிகைகளதும் மித்திரன் போன்ற கொழும்புப் பத்திரிகைகளினதும் சாற்றை எடுத்து அரசியலுடன் கலந்த கலவைதான் தினமுரசோ என்று நினைக்கத் தூண்டும் அளவுக்கு இது ஒரு பலசுவை இதழ்! இவை இன்றுவரை தொடர்கின்றன.

பலசுவை விசயங்கள் தினமுரசிலிருந்தாலும் தினமுரசின் வெற்றிக்கும் மக்களிடையே அதற்கு கிட்டிய கிட்டிவரும் பெரும் அங்கீகாரத்துகும் ஒரே ஒரு காரணம்தான் இருக்கிறது...

அதுதான் அரசியல்!

உண்மைதான். ஆரம்பகால தினமுரசின் இதழ்களை பார்த்தால் பலரது அடிகளாலும் நொந்துப்போய்க் கொண்டிருந்த தமிழ் சமுதாயத்திற்கு மருந்து போடவந்திருக்கும் (நோயைத் தீர்க்க அல்ல) ஒரு மருத்துவனாகவே அது தென்பட்டது. அதாவது ஒரு தைரியமான பத்திரிகாதர்மம் தினமுரசூடாக கண்ணில் பட்டது. ஒரு அரசியலமைப்பினால் வெளியிடப்படுவதாக ஓரிருவரால் சந்தேகிக்கப்பட்டாலும் அந்த அமைப்பின் ஊதுகுழலாக அறவே தென்படாத நேர்மை புலப்பட்டது. கூடவே பலகாலமாக இயக்க அரசியலுள் வாழ்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட சாதாரண பொதுமக்களும் பிரச்சார நெடியின்றி சுதந்திரமாக படிக்கக்கூடிய செய்திகளையும் சேர்த்து தரும் காத்திரமான ஊடகமாக தினமுரசு தென்பட்டு வந்திருக்கிறது. தினமுரசு ஆரம்பத்தில் எடுத்த அரசியல் நிலைப்பாட்டிற்கும் பத்திரிகாதர்மத்திற்கும் எதிரிகள் ஏற்படாமலும் இல்லை. எதிரிகளும் மகிழ்ந்து படிக்கும் பத்திரிகையாகவும் ஒரு சில இடங்களில் எதிரிகளே தடைசெய்து மகிழ்ந்த பத்திரிகையாகவும் தினமுரசு இருந்தது. மொத்தத்தில் அனைவருக்கும் மகிழ்ச்சியே கிட்டியது.

ஈழத்தமிழர்கள் எப்போதுமே அரசியலுக்கு முதலிடம் கொடுப்பவர்கள். எனவே இன்னும் விமர்சிக்கப்படாதிருந்த அரசியலையும், மறைக்கப்பட்ட பல தவறுகளையும் தமக்கு வெளியே கொண்டு வந்து தரும் தினமுரசை பிரமிப்புடனும், நன்றியுடனுமே படித்து முடித்தார்கள். அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை தொடர் படித்து அரசியல் சரித்திரம் அறிய வேண்டிய நிலையில்தான் தமிழ் மக்கள் எழுத்துலக இருட்டில் வாழ்ந்தபடியால் அத்தொடர் கொடுத்த பரபரப்பும் தொகுத்துக்கொடுத்த மறைக்கப்பட்ட செய்திகளும் அதிகம். நாரதர் எக்ஸ்ரே ரிப்போட்டினைப் படித்துத்தான் பலருக்கு போர்கால அரசியல் யுத்த நிலவரங்களைதெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு. ராஜதந்திரி அலசும் பக்கத்தை படிக்கும்போது இன்னும் அலசப்படாத விடயங்கள் எவ்வளவு இருக்கின்றன என்ற ஏக்கம் ஏற்படும். பிரபல்யம் பெற்ற இப்பகுதிகளை எழுதுபவர்கள் ஏற்கனவே இயக்கங்களின் சம்பந்தமும் ஈடுபாடும் கொண்டவர்களாக நிட்சயம் இருந்திருப்பார்கள் என்பது அவற்றை எழுதும் பாணியில் வீரியம் இருப்பதால் கவனத்தில்படுகிறது. கொழும்பிலிருந்து இயக்க சம்பந்தமான விடயங்களை எழுதித் தருகின்ற ஒரே ஒரு பத்திரிகை தினமுரசுதான் என்று வெளிநாட்டிலுள்ள தமிழ் பத்திரிகையாளர்களே பொறாமைப்படும் அளவுக்கு கொழும்பில் கிடைக்கப்பட்டதாக காணப்பட்ட பத்திரிகை சுதந்திரம்

தினமுரசில் மட்டுமே காணப்பட்டது. பலனும் கிட்டாமலில்லை... இன்று கொழும்பில் தினமுரசு படிக்காத தமிழ் குடும்பமே இல்லை. வெளிநாடுகளிலும் தினமுரசை ஓடர் செய்துதான் பெற வேண்டும் என்ற கிராக்கி. இத்தகையை பெரும் எதிர்பார்ப்பை தக்கவைத்துக்கொண்டு தினமுரசு வெளிவரும்போது வாசகர்களின் எதிர்பார்ப்பும் இன்னும் அதிகரித்தது. தமக்காக, தமது நலன்களுக்காக குரல் கொடுக்கத் தக்க அல்லது தெளிவான அரசியல் பாதையையேனும் சூசகமாகத்தன்னும் காட்டத்தக்க தக்க பத்திரிகை ஒன்று வெளிவந்து விட்டது என்று ஒருவகை குதூகலிப்பு.

இத்தகைய பத்திரிகை எம்மிடையேயிருக்கும் வாசிக்கும் பழக்கமுள்ள எமது கடைசித் தலைமுறைக்கு புதிது. அரசியலால் அலைக்கழிக்கப்படும் இத்தலைமுறையின் பெரும்பான்மையோர் தினமுரசை ஆர்வத்துடன் படிக்கிறார்கள். முரசு தரும் அரசியல் கண்ணோட்டங்களை கவனமாக மனதில் எடுத்துக் கொள்கிறார்கள். முரசு சொன்னால் சரியாகத்தானிருக்கும் என்றும் நம்புகின்றார்கள். பலசுவை விடயங்கள் இருந்தாலும்கூட தினமுரசினை குமுதம் வாங்குவது போல நினைத்து யாரும் வாங்கி படிப்பதில்லை. இதை யாரும் மறுக்க முடியாது.

வாசகர்கள் நிலமை இப்படி இருக்கையில், சமீப காலமாக தினமுரசின் நிலைப்பாட்டில் ஒரு மாற்றம் தென்படுவது அவதானிக்க கூடியதாக உள்ளது. பத்திரிகை தொடர்ந்து படித்து வருபவர்களுக்கு தினமுரசின் ஆரம்பகால நிலைப்பாட்டிற்கும் தற்போதையே போக்குக்கும் ஒரு பெரும் வித்தியாசம் பளீர் என புலப்படுகிறது. இது இன்று சாதாரண தெருவீதி வாசகர்களே அலசும் ஒரு விடயமும் ஆகிவிட்டது. தினமுரசிற்குரிய நம்பகத் தன்மையையே இது பெரும்பான்மை வாசகர்களிடம் கேள்விக்குறியாக்கி கேலிப்பொருளாக கூட ஆக்கிவிடுமோ என்பதும் ஆதங்கத்துக்குரிய விடயமாகி விட்டது.

இதற்கு காரணம்? அரசியல்தான்!

தினமுரசு இலங்கை அரசுடன் நல்லுறவை வைத்துள்ள இயக்கம் ஒன்று நடாத்தும் பத்திரிகை என்பது தற்போது யாவரும் அறிந்த ரகசியமாகிவிட்டது. இவ்விடயம் அதிர்ச்சியுடன் பலரால் ஜீரணிக்கப்பட்டது. தினமுரசின் ஆரம்பம் முதல் வெகுநாட்களாகவே இந்த இயக்க சம்பந்த விடயம் மறைத்து வைத்திருக்கப்பட்டது. அதற்கான சரியானதொரு காரணம் இல்லாமலில்லை. அது தவறென்றும் விசயம் புரிந்தவர்கள் கருதவும் இல்லை.

தினமுரசை வெளியிடும் இயக்கத்தினர் ஆயுதப் போராட்ட ஆரம்பகாலத்தில் தீவிரவாத இடதுசாரிபோக்கு கொண்ட தமிழ்படை ஒன்றின் ஒரு பிரிவாக இருந்தவர்கள். பின்பு ஆயுதத்தை கைவிட்டுவிட்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் சேர்ந்து ஸ்ரீலங்கா பாராளுமன்ற அரசியலை முழுமுச்சாக ஏற்றும்கொண்டவர்கள். பாராளுமன்றம், அதற்கான தேர்தல் என்பன மீண்டும் தமிழ்மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக இன்று தமிழ்பகுதிகளிலே பாடுபட்டுக்கொண்டிருப்பவர்கள். ஆயினுங்கூட தமிழ் ஈழத்திற்காக இன்றுவரை தீவிர ஆயுதப் போராட்டம் நடாத்தும் இயக்கத்தினரால் ஆரம்பகால முதலே இவர்கள் 'துரோகிகள்' என்று முத்திரை குத்தப்பட்டதுடன் மரணக்குறிக்கும் உள்ளாக்கப்பட்டவர்கள். இலங்கை அரசுடன் ஒத்துப்போகும் இவர்களின் இராணுவ, அரசியல் நடவடிக்கைகள் தமிழ் மக்களால் பரவலாக ஒத்துக்கொள்ளப்படவில்லை என்ற நிலை தெரிந்தும் "ஜனநாயக அரசியல் தமிழ் மண்ணில் வர தொடர்ந்தும் பாடுபடுவோம்" என்ற வலுவிழக்காக கோஷத்துடன் ஆயுதங்களையும் கையாளும் வசதியுள்ளவர்கள்.

இத்தகைய இக்கட்டான நிலையிலுள்ளவர்கள் தாம் சார்ந்த கொள்கைகளை பரவலாக மக்களுக்கிடையே வெளிக்கொணரவே பத்திரிகையே ஒரு ஊடகமாக பயன்படுத்த முயன்றிருப்பார்கள் என நம்ப இடமுண்டு. (அதுதானேயப்பா தினமுரசின் தோற்றத்திற்கான காரணமே!) நிச்சயமாக பலசுவை இதழ் வெளியிடுவது இவர்களின் ஆரம்ப கால நோக்கமாக இருந்திருக்காது. இந்த நோக்கம் கொண்டவர்களும் முன்னாள் இயக்கத்தொடர்பு உள்ளவர்களும் சேர்ந்தே ஒரு பண்பட்ட பத்திரிகையாக தினமுரசை மக்களுக்கு காட்ட பத்திரிகையின் போக்கையும், கோட்பாடுகளையும் நிர்ணயித்து இருக்கவேண்டும். கசப்பான உறைப்பான விடயங்களையும் பூனைக்கு மிளகாய் கொடுத்ததுபோல பல ஜனரஞ்சக இணைப்புகளுடன் மக்களுக்கு தரும் வல்லமை அவர்களிடம் இருந்தது. அந்த முயற்சி வெற்றியளித்ததும் உண்மை.

பிரச்சனைக்கு வருவோம். முதலாவதாக பத்திரிகை என்ற வகையிலும் சரி அரசியல் பின்னணி கொண்ட வகையிலும் சரி தினமுரசு ஜனநாய பாராளுமன்ற அரசியலையே முற்று முழுதாகவும் மறுதலித்து வெளிவரவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். அதே சமயத்தில் பாராளுமன்ற அரசியலை ஆதரிக்கின்றோம் என்பதற்காக தமிழ் தேசியத்தை முற்றாக இழந்த நிலையில் தனது அரசியல் நிலைப்பாட்டை எடுக்கவும் இல்லை. இவற்றிற்கிடையே ஒரு இலாவகமான நிலைப்பாட்டை வைத்துக் கொண்டுதான் மடலுக்கு மடலாக முரசம் வரைந்து கலக்கிக் கொண்டிருந்தது. ஆனால் இவையெல்லாம் அந்தநாள் ஞாபகம். *good old days!*

அப்போ இன்றைய தினமுரசின் போக்கு? இதுதான் பல கேள்விகளை எழுப்புகிறது. என்ன சொன்னாலும்சரி தினமுரசு பத்திரிகையுடன் தொடர்பு கொண்டவர்கள் பாராளுமன்ற அரசியலை வெறுத்து பின்னர் மீண்டும் பாராளுமன்ற அரசியலை ஆதரித்து பலவிதமான மாற்றங்களை வெளிப்படையாக காட்டிய பின்னரும் தொடர்ந்தும் உணர்வுடன் இயங்கிக்கொண்டிருப்பவர்கள். என்னதான் நிலைப்பாடுகள் மாறினாலும், இவர்களது கடைசி நிலைப்பாடு பாராளுமன்ற அரசியல்தான்! (இலங்கை போன்ற ஒரு நாட்டில் இவ்வகை நிலைப்பாட்டை எடுப்பது சுலபமான காரியம் அல்ல.) இந்நிலையில் பாராளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையில் தினமுரசின் பின்னணியில் உள்ள அமைப்பு இயங்குமானால் அதை தைரியமாக அவ்வப்போது சொல்லவேண்டியதும் தினமுரசின் ஒரு கடமையாகவே இருக்கிறது. அவ்வமைப்பினால் வடக்கிலும்சரி கிழக்கிலும்சரி தாம் சார்ந்த பாராளுமன்ற அரசியல் வளர்ச்சிக்கு செய்யப்படும் முன்மாதிரி முயற்சிகளோ அல்லது அதற்கு முட்டுக்கட்டைகளோ அரச பகுதிகளிலிருந்து வந்தாலும் சரி அரசோடு இன்று ஆயுதப் போர் புரியும் தமிழ் படையிடமிருந்து வந்தாலும்சரி அதைப்பற்றிய விபரங்களை மக்கள் எதிர்பார்ப்பதும் அதை விளக்கமாகவும் தெளிவாகவும் மக்களுக்கு தரவேண்டியதும் யதார்த்தம். அது ஒரு பத்திரிகையின் ஜனநாயகக் கடமையும்கூட. ஆனால் தினமுரசு பத்திரிகை தன்னை வெளியிடும் அரசியல் அமைப்பு செய்யும் 'சாதனை'களைசரி, அதற்கு ஏற்படும் 'வேதனை'களையும் சரி தமிழ் மக்களுக்கு மழுப்பிவிடுவதும் மறைத்து விடுவதுமாகவே இன்றுவரை

எழுதுகின்றது. தினமுரசை வெளியிடும் அமைப்பு தமிழர் பிரதேசத்தில் ஜனநாயகத்தை நிலைநாட்ட எடுக்கும் முயற்சிகளுக்கு (அதன் அங்கத்தவர்களுக்கு ஏற்படுத்தப்படும் உயிராபத்து உட்பட) பல இடர்கள் நடந்தாலும் அது பற்றி அலசல்கள் எங்கே? மற்றவர்க்குக் தெரியாதஅனைத்தும் அறிந்து எழுதும் அதிரடி ஐயாத்துரைக்கே இதுபற்றிய விபரங்கள் தெரியாமலிருக்க நியாயமில்லையே... ஏன் மௌனம் கொண்டீரையா..? என்ன காரணம்??

இதுதான் பெரும் வியப்பு!

தினமுரசை வெளியிடும் அமைப்பு பற்றிய சாதமான விடயங்களை தினமுரசு பத்திரிகையை பிரசுரிக்காது போவதற்கு ஒன்றில் ஜனநாயக நேர்மை காரணமாயிருக்கலாம் அல்லது மற்றைய பகுதி சொல்வது போல் உண்மையாகவே தாங்கள் சார்ந்த அமைப்பு 'துரோகி'களாக இருக்கிறோமே என்ற கூச்ச உணர்வும் காரணமாயுமிருக்கலாம்.

தினமுரசின் பத்திரிகாதர்மம் இன்று போர்பரணியை புதிய பாணியில் தரும் அரசியலாகி விட்டது. தமிழ் படையே நினைக்காத அளவுக்கு தமிழ் படையின் ஒவ்வொரு போர் நிலை முன்னேற்றத்தையும் தினமுரசு ஆஹா.. ஒஹோ.. பேஷ்.. பேஷ்.. என்று எழுதி எழுதி இன்று தமிழ் படை ஆதரவாளர்களுக்கே கூச்சம் உருவாகிவிட்டது. எதிரிகூட பாராட்டுகிறான் என்று இப்போது யாரும் நினைப்பதுமில்லை. இது ஒரு விபரமான *Hi-Tech* சுத்துமாத்து என்றுதான் அளவுக்கு மீறிய பாராட்டை எடுக்கும் யதார்த்த உலகம் இது.

இன்று தமிழ் பகுதியில் அரச படைகளோடு போரிடும் தமிழ் படைகளுக்கு எதிரான கருத்துக்கள் பரப்புப்படுவதை ஈழத்தமிழரின் மிகப்பெரும்பான்மையானோர் அடிமனதுவரை ஏற்பதாக தென்படவில்லை என்பது உண்மை. (இதற்கு பலரது தீவிர சுதந்திர உணர்வு மட்டும்தான் காரணம் என்பதுமில்லை.) அதிலும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளில் வசிப்பவர்கள் அரச படைகளோடு போரிடும் தமிழ்ப் படையை மனதாரக் காதலிக்கிறார்கள். உதாரணத்திற்கு கொழும்பை எடுத்துக்கொண்டால் அங்கு வாழும் தமிழர்கள் தமது அன்றாட வாழ்வில் தமிழர் என்ற காரணத்தால் நேரடியாக சிங்கள பேரினவாதத்தால் அடையும் கிலேசங்களுக்கும், இனவாதம் மனதில் இருப்பதால் (இரண்டு பகுதியிடமும்தான்) வரும் கோபத்திற்கும் வடிகாலாகத்தான் வடக்கு கிழக்குத் தாக்குதல்களில் அரச படைகளுக்கு ஏற்படும் சேதங்களைக் கண்டு உள்ளூரக் குதூகலிக்கிறார்கள்! "என்னாலதான் இங்கை அடிக்க முடியேல்லை. அங்க அவங்களாவது அடிக்கிறாங்கள்..." என்ற மனோநிலை!

இந்த மனோநிலையின் அச்சொட்டான வெளிப்பாடாக தெரிவதுதான் தினமுரசின் இன்றைய அரசியலின் நிலைப்பாடு! கொழும்பு வாழ் யாழ் தமிழ் மக்களின் மனப்பாங்கிற்கு தீனிப்போட்டுக் கொண்டு வரும் மித்திரனாகத்தான் தினமுரசு உருவாகிக்கொண்டு போகிறது. கூடவே வடக்கு கிழக்கில் அரச படைகளுக்கு எதிராக போராடும் இயக்கத்தின் மனம் கோணாத வகையில் தனது எழுத்துக்களை வைத்துக் கொள்வதில் தற்போது தினமுரசு காட்டும் அதீத கவனமும் இன்று சகலரும் அவதானிக்கும் விடயமாகவும் இருக்கிறது.

போகட்டும்...

நல்ல பத்திரிகை நல்ல எதிர்க்கட்சி என்று சொல்வார்கள். அப்படியானால் தினமுரசு இப்போது யாருக்கு எதிர்கட்சி?

ஹையா இருக்கவே இருக்கிறது கூட்டணி. 'ஐயா வாங்க அம்மா வாங்க நீங்களும் ரெண்டு சாத்து சாத்திட்டு போங்க' என்ற தர்ம அடிதான் கூட்டணிக்கு விழுகின்றது. ஒரு வகையில் பார்த்தால் பாவம் கூட்டணியினர்.

கூட்டணியை என்றோ மக்கள் நிராகரித்து விட்டார்கள். பழைய தலைமுறையை ஒதுக்கிவிட்டு புதிய தலைமுறையின் கீழ் தமிழ் மக்கள் அணி திரண்டு விட்டார்கள் என்று சொல்வதை எழுதியதை படித்து படித்து படித்து வந்த அனுபவத்திற்கே இன்னும் ஓரிரு வருடங்களில் ஏறக்குறைய 25 வயதாகிவிடும். இவ்வளவு காலத்திற்கும் பின்பும் இன்றும் கூட்டணிதான் தமிழ் மக்களின் எதிரியாகக் காட்டப்படுகின்றார்கள் என்றால் அடேயப்பா.. கூட்டணி சாகாவரம் பெற்ற சிரஞ்சீவியாகத்தான் இருக்க வேண்டும்... அல்லது கூட்டணிக்கு அடுத்த தலைமுறை இன்னும் ஏமாளியாக இருக்கவேண்டும். செத்த பாம்பை காற்றடித்து காற்றடித்து பெருப்பித்து விட்டு அதே பாம்பை கண்டு பயந்து போய் அடிக்கும் காட்சிதான் சிலவேளைகளின் கூட்டணி பற்றி தினமுரசு எழுதும் போது மனதில் தெரிகின்றது. சித்திரத்துக் கொக்கே! ரத்தினத்தை கக்கு என்றால் கூட்டணிதான் என்ன செய்யும்?

மற்றவர்கள் போலல்லாது கூட்டணியின் பழைய தலைமை எமக்கு நினைவு தெரிந்த காலம் முதல் பாராளுமன்ற அரசியல்காரர்கள் மட்டுமே...! அவர்களை அரசியலிலிருந்து 'விரட்ட' சுலபமான வழி புதிதாக பாராளுமன்ற அரசியல் நிலைப்பாட்டை எடுத்தவர்கள் தம்மைச் சரியாக இனங்காட்டிக்கொண்டு மக்கள்முன் செல்வதுதான். அதுதான் மக்களது எதிர்பார்ப்பும்கூட. அதன்பின் மக்கள் தமக்கு வேண்டியதை முடிவுசெய்வார்கள். அதுதான் ஜனநாயகம்! **அதை மழுப்புவோரை இனங்காட்டவேண்டியதே நேர்மையான பத்திரிகைகளின் கடமை.**

நிற்க.

இன்றைய நிலையில் தினமுரசு என்றால் பரந்து பட்ட வாசகர் எண்ணிக்கையைக் கொண்ட ஒரேயொரு சர்வதேச ஈழத்தமிழர் பத்திரிகை என்ற உண்மை நிலை உண்டு. தினமுரசுக்கென்று ஒரு தனி வாசகர் கூட்டமும், தினமுரசை நம்பித் தம் கருத்துக்களையே உருவாக்கும் பிறிதொரு வாசகர் வட்டமும் அதிகரித்து வருகின்றது. போர் பரணியானாலும்சரி, பாராளுமன்ற அரசியலானாலும்சரி, சினிமாவின் கலைச்சேவை புரியும் நடிக நடிகையின் கிசுகிசுவானாலும்சரி, பூலான்தேவியின் வீரதீரமானாலும்சரி எல்லாமே மக்களுக்கான படைக்கப்படும் ஆக்கங்களே எனக்கருதினால் மக்களைப்பற்றிய பொறுப்புணர்வும் அதே பத்திரிகைக்கு இருக்கும் என்ற நம்பிக்கையில் கடைசியாக ஒரு வேண்டுகோளையே கொடுக்கலாம்.

தினமுரசே! ஈழமக்கள் அனைவருக்கும் ஜனநாயகத்தை எழுத்தில் விளக்கிக்காட்டும் ஒரு முன்னணி பத்திரிகையாக நீவிர் திகழவேண்டும். தமிழர் சுதந்திரத்தை மதிக்கின்ற தமிழரின் ஜனநாயகத்தை மதிக்கின்ற காத்திரமான அரசியலை தமிழ் மக்களுக்கு மீட்டித்தர தினமுரசும் சேர்ந்தே பாடுபடவேண்டும். அதுதான் இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்குத் தேவைப்படும் சுதந்திரம்!

சிந்தித்துப்பார்த்தால் இன்று அனைத்து ஈழத்தமிழ் மக்களின் பசியே 'இந்த சுதந்திரம்'தானே!

அப்படியிருக்கையில்...

பசித்தாலும் புல்லைத்தின்னா புலி—
அது வீரத்தோடு கூடிய விரதம்.
பசித்தாலும் புல்லைத்தின்னா முரசு?
இது விவேகத்தோடு கூடிய பட்டினி!

அக்கினியோடு சங்கமித்த அக்கினிக்குஞ்சு

ஜோர்ஜ் இ.குருஷேவ்

தாயகம் இதழ் முதன் முதலாக வெளிவந்த போது முதலாவது வாசகர் கடிதம்.. துணிச்சலுக்கு பாராட்டுக்களுடன் 'உங்கள் முயற்சிக்கு தோளோடு தோள் கொடுப்பேன்' என்ற உறுதி மொழியும் கூடவே. ஆனல் பெயரோ.. பெண் பெயர் போல! பெண் வாசகர்களுக்கு இவ்வளவு துணிச்சலா என்ற நினைவுடன் இருந்த போது. பின்னல் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடும் போது நிலா என்ற பெயர் நிலாவெளி என்ற ஊரின் சுருக்கமாம் என்ற விளக்கத்துடன் அறிமுகமாகியவர் தான் நிலா குகதாசன்.

தனது கவியரங்க நாட்கள், சிறைச்சாலை நினைவுகள், தமிழகத்து கிராம வாசம் என்று பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டு உள்ளங்கள் நெருங்கிய போதும் இருவருமே ஒருவரை ஒருவர் நேரில் கண்டதில்லை. பின்னல் ஒரு தடவை ரிச்மண்ட் ஹில் கோயிலில் தாயகத்தை விற்கச் சென்ற போது, 'அண்ணை, நீங்கள் தாயகமோ' என்று ஒருவர் கேட்டு நெருக்கமானர்.

'ஓமோம்'

'அப்ப நீங்கள் யார்?'

என்னை அறிமுகம் செய்து 'உங்கட பேர்?' என்று என்று கேட்க, 'நாங்களும் தாயகம் தான்' என்று பதில் வந்தது. ஆச்சரியத்துடன் உற்றுப் பார்க்க 'நான் தான் நிலா' என்றதுமே இருவருமே எங்களை அறியாமல் கட்டியணைத்துக் கொண்டோம். அந்த அணைப்பை விடாமலேயே நீண்ட நேரம் பேசிக் கொள்ளும் அளவுக்கு நெருக்கமாகும் அளவுக்கு எங்களுக்குள் ஒரே சிந்தனைப் போக்கு இருந்தது. இந்த நட்பு தாயகம் குடும்பத்துடன் வெறும் இலக்கிய ரீதியாக மட்டும் அல்லாமல் தாயகக் குடும்பத்தில் ஒருவராகவே அவரை இனம் காட்டியிருந்தது. தாயகத்தின் சிறப்பிதழ்கள் எல்லாவற்றுக்கும், ஆண்டு மலர் பொங்கல் கிறிஸ்மஸ் புத்தாண்டு என்று எல்லாவற்றுக்கும் முதல் பக்கக் கவிதை நிலாவிடம் இருந்து தான் வந்தது. பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக இருந்ததால் எல்லோரும் அவரை சி.ஓ என்று அழைப்பது போல நாங்களும் அழைத்துக் கொள்வதுண்டு. தாயகத்தில் விமர்சனம் என்றாலும், படைப்புகள் என்றாலும் நிலாவைக் கவர்ந்து விட்டால் 'அந்த... மாதிரி' என்று ஒரு சிரிப்புடன் பாராட்டிக் கொள்வார்.



நிலா குகதாசன்

1958 1997

எங்கள் சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் அநீதியையும் அவலங்களையும் கண்டு மௌனமாக இருக்க முடியாமல் குமுறும் ஒரு கவிஞனுக்குரிய எல்லா இயல்புகளுமே நிலாவுக்கு இருந்தன. தாயகத்தில் எழுதிய கவிதைகள் எல்லாமே 'காட்டை வேக வைக்கும் கொதிப்புடன் கனல் விட்டெரியும்' அக்கினிக்குஞ்சின் வேகத்தில் தான் இருந்தன.

'எல்லோருக்கும் இனியவன்' என்ற சொல் நிலா ஒருவனுக்குத் தான் பொருந்தும். யாருமே நிலாவைக் குறை சொல்ல முடியாதளவுக்கு இனிமையான குணம் கொண்டவன். நிலாவின் திருமணத்தின் போதும் கூட, மூர்த்தியுடன் சேர்ந்து நிலாவின் 'பளபளக்கும் தலையுடன்' காட்டூன் போட்டு கவிதை எழுதி தாயகத்தில் வெளியிட்டு குறும்பு செய்தோம்.

கடைசியாக திருமண வீடொன்றில் எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்த பின்னர், தனக்கு நோய் வந்த விடயத்தை மூர்த்திக்கும் எனக்கும் எந்த வித துயரமும் இல்லாமல் இயல்பாகச் சொல்லிக் கொண்டிருந்த போது, ஏதோ தமிழ்ப் படத்தில் வருகின்ற கதை மாதிரி என்று நாங்கள் நம்ப முடியவில்லை. 'இல்லை, உண்மையாகத் தான்' என்ற போது அதை எங்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இருந்தாலும் இந்த நோய் வாய்ப்பட்ட நாகேஷ் தொடக்கம் பலர் 'மீண்டும் ஒரு நாள் உயிர்த்தெழுந்ததை' நினைவு கூர்ந்து இது ஆரம்ப நிலை தான் என்று மனதில் ஆறுதலும் சொல்லிக் கொண்டோம்.

நேரில் பார்க்க முடியவில்லை, மற்றவர்களால் கிருமித் தொற்று ஏற்படலாம் என்பதும், எந்த வார்த்தைகளால் எங்கள் நண்பனுக்கு ஆறுதல் சொல்வது என்ற எண்ணமும், மேலாக 'இவனுக்கு என்ன தான் நடந்து விடப் போகிறது, எப்படியோ குணமடையப் போகிறவன் தானே' என்ற நம்பிக்கையும் இறுதி வரை எங்களை அவனுடன் தொடர்பு கொள்ள விடவில்லை. ஆனல் கடைசியில் மூர்த்தியே வந்து அந்த செய்தியைச் சொன்ன போது மனதில் நிறைந்தது வெறுமை மட்டும் தான்.

இந்த நிலாவுக்கு உரிமை கோர இன்று எத்தனை பேர்.. எந்த அநீதிக்கு எதிராக அவன் குரல் கொடுத்தானே, அந்த அநீதியின் ஊற்றுக் கண்கள் எல்லாம் இன்று நிலாவுக்கு உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. ஊரில் பாதிப் பேருக்கு மேல் வாங்கிக் கொடுத்த விருதை வாங்கிக் கொடுத்து 'வாழும் போதே கௌரவித்தேன்' என்று மார் தட்டிக் கொள்கின்ற கேவலமான பிறவிகளை, அந்த அக்கினிக்குஞ்சு உயிரோடு இருந்திருந்தால் சுட்டுப் பொசுக்கியிருக்கும்.

தன் இளமைத் தோற்றம் தான் தன் காதலன் மனதில் நிலைக்க வேண்டும் என்பதற்காக இளம் வயதில் தன் உயிரை மாய்த்துக் கொண்ட ஏதோ ஒரு கவிஞனின் காதலி போல, இந்த நிலாவும் தன் தோற்றத்திலும் எண்ணங்களிலும் உள்ள இளமையை எங்கள் மனதில் விட்டுச் சென்றிருக்கிறன். இந்த 'இளைய நிலா' எங்கள் மனதில் என்றும் நீங்காமல் இடம் பெற்றிருக்கும்.

உன் ஆன்மா சாந்தியடையட்டும் என்று எங்களால் சுலபமாகச் சொல்லி விட முடியும். ஆனல் உன்னை இழந்த எங்கள் ஆன்மா எப்படிச் சாந்தியடையும்?

அக்கினிக்குஞ்சொன்று கண்டேன்
அதை இந்த கட்டடக் காட்டினுள் வைத்தேன்
வெந்து தணிந்தது
அந்த அக்கினிக் குஞ்சும்
எங்கள் உள்ளங்களும்!
எரிக்கப்பட வேண்டிய காடு
இன்னமும் இங்கே தான்!

டெங் சியாவோபிங்

மணி வேலுப்பிள்ளை

பூனை:

பூனை எலியைப் பிடிக்கும் என்று அரிவரியில் படித்திருக்கிறோம். அந்த வாக்கியத்தில் ஒரு தத்துவம் அடங்கியிருப்பதை நாம் அப்பொழுது உணர்ந்திருக்க நியாயமில்லை. 'பூனை கறுப்பா வெள்ளையா என்பது முக்கியமல்ல அது எலியைப் பிடிக்கிறதா அல்லவா என்பதே முக்கியம்.' என்ற அந்தத் தத்துவத்தை உதிர்த்தவர் சீனப் பெருந்தலைவர் டெங் சியாவோபிங். இது 'ஆர் குத்தியாயினும் அரிசியாகட்டும்' என்ற பழமொழி மூலம் ஏற்கனவே தமிழுலகம் அறிந்த தத்துவமே.

புட்டி:

டெங் சியாவோபிங் 1904 ஆகஸ்ட் 22ம் திகதி சீன தேசத்தில், சிச்சுவான் மாகாணத்தில், பைவன்சுன் கிராமத்தில் பிறந்தார். டெங் சியாவோபிங் என்பது சீன மொழியில் சின்னப் புட்டி எனப் பொருள்படும். 1976ல் தலைவர் மாவோ மறைந்த பிற்பாடு டெங் தலைமை ஏற்பதை விரும்பியவர்கள் சின்னஞ்சிறு புட்டிகளை மரங்களில் தொங்கவிட்டுத் தமது விருப்பத்தை வெளிப்படுத்தியதுண்டு. அதே வேளை 1989ல் தியனன்மென் சதுக்கத்தில் மாணவர்கள் கொல்லப்பட்டபோது கொதிப்படைந்தவர்கள் சின்னஞ்சிறு புட்டிகளைச் சிதறடித்துத் தமது கொதிப்பைப் புலப்படுத்தியதுமுண்டு.

குள்ளம்:

மாவோ சராசரிச் சீனரைவிட உயரங் கூடியவர். டெங் உயரங் குறைந்தவர். (4', 10"). 1957ல் மாஸ்கோவில் வைத்துப் பிரதமர் குருச்சேவ் இந்தக் குள்ளரை எள்ளி நகையாடியபோது மாவோ குறுக்கிட்டு, 'இந்தக் குள்ளப் பயலைக் குறைத்து மதிப்பிடக் கூடாது.... சியாங்கை சேக்கின் 10 இலட்சம் படையினரை முறியடித்த பயல்..... முன்னுக்கு வரக்கூடிய பயல்.....என்று எச்சரித்தார்.. டெங்கின் மண்டையைக் குறைத்து மதிப்பிட்டவர்களுள் மவோவின் கடைசி மனைவி சியாங் சிங் அம்மையார் முக்கியமானவர். 'தொப்பிக்கே பொருந்தாத சொத்தித் தலையர்' என்று டெங்கைப் பழித்தவர் அம்மையார்.



கல்வி:

மாவோவைப் போலவே டெங்கும் வசதி படைத்த பௌத்தக் குடும்பத்தில் பிறந்தவர். ஆதலால் கல்வி பயிலும் வசதி படைத்தவர். 1920ல் படித்துக் கொண்டு வேலை செய்யும் திட்டத்துடன் அவர் பிரான்சுக்குப் புறப்பட்டார். பாரிசு மாநகரத்துக் கிறேய்சோ (Creusot) உருக்குத் தொழிற்சாலையிலும், றெனோ (Renault) வாகனத் தொழிற்சாலையிலும் வேலை செய்தார். அவரைவிட அவருடைய கரி கோலியின் உயரம் அதிகமென்று அவருடன் கூட வேலை செய்தவர்கள் கேலி செய்ததுண்டு. 1925ல் பாரிசில் வைத்தே சூ என் லாயும் டெங்கும் முதன் முதல் சந்தித்துக் கொண்டார்கள். சூவும் பாரிசில் படித்துக் கொண்டும் வேலை செய்து கொண்டுமிருந்தார். சூவின் மாடிக் கூடத்தில் டெங் சிறிது காலம் தங்கியிருந்தார். பொதுவுடமையாளராகிய சூவின் உறவினால் டெங்கும் பொதுவுடமையாளரானார். 1926ல் டெங் பாரிசை விட்டு மாஸ்கோ சென்று, அங்கு சிறிது காலம் பயின்று, 1927ல் சீனா திரும்பினார்.

பழக்கம்:

மாவோவைப் போலவே டெங்கும் ஒரு நீச்சல் மன்னர், ஒரு புகைத்தல் பிரியர். 'பிரிட்ஜ்' சீட்டாட்டம் என்றால் சீமானுக்கு ஒரே கொண்டாட்டம். ஒரு தடவை டெங், தலைநகரிலிருந்து 1200 மைல் தூரத்தில் இருந்த வேளை, அங்கு தகுந்த சீட்டாடிகள் இல்லாதபடியால், தலைநகரிலிருந்து தனி விமானத்தில் தனது வாடிக்கையான கூட்டாளிகளை வரவழைத்துச் சீட்டாடியதுண்டு.

பதவி:

1934.35ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட 'நீண்ட பயணம்' உட்பட மாவோவின் தலைமையில் நடந்தேறிய போராட்டங்கள் அனைத்திலும் மாவோவே மெச்சும் வண்ணம் டெங் அரும் பெரும் சாதனைகளை நிகழ்த்தினார். 1950 ல் மாவோ இந்தக் குள்ள மாமறவனைத் தென் மேற்குச் சீனாவில் தமது பதிலாட்சியாளராய் அமர்த்தினார். 1952ல் மாவோ மறுபடியும் டெங்கைத் தலைநகருக்கு வரவழைத்து, துணைப் பிரதமராக்கி, பொருளாதார — நிர்வாகப் பணிகளில் ஈடுபடுத்தினார். அதன் பெறுபேறாக ஏற்கனவே பொருளாதாரப் பணிகளைக் கவனித்து வந்த ஜனாதிபதி லியு சாசியுடனும், நிர்வாக அலுவல்களைக் கவனித்து வந்த பிரதமர் சூ என் லாயுடனும் இணைந்து செயற்படும் வாய்ப்பு டெங்கிற்குக் கிட்டியது. 1954ல் மாவோ தம் உள்ளங் கவர்ந்த குள்ளரைச் சீனப் பொதுவுடமைக் கட்சியின் செயலாளர் பதவிக்கு உயர்த்தினார்.

கொள்கை:

1965ல் ஜனாதிபதி லியு பல்வேறு பொருளாதார ஊக்குவிப்புத் திட்டங்களை முன்வைத்தார். அவை முதலாளித்துவத்துக்கு இட்டுச் செல்லும் என்று நினைத்து வெகுண்டெழுந்த மாவோ, லியுவை ஒரு



முதலாளித்துவவாதி என்று சாடினார். முதலாளித்துவப் போக்கு புலப்படுவது அப்படியொன்றும் பயங்கரமான சங்கதியல்லவென்று லியு பதிலடி கொடுத்தார். போதாக்குறைக்கு லியூவை ஆதரித்த டெங், 'பூனை எலியைப் பிடிக்கிறதா அல்லவா என்பதே முக்கியம். பூனை கறுப்பா வெள்ளையா என்பது முக்கியமல்ல. கொள்கையால் பயன் விளைகிறதா அல்லவா என்பதே முக்கியம். அது தனியுடமைக் கொள்கையா அல்லது பொதுவுடமைக் கொள்கையா என்பது முக்கியமல்ல.' என்று தர்க்கித்தார்.

புறவாழ்வு:

'தகர்த்தெறியுங்கள் தலைமையகத்தை' என்று ஆணையிட்டுவிட்டார் மாவோ. 1966ல் மாவோ அப்படி ஆணையிட்டது முதல் 1976ல் அவர் மாளும் வரை நிகழ்ந்த கலாச்சாரப் புரட்சிக் காலப்பகுதியில் மாவோவின் உடந்தையுடன், சியாங் சிங் அம்மையார் உள்ளடங்கிய நால்வர் குழுவினரால் கட்டவிழ்த்து விடப்பட்ட செங்காவலர்களின் சித்திரவதைகளுக்கு உள்ளாகியவர்களுள் லியுவும் டெங்கும் முக்கியமானவர்கள். மாவோவுடன் நேரடியாக மோதியபடியால் லியு சிறை செல்ல நேர்ந்தது. ஜனாதிபதி லியு சிறைக் கைதியாகவே மடிந்தார். டெங் பதவி குறைக்கப்பட்டு, ஜியாங்சி மாகாணத்தில் ஓர் உழவு யந்திரத் தொழிற்சாலையில் உடல் வேலைக்கு அமர்த்தப்பட்டார். பதவி குறைப்பு அவர் மனதில் புழுக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும் 'கலாச்சாரப் புரட்சிக் காலப்பகுதியில் நால்வர் குழு என்னைக் கொல்லப் பார்த்தது. தலைவர் மாவோவே என்னைக் காத்தது.' என்று டெங் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

மறுவாழ்வு:

1972ல் பிரதமர் சூவைப் புற்றுநோய் சூழ்ந்து கொண்டது. அவரது அலுவலகக் கோப்புகளை நீட்டுக்கு அடுக்கினால் அவை மாபெரும் சீன மதிலையே மிஞ்சி விடும். ஆதலால் சூவின் பழுவைக் குறைப்பதற்கு டெங்கை மீண்டும் பீஜிங்கிற்கு வரவழைத்து, துணைப்பிரதமர் பதவியில் அமர்த்துவதற்கு ஆணை பிறப்பித்தார் மாவோ. டெங்கை மீண்டும் பதவியில் அமர்த்தும் தறுவாயில், மாவோ கூறிய வார்த்தைகள் திட்டவட்டமானவை. 'டெங் ஒரு திறமைசாலி .... அவர் பஞ்சினுள் பொதிந்த ஊசி போன்றவர்....கருத்துக்கள் மிகுந்தவர்.......அவர் முட்டாள்தனமாக மோதுவதில்லை....பொறுப்புணர்ச்சி மிகுந்தவர்.....அவரின் கணிப்புகள் முற்று முழுதானவை.... நடவடிக்கைகள் திட்பமானவை...என்று மாவோ டெங்கைப் போற்றினார்.

குற்றச்சாட்டு:

மூப்பும் பிணியும் பையப்பைய மாவோவையும் பீடிக்கவே செய்தன. மாவோவுக்கும் வெளியுலகுக்குமிடையே அவருடைய பெறாமமகன் மாவோ யுவாங்சின், தாதி சாங் யுவெங், மெய்காவலர் காங் செங், மொழி பெயர்ப்பாளர்கள் வாங் கைறொங், நான்சி ராங் ஆகியோர் இடம்பிடித்துக் கொண்டார்கள். கலாசாரப் புரட்சிக் காலப்பகுதியில் கிளர்ச்சியாளர்கள் மூட்டிய தீயை எல்லாம் பிரதமர் சூ அணைத்துவிட்டார்.... நீங்கள் ஆக்கியவற்றை எல்லாம் அழிப்பதற்குச் சூவும் டெங்கும் திட்டம் தீட்டியுள்ளார்கள்.... டெங் வைத்தியசாலைக்குச் சென்று சூவிடம் உத்தரவு பெற்று வருகிறார்.... டெங் உங்களிடம் வந்து உத்தரவு பெறுவதில்லை.... பிரச்சினைக்கு மூலகாரணம் டெங்.... அவர் உங்களைப் பற்றியோ கலாச்சாரப் புரட்சியைப் பற்றியோ வாய் திறப்பதில்லை.....அவர் லியுவையும் சூவையும் போற்றுகிறார்.... உற்பத்தி, உற்பத்தி என்று கத்தித் திரிகிறார்.... என்று ஆள் மாறி மாவோவிடம் ஓதினார்கள்.

பழி:

1976 ஜனவரி 8ம் திகதி பிரதமர் சூ மறைந்தார். டெங் இரங்கலுரை நிகழ்த்தினார். சூவின் இறுதிச் சடங்கில் மாவோ கலந்து கொள்ளவுமில்லை, இரங்கல் செய்தி வெளியிடவுமில்லை. எனினும் ஏறத்தாழ 50 ஆண்டுகள் தமது பிரதமராகவும் சாணக்கியராகவும் திகழ்ந்த அமரர் சூவை மாவோ அடிக்கடி நினைந்துருகியதுண்டு. கிங் மிங் (சித்திரைப்) பருவத்தில், தியனமன் சதுக்கத்தில் அமரர் சூவை நினைவுகூர்வதற்குத் திரண்ட இலட்சக் கணக்கான பொது மக்களுக்கும் காவலர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஆயிரக் கணக்கானோர் மாண்டனர். மாண்ட பழி டெங் மீது சுமத்தப்பட்டது. அப்போது மாவோவைத் தடுத்தாட்கொள்வதற்குப் பிரதமர் சூ உயிரோடு இருக்கவில்லை. மாவோவைத் தடுத்தாட்கொள்ளும் ஆற்றல் வேறெவருக்கும் இருந்ததில்லை. மாவோ மீண்டும் பூனைக்குச் சூடு போட்டுவிட்டு, குவா குவோபெங்கைப் பதவியில் அமர்த்தினார்.

வழித்தோன்றல்:

பிரதமர் சூ தம்மை வருத்தம் பார்க்க வந்த சேனாதிபதி யி ஜியான்யிங்கிடம் டெங்கே எனது வழித்தோன்றல் என்று வலியுறுத்தியிருந்தார். 1976 செப்டம்பர் 9ம் திகதி மாவோ மறைந்த பிற்பாடு சூவின் ஆசையை யீ நிறைவேற்றி வைத்தார். 1977 இல் டெங் சீனாவின் பெருந் தலைவரானார். ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்!

கருத்தியல்:

டெங்கின் கருத்துக்கள் சில பின்வருமாறு:

மாவோவின் சாதனைகள் அசாதாரணமானவை, தவறுகள் சாதாரணமானவை.
மாவோ சொன்னது சரி, செய்தது பிழை.
மாவோ ஒரு மனிதர், மாவோ ஒரு கடவுளல்லர்.
மார்க்சிசம் ஒரு தத்துவம், மார்க்சிசம் ஒரு மதம் அல்ல.
பொதுவுடமை என்பது பொதுவறுமை ஆகாது.
அரசியல் ஒழிக, பொருளியல் எழுக.
சொல் மங்குக, செயல் ஓங்குக.
ஆற்றலுக்கேற்ற வேலை, வேலைக்கேற்ற கூலி.
உண்மையின் உரைகல் நடைமுறை.
நிகழ்விலிருந்து உண்மையை அறிக.
செல்வம் சிறப்புத் தரும்.

....தொடரும்

முற்றத்து மண் வேண்டும்!

திலீபன்

காலையில் எழுந்துமிடறுக் கோப்பியும் மறந்து சைக்கிள்
சாலையில் மிதித்து ஐயா மாதகல் கரைக்குச் சென்று
ஓலையில் கொணர்ந்த மீனின் நாடிச் சூடாற முன்னே
தோலையும் களைந்த விந்தை கண்டு நாம் களித்திருந்த
எங்கள் முற்றத்து மண் வேண்டும்!
பச்சையாய் மாவரித்து வறுத்ததில் புட்டவித்து
இச்சையாய் சம்பலு டன் பதமான இறால்க் குழம்பும்
மொச்சை மணம் சற்றுமற்ற சுட்ட கருவாடும் தர
கொச்சையாய் நான் குதப்பும் கோலம் அம்மா கண்டிருந்த
எங்கள் முற்றத்து மண் வேண்டும்!
ஈரமாய் நெய் தடவி மீசையை முறுக்கி அப்பு
வீரமாய் படியிறங்க. வழுக்க நான் பாய்ந்து தாங்க
பாரமாய் இருந்த தன்னை தூக்கினான் பேரனென்று
சாரமாய் ஊரவர்முன் சான்றுகள் பல மொழிந்த
எங்கள் முற்றத்து மண் வேண்டும்!
வேண்டியே ஆச்சியைநான் பலமுறை நச்சரிக்க
பாண்டி விளையாடவென்று கொக்கையால் புளி உதிர்த்து
தோண்டியே விதை எடுத்து அலசி அதைக் காயவைத்து
காண்டீபக் கனத்தில் வைரமுதிரையில் பலகை செய்த
எங்கள் முற்றத்து மண் வேண்டும்!
தம்பிமார் இருவருடன் சாறத்தை வரிந்து கட்டி
கம்பியால் கோடிழுத்து கிளித்தட்டும் கிட்டிப்புள்ளும்
கெம்பி விளையாடிச் சோர்ந்து களைப்பாற வேலிசாய்ந்து
வெம்பிய மாவடுவை உப்போடு தொட்டு உண்ட
எங்கள் முற்றத்து மண் வேண்டும்!
தங்கையுன் சலிப்புத் தீர தேக்குமர வாங்கு போட்டு
வேங்கையாய் வாழ்ந்து வீழ்ந்த கர்ணனின் சரிதை சொல்ல
கங்கையாய் கண்ணில் ஈரம் பிறந்து உன் கன்னமேட்டில்
சங்கையாய் நிமிடம் வாழ்ந்து உதட்டிலே மரிக்கக் கண்ட
எங்கள் முற்றத்து மண் வேண்டும்!
தனமுண்டு வந்த நாட்டில் வளமான வாழ்வுமுண்டெம்
இனமுண்டு கூடிவாழ. குடித்தனமுண்டு — ஆனால்
மனக்குடல் பழசையெல்லாம் சமிக்கவே மறுப்பதாலே
கனவுண்டெம் முற்ற மண்ணில் சந்ததி வளர வைக்க
எங்கள் முற்றத்து மண் வேண்டும்!
கொற்றத்துக் கதைகளெல்லாம் எத்திக்கும் பரவி நிற்கும்
முற்றத்த மண்ணில்தானெம் சுற்றத்துக் கதைகள் தொக்கும்
பற்றற்று எந்தன் ஆவி பரலோகம் போகையிலே
முற்றத்து மண்தானேயென் சடலத்தில் தூவவேண்டும் —
அதற்காய் — எங்கள் முற்றத்து மண் வேண்டும்!

நன்றி — 'நாயகன்'



நமது படைப்பாளிகளின்
மனக்குடலில் சமியாதிருக்கும்
படைப்புகளை அசை போடத்
தருகிறது இந்த இரவல் பகுதி.
வாசகர்களும் தங்களுக்கு மறக்க
முடியாத நல்ல படைப்புகளை
இப்பகுதிக்கு எழுதி அனுப்பலாம்.
மூலம் குறிப்பிடப்படவேண்டும்.

கிரிக்கெட்டிலும் ஊழல்?

சஞ்சீவன்

கிரிக்கெட் விளையாட்டு ஜென்டில்மன்களுக்கே உரிய விளையாட்டு என்று கூறுவார்கள். கிரிக்கட்டின் ஆரம்பம் இந்தியாதான் என்று ஒரு சாரார் கூறினாலும் அதைத் தத்து எடுத்துக்கொண்ட நாடு இங்கிலாந்துதான். வர்க்க முரண்பாடுகளின் வாழிடமும் இங்கிலாந்துதான். இங்கு உதைபந்தாட்டம் எப்படி தொழிலாள வர்க்கத்துக்குரிய விளையாட்டாகக் கருதப்படுகிறதோ அப்படி கிரிக்கட் மத்திய, மேல் வர்க்கத்தினருக்குரிய விளையாட்டாகக் கருதப்பட்டது. தங்களுடைய வர்க்க அடையாளத்தைப் பேணுவதற்காக 'ஜென்டில்மன்' விளையாட்டு என்று கூறி, குறைந்த வர்க்கத்தினரையும் நிறத்தவரையும் தம் விளையாட்டுகளில் சேர்த்துக் கொள்ளாது புறக்கணித்தார்கள் ஆங்கிலேயர்.


இது நூறு வருடங்களுக்கும் மேலான சரித்திரம். பிரபல பல்கலைக்கழகங்களான ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் போன்றவற்றிலிருந்து தேர்வாகும் விளையாட்டுக்காரரை விடவும் சாதாரண குடும்பங்கள், நிறத்தவர்கள் என்று பலர் இன்று இங்கிலாந்து மாவட்ட (county) கிறிக்கெட் அணிகளில் விளையாட ஆரம்பித்து பல வருடங்கள் ஆகிவிட்டது. நிறத்துவேஷம் படிப்படியாக குறைந்த 'ரண்'களையே எடுத்துக்கொண்டு வருகிறது.

எப்படியாயினும் இங்கிலாந்து நாட்டைப் பிரநிதித்துவப் படுத்துகின்றகின்றபோது, உதாரணமாக 'டெஸ்ட்' மாட்சுகள் விளையாடும்போது, தெரிவுக்குழு பல தடவைகளில் பாரபட்சமான தெரிவுகளைச் செய்ததும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு சிறந்த ஆட்டக்காரர் பலியாவதும் பொதுவாக அறியப்பட்ட விடயம். இப்படியான நடைமுறைகள் பல நாடுகளிலும், பல விளையாட்டுகளிலும் நடைபெற்று வந்தாலும் 'ஊழல்' என்ற பெயர் சற்று மேலோட்டமாகவே பாவிக்கப்படுகிறது. கனடாவில் பென் ஜோன்சன் விவகாரம் சற்றுக் கனமாகவே கையாளப்பட்டது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

ஆனால் சமீபத்தில் இந்தியாவில் பரபரப்பை ஏற்படுத்திய மனோஜ் பிரபாகரின் லஞ்ச அம்பலம் கிரிக்கட் விளையாட்டு புதியதொரு பரிமாணத்தை எடுத்திருக்கிறது என்பதையே நிரூபிக்கிறது. இது இனியும் ஒரு 'ஜென்டில்மன்' விளையாட்டல்ல வியாபார மயப்படுத்தப்பட்ட வேடிக்கை விளையாட்டு என்றுதான் கருத வைக்கிறது.

அப்படி என்னதான் நடந்தது? மனோஜ் பிரபாகர் கடந்த வருடம் வரைக்கும் இந்திய அணியின் பிரதானமான ஒரு ஆட்டக்காரராகவிருந்தவர். மூன்று வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் நடைபெற்ற சிங்கர் கிண்ண சுற்றுப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடும்போது 'விளையாட்டைத் தோற்க வைப்பதற்காக வழமையிலும்விட தரம் குறைத்து விளையாடு' என்று இந்திய அணியைச் சேர்ந்த இன்னுமொரு ஆட்டக்காரர் தன்னிடம் கேட்டுக் கொண்டதாக பிரபாகர் பகிரங்கமாகக் கூறியுள்ளார். இதற்காக தனது சகா இந்திய ரூபாய்கள் 25 லட்சத்தை லஞ்சமாகத் தருவதாகக் கூறினாராம்!.

லஞ்சம் கொடுத்து விளையாட்டுக்களைத் தாமே தோற்க வைப்பது ஒன்றும் புதிதல்ல. பல வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவிற்குமிடையே நடைபெற்ற சுற்றுப்போட்டியில் நிச்சயாக வெற்றிபெறும் என்று கருதப்பட்ட அவுஸதிரேலியா தோல்வியைத் தழுவியது. இத் தோல்விக்குக் காரணமான டெனிஸ் லிலி என்ற பந்து வீச்சாளரும் றொட்னி மார்ஷ் எனப்படும் 'விக்கட் கீப்பரும்' (இருவரும் அவுஸ்திரேலியர்கள்) ஆட்டத்தின் திசையையே திருப்பினார்கள். அந்தத் தடவை இங்கிலாந்தின் 'புக்கிகள்' எனப்படும் பந்தயக் கடைகள் இங்கிலாந்து வெற்றியடைந்தால் ஏராளமான பணம் தருவதாக சூதாடிகளுக்கு அறிவித்து விட்டார்கள். தருணத்தைப் பார்த்து டெனிஸ் லிலி றொட்னி மார்ஷ் ஆகியோர் இங்கிலாந்து வெற்றி பெறுமெனப் பந்தயம் பிடித்து விட்டார்கள். ஆட்டத்தில் இவர்களின் விளையாட்டு தரமாக இல்லாததனால் நிச்சயமான வெற்றியை எதிர்பார்த்திருந்த அவுஸ்திரேலியா தோல்வியைத் தழுவியது. பத்திரிகைகளும் விமர்சகர்களும் இவ்விருவரையும் குற்றம் சாட்டினாலும் எதையும் நிரூபிக்க முடியவில்லை.


மனோஜ் பிரபாகர்

இந்தியாவிலும் இதே நடைமுறைகள் பல காலமாக நடைபெற்று வருகின்றதாகவே வதந்திகள் அடிபட்டு வந்தன. இவற்றை யாரும் நம்புவதில்லை. தற்போது பிரபாகரின் குற்றச்சாட்டு இவ்வதந்திகள் உண்மையானவையா என்ற கேள்விகளையே எழுப்புகின்றன.

அதே வேளை, பிரபாகரின் நடத்தைகள் பலவும் அவரது குற்றச்சாட்டில் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துகின்றன. இந்திய அணியிலும் தன் நாட்டிலும்

அக்கறையுள்ளவராகவிருந்தால் இக்குற்றச்சாட்டை ஏன் மூன்று வருடத்துக்கு முன்பே கூறவில்லை? லஞ்சத்தைக் கொடுக்க முயற்சித்த சக விளையாட்டுக் காரரை ஏன் இதுவரை அடையாளம் காட்டவில்லை? 'அடையாளம் காட்டித் தகுந்த ஆதாரம் இல்லை என நீதிமன்றம் தீர்ப்பளித்தால் எனக்கு நட்டஈடு தருவீர்களா?' என்றும், 'போதுமான அளவு பணம் தந்தால் அடையாளம் காட்டுவேன்' என்றும் பணத்திற்காக அடம் பிடிக்கும் பிரபாகரின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்கிடமாகவே இருக்கின்றன.

நானே அக்காலத்தில் (மூன்று வருடங்களுக்கு முன்பு) மிகத் திறமையான ஆட்டக்காரன்' என்று மார்தட்டித் திரிகின்ற இந்த பிரபாகர் உண்மையில் ஒரு 'விளையாட்டு வெல்லும்' (match winning) ஆட்டக்காரர் அல்ல. இவரைவிடத் திறமையான ஆட்டக்காரர்களான ரெண்டுல்கார், அசாருதீன், கபில் தேவ் போன்றவர்களே அமர்க்களமற்று இருக்கும்போது பிரபாகரின் நடவடிக்கைகள் இந்திய அணியின்மீது ஊழல் கறையைப் பூசுவதற்குப் போதுமானதாகவில்லை. இருப்பினும் இவ்வகையான 'விளையாட்டுகள்' இந்தியாவிற்கோ அல்லது 'ஜென்டில்மன்'களின் பிறப்பிடமான வெள்ளை நாடுகளுக்கோ புதியவையல்ல.

விளையாட்டு 'ஜென்டில்மன்'களுடைய விளையாட்டாகவிருந்தால் போதாது. விளையாடுபவர்கள் ஜென்டில்மன்களாக இருக்க வேண்டும். லஞ்ச ஊழலால் இந்தியாவிற்கு அவமானத்தைக் காட்டிலும் பிரபாகர் போன்றவர்களை அணியில் வைத்திருப்பது, அவர் எவ்வளவு கொம்பனாகவிருந்தாலும், மிக மிக அவமானமானது.

உலக நாடுகளின் பண்டய சமய கலாச்சாரத்தில் இந்துமத பாரம்பரிய முதன்மையை 'இந்து மதம்' கட்டுரை மூலம் கட்டுரையாளர் தெளிவுபடுத்தியிருப்பது என் போன்ற வாசகர்களுக்கு பெருமையையும் தன்னம்பிக்கையையும் தருவதாயுள்ளது. புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களில் பலர் பல காரணங்களுக்காகவும் வேறு மதங்களை நாடி இரண்டுங்கெட்டான் நிலையில் வாழ்கிறார்கள். இந்து மதம் பற்றிய கட்டுரை இவர்களுக்கு ஞானத் தெளிவைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

அத்துடன் 'Just A Little Red Dot' என்ற திரைப்படத்தைப் பற்றி எந்த ஒரு பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ ஒரு விமர்சனத்தையும் நான் பார்க்கவில்லை.

பல நல்ல கருத்துக்கள் 'மறுமொழி' யில் புதைந்து கிடக்கின்றன. 'மறுமொழி' மேலும் மேலும் வளர்ச்சி பெற்று தொடர்ந்தும் வாசகர்களை மகிழ்விக்க வேண்டும்.

அன்பன்
ம.சிவசாமி
எக்டின்டன் அவனியூ, கிழக்கு
ஸ்காபறோ

தற்செயலாக ஒரு தமிழ்க் கடைக்குள் நுழைந்தபோது அந்த அழகிய அட்டையைக் கண்டேன். அது 'மறுமொழி'. வாசித்துப் பார்த்த பிறகுதான் அதன் அருமையே புரிந்தது. ஏன் விளம்பரமே செய்யவில்லை?. கனடியத் தமிழர் பற்றிய விடயங்கள், பேட்டிகள் அதிகம் வரவேண்டும். ரவி அச்சுதனின் பேட்டி பரவாயில்லை ஆனாலு ம் 'நவராகம்' சம்பந்தப்பட்ட ஏனைய கலைஞர்களின் அபிப்பிராயங்களுக்கும் மேடையமைத்துக் கொடுக்க வேண்டும்.

நாதன்
(இடம் குறிப்பிடப்படவில்லை)

குயுஊவு பற்றிய உங்கள் கணிப்பு தவறானது. தமிழ்ச் சமூகத்தின் குடிவரவுப் பிரச்சினைகளுக்கு முழு முதற் காரணமே சேர்ஜியோ மாச்சி தான். அப்படியானவருக்கு வாக்களிக்க வேண்டாமென்று பாதிக்கப்பட்ட சமூகத்தைப் பிரதிநிதிப்படுத்துபவர் என்ற முறையில் குயுஊவு சங்கம் சொல்லியிருந்தால் அதிலென்ன தப்பு?.

கணபதிப்பிள்ளை
ஸ்காபரோ

வாழ்த்துக்கள்!

என்ன செய்வது ?. காலவோட்டத்தோடு அநுசரித்துப் போவதில் திருப்திப்படும் உங்கள் முன்னுரை 'எவனொருவன் சமூகக் கூட்டத்திலிருந்து பிறள்ந்த நடையுள்ளவனோ அவனே எனது பார்வைக்கிலக்காகிறான்' என்ற கார்ல் யுங்கின் வார்த்தைகளைத்தான் நினைவுக்குக் கொண்டு வருகிறது. இருப்பினும் ஏதோ ஒன்று முட்டி மோதி மூச்சுவிட வைத்ததால் தான் 'மறுமொழி' பிறந்திருக்கிறது. இது தொடர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

'அம்மா' கவிதையில் கவிஞரின் ஆதங்கம் வரிகளாக விழுந்திருக்கிறது. வாசிப்பின் பின் ஒரு நீண்ட மௌனம் வீழ்ந்த போதே கவிதை வெற்றி கொண்டு விட்டது. உண்மை உணர்வும், ஆடம்பரமற்ற சொற்களும் ஒரு நல்ல கவிதையைப் பிறப்பித்து விடுகிறது. 'இந்து மதம்' கட்டுரை நிறைய விஷயங்களை அள்ளித் தந்திருந்தாலு ம் எழுதியவர் யாரென்றோ ? (ஆசிரியராகவே இருக்கலாம்) தகவல்கள் பெறப்பட்ட மூலம் யாதெனவோ குறிப்பிடப் படவில்லை. இது கட்டுரையியலு க்கு விரோதமானது. இனி வரும் இதழ்களில் தயவு செய்து கவனத்திலெடுக்கவும்.

'யுகாந்தா' பற்றிய குறிப்பு பாராட்டத் தக்கது. அதை இன்னும் சற்று விரிவாகத் தந்திருக்கலாம். கார்வே முன்னுரையில் கூறியபடி, அக்கட்டுரைகள் மகாபாரதம் மீதான கேள்வியெழுப்பலு க்கான ஆரம்பமேயல்லாது முற்றான ஆய்வுகளல்ல. ஆசிரியர் பாத்திரங்களின், சம்பவங்களின், யதார்த்தப் போக்கையும் ('குந்தி' கட்டுரையும் அவ்வகையதே) குணப்பதிவுகளையும் ஆராய்ந்திருக்கிறாரே அல்லாமல் சமூகக் கண்ணோட்டமோ வரலாற்றியலோ அதில் பெரிதாக இல்லை. நூலில் அவ்வப்போது அவர் தொட்டுச் செல்லு ம் சில இடங்கள்தான் ஆய்வுகளுக்கான அடிவைப்புகள். ஆனால் அதனைத் தொடர்ந்தவர்கள் யாரென இன்னும் தெரியவில்லை !.

'மனுநீதி'தொடருக்கு நீங்கள் தந்த குறிப்பு தொடர்பாக என் வரையான தெளிவுகளை முன்வைக்க விரும்புகிறேன். இந்து மதத்தின் தாக்கம் கூடி வருகின்ற இன்றய (இந்திய) சூழலில் அதன் மீதான கேள்விகளும் எழுபப்பட்டு வருகிறது. வளரும் எம் தலைமுறைக்கு பழைய பல்லவியையே நாமும் பாட வேண்டுமா?. உண்மையென துணிந்த ஆய்வுகளை கூறுவதல்லவோ சிறப்பு.

140 ஆண்டுக்கால மௌரிய (பௌத்த) ஆட்சியில் பார்ப்பனர்கள் நம்பிக்கை கொண்டிருந்த உயிர்ப்பலியும், சோம வேள்வியும் தடை செய்யப்பட்டிருந்தது. (இது அசோகர் காலத்து கல்வெட்டுகளில் காணக் கூடியது) இதுவே பார்ப்பனர்களின் ஜீவாதாரமாக இருந்ததும் அவர்களது சமூக நிலை தாழ்த்தப் பட்டிருந்ததும்

இது உங்கள் பக்கம்..... இது உங்கள் பக்கம்....

அவர்களைக் கலகஞ் செய்யத் தூண்டியது. கலகஞ் செய்து ஆட்சியைப் பிடித்த பார்ப்பனியனான புஷ்ய மித்திரனுக்கு ஆதரவாக பார்ப்பனீயத்தை ஸ்தாபித்துக் கொள்ள தொகுக்கப்பட்ட சட்ட விதிகளே மநு ஸ்மிருதிகளாகும். சுயம்புவிடமிருந்து மநுவுக்கும், மநுவிடமிருந்து மனிதர்களுக்கும் தெரிவிக்கப் பட்டதாகச் சொல்லப்படும் மநு ஸ்மிருதியின் தோற்ற வரலாறு ஆதாரமற்றது. மாறாக, வரலாற்று அறிஞர்களின் கூற்றுப்படி கி.மு. 170 — 150 ற்கு இடைபப்பட்ட காலத்தில் சுமதி பார்க்கவ என்பவரால் தொகுக்கப் பட்டதே மநு சாஸ்திரமாகும். அது முழுக்க முழுக்க பௌத்த மதத்தையும் தென் சமூகப் பழக்க வழக்கங்களையும் வேரறுக்கவும், அதனிடத்தில் பார்ப்பனீயத்தை நிலை நாட்டுவதற்குமான கூரிய சங்கற்பத்துடன் தொகுக்கப் பட்டதால் நூலின் மூலத்திற்கு சாயம் பூசப்பட்டு விட்டது. காலப் போக்கில் பல்வேறு பிராந்திய மொழிகளுக்கு பெயர்க்கப்பட்ட ஸ்மிருதிகள் (பாடல்கள்) அந்தந்தப் பிராந்திய சமூக கலாச்சார நிலைக்கு ஒன்றாகக் கூடியதாக உரையெழுதப் பட்டது.

இப்படியாக ஆதிக்கத்தை நிலை நாட்ட சட்ட விதிகள் மதத்துடனும் இனத்துடனும் இணைக்கப் பட்டு குயுக்தியாக உலவி வருவதை ஏன் தொடர்ந்து பிரசுரிக்க வேண்டும் எனச் சீர்தூக்கிப் பார்ப்பது நலம்.

(மேற்படி விஷயத்திற்கு ஆதாரம் 'டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 'எழுத்தும் பேச்சும்', தொகுதி 3.)

இப்படிக்கு
வணக்கத்துடன்

எம். மைக்கேல்
றூவி மோல்சன், மொன்றியால்.

ஆசிரியர், 'மறுமொழி'.

தங்களின் முதல் மலர் கண்டேன். கண்கவர் அட்டை அமைப்புடன் நேர்த்தியான அச்சமைப்புடன் கவர்ச்சிகரமாய் அமைந்து வாசகர்களை வாங்கத் தூண்டும் வகையில் அமைந்திருந்தது.

ஆனால் 'எங்கு சுத்தியும் தம்பி இங்குதான் வரவேண்டும்' என்ற பாணியில் மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் தங்கள் கொள்கைகளை வெளிப்படுத்தியிருப்பதுதான் வேடிக்கையாய் இருக்கிறது.

மக்கள் என்ன நினைக்கிறார்கள், எங்கே நிற்கிறார்கள், செய்திகளை வாசகர்கள் எந்தளவுக்கு கிரகித்து அதன் போக்குகளை இனங்கண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்தும் 'மாமியார் சேலை உரிந்த கதையாய்' திண்டாடுவதும் புரிகிறது.

'தினமுரசு' போன்ற பத்திரிகைகளில் ஏதோ ஒன்று இருப்பது போலவும் அதுபோல் எம்மிடமும் இருப்பதாகவும் காட்ட முற்பட்டிருப்பது ஒரு விடயத்தைத்தான். அதுதான் 'எங்கள் நிறத்தைக் கொஞ்சம் மாற்றிக் கொள்வோம்' என்ற பாணி.

'தினமுரசு' ஆரம்பகால வெளியீடுகளைப் பார்த்தவர்களுக்கு தெரியும் அதன் 'பச்சை' நிறம். தங்கள் கடை வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள தங்களை வெளுப்பாக்கிக் கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. அதனால் இப்பொழுது அவர்கள் 'நாங்களும்' தான் என்ற பாட்டைப் பாடி ஆடுகிறார்கள். இதையெல்லாம் மக்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள் என்பதுதான் முட்டாள்தனம்.

அவர்களிடம் ஞானம் இருப்பது என்னவோ உண்மைதான். அதற்காக மற்றவர்களிடம் விஷயம் இல்லை என்று நினைப்பது தவறு.

இன்றய ஈழத்தமிழனுடைய மூச்சு என்ன என்பது நிதர்சனமாகிவிட்ட ஒன்று. ஏனெனில் இதுவரை தொடர்ந்து கொண்டிருக்கும் தாக்கங்களும் அவன் சிதைவுகளும் அவனை அடையாளம் தெரியாமல் உருக்குலைத்து நிற்கிறது. இதன் பின்னரும் அவன் இனத்தாலே அவன் இதயத்தைச் சீண்டிப் பார்ப்பது எவ்வளவு வேதனை தரும் நிகழ்வு?

அடுத்து ரவி அச்சுதனிடம் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளைப் பார்த்தால் நான் முன்னர் குறிப்பிட்ட 'ஞான'முள்ளவர்கள் பதம் அடிபட்டுப் போய்விடுகிறது. ஆனாலும் ரவி அச்சுதன் தன் பதில்களை கேள்விகளை உடைத்தெறியும் விதத்தில் கூறியிருந்தார்.

மேலும், மலரில் குறை கூறும் அளவைவிட பாராட்டும்படியான அம்சங்களே அதிகம் எனலாம். மூர்த்தியின் 'எங்கேபோய்', 'இந்து மதம்' போன்ற பயன்தரும் கட்டுரைகள் அருமை.

தொடரும் எமது கேள்வி என்னவெனில், 'மறுமொழி' தொடர்ந்து வருமா?. வரவேண்டும் என்பது எம் வேணவா.

நன்றி,
வணக்கம்.

ராசையா.P
ஸ்காபறோ

பிறந்து வளர்வதுதான் இயற்கை. 'மறுமொழி' வளர்ந்து பிறந்திருக்கிறது. என்ன 'சிசேரியனா'? பிரமனுக்கே லஞ்சம் கொடுத்திருப்பீர்கள் போலிருக்கிறது.
வாழ்த்துக்கள்.

சின்னவனும் நண்பாகளும்
எற்றோபிக்கோ

'நவராகம்' பற்றிய பேட்டி ஒருபக்கமாகத் தெரிகிறது. மறுபக்கத்தையும் தாருங்கள்.

ராஜிவன்
ஸ்காபறோ

'மறுமொழி' புலிகள் சார்பான நடுநிலை சஞ்சிகை என்றால் தவறா? வடிவமைப்பு பிரமாதம். மூர்த்தியின் கைவண்ணம் பளிச்சிடுகிறது. தொடருங்கள்.

ந.இராம்குமாரன்
பேர்த். அவுஸ்திரேலியா.

இந்துமதம் போன்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் மிகவும் ஆரோக்கியமானவை. விருப்பமோ விருப்பமில்லையோ நமது கலாச்சாரத்தின் ஆணிவேரே அங்கிருந்துதான் புறப்படுகிறது் இக்கட்டுரைக்காகவே நான் 'மறுமொழி' யைப் பாதுகாத்து வைத்திருக்கிறேன்

தி.அருணகிரிநாதன்
மிசிசாகா

அட்டையில்...

மூர்த்தி: (மேல் மூலை)

'மறுமொழி' இதழ்களுக்கு கணனி வரைகலை மற்றும் வடிவமைப்பு செய்துவரும் 'மொன்றியால்' மூர்த்தி என அழைக்கப்படும் நண்பர் மூர்த்தி. இவர் ஒரு சிறந்த எழுத்தாளரும் பொறியியலாளருமாவார்.

திலீபன், பவனிதரன் (நடுவே)

இருவரும் சிறந்த நாடகக் கலைஞர்கள். திலீபன் மறைந்த புகழ்பெற்ற கவிஞர் சில்லையூர் செல்வராஜனின் புதல்வனாவர். 'முற்றத்து மண் வேண்டும்' என்ற இவரது கவிதை இந்த இதழில் மறுபிரசுரமாகிறது. பவானி என்று எல்லோராலும் அறியப்பட்ட பவனிதரன் நாடகம், கைவினைக் கலைகளில் சிறந்தவர். இருவரும் 'மகாபாரதம்' காப்பிய நாடகமொன்றில் நடித்த நாடக உடைகளுடன் மக்டோனல்ட் உணவகத்தில் 'MacA பாரதத்தின்' பெருமையை உணர்த்துகிறார்கள்!

பவானி: Mac கிருஷ்ணன்
திலீபன்: Mac அருச்சுனன்

வாணி '97

பல எதிர்பார்ப்புகளுடனும் போயிருந்தோம். குறித்த நேரத்துக்கு முன்பே போகவேண்டுமென்று 'கலாபம்' கற்றுத் தந்திருந்தது. முயற்சி வீண்போகவில்லை. எம்மைப்போலவே சிந்தித்தவர் மண்டபத்தை நிரப்பியிருந்தனர். நிகழ்ச்சி குறித்த நேரத்துக்கு ஆரம்பமானது. புள்ளி 1.

பாடசாலை கீதம் இத்தியாதி வழமையான சம்பிரதாயங்கள். அவையடக்கம். கூச்சலில்லாத சனக்கூட்டம். ஓரிருவரின் சிறு கூச்சல்களும் குரல்நாண்களுக்குள்ளேயே முடக்கப்பட்டு விட்டன— தொண்டர்களால். புள்ளி 2.

'ஏழு ஸ்வரங்களுக்குள்' இன்னிசை நிகழ்ச்சி. பிரமாதம். ஆயிரம் ரஹ்மான்கள் வரட்டும். பத்தாயிரம் பொப் மாலிகள் வரட்டும். நூறாயிரம் அப்பாச்சிகள் வரட்டும் உயிரையே பறித்துவைத்துத் தாலாட்டும் இந்த மெல்லிசைக்கு ஈடாக எதுவுமில்லை. எல்லோருமே நன்றாகச் செய்தார்கள். சங்கீத வித்துவான் தனதேவி மித்ரதேவாவும் புல்லாங்குழல் டாக்டர் செல்வநாயகம் தயாபரனும் நினைவில் நிற்பவர்கள். 'சிறுவன்' லெலு ம் ரட்ணாயக்கா பாராட்டுக்குரியவர். புள்ளி 5.

காத்தவராயன் நாடகம் — ஒலி வாங்கி குழப்படி செய்து காப்பாற்றி விட்டது. புள்ளி 0

'துயரத்தூது' கவிதா நிகழ்வு உணர்ச்சிவசப்பட வைத்தது. பொன்னையா விவேகானந்தன் அருமையாகச் செய்தார். எழுத்தாளராகத்தான் அறியப்பட்டவர். நடிப்பில் மேலே போய்விட்டார். கதை பழசு. காலம் புதிது. புள்ளி 2.

'கனடாவில் கட்டப்பொம்மன்' குறுகிய நேரமானாலு ம் சிரிக்கக்கூடியதாகவிருந்தது. வசனம் எழுதிய இலகுப்பிள்ளை சிறீநாதன் பாராட்டுக்குரியவர். கட்டப்பொம்மனுக்கு குரல் போதாது. புள்ளி 1.

பட்டி மன்றம் முதலில் அறுவைபோல் தோன்றியது. நடுவர் அமல்ராஜ் பெர்னாண்டோவும் இந்து கோபாலு ம் திசை திருப்பிவிட்டார்கள். கரு காத்திரமானதல்ல இருந்தாலு ம் இசைக்காகப் பார்க்கலாம். அருட்செல்வி அமிர்தானந்தர் நல்ல குரல்வளம். 'வாதிகள்' பக்கம் போயிருந்தால் நன்றாயிருந்திருக்கும். புள்ளி 1.

'பிரியாத உறவுகள்' நாடகம் பல தடவைகள் மேடையேறியது. (கருவைத்தான் சொல்கிறேன்). மேடையமைப்பு நல்லது. நடிகர்கள் எல்லோருமே நன்றாகச் செய்தார்கள். வழமைபோல monotonous நாடகத்தொனி மாற்றப்பட வேண்டும். கொலைசெய்கிறது. நாடகத்துறையில் எவ்வளவு முன்னேற்றம் வந்தும் தொனி மட்டும் அங்கேயே நின்றுகொண்டிருக்கிறது. அமலா அம்பலவாணரின் 'தாய்' நடிப்பு நன்றாயிருந்தது. புள்ளி 4.

விழா நிர்வாகம் புள்ளி 1

மொத்தம் 17/20 அடுத்த தடவையும் பார்க்கலாம்.

—செல்வன்

யூன் மாத விடை

யூன் மாத விடை (இடமிருந்து வலம்)

1. ஆகாயத்தில் அபசகுனம் —தூமகேது
4. குத்தும் கோர்க்கும் — ஊசி
7. நான்குள் ஆடுவது — சதிராட்டம்
9. நீர்க்கலம் — குடம்
10. கனடாவில் தமிழில் "தொலைகாட்டும்" — கலாபம்
12. ஆசையில் ஓர்...—கடிதம்
14. முன்னால் பம்பாய் பாடகர் — ரபி
15. இரண்டுபேர்க்கிடையில் போய் வருவது —தூது
16. அங்கலாய்ப்பது — மனம் (இல. 20 என்பது பிழை)
17. எனக்குச் சொந்தமான—என்
18. கண்டபடி கதை—அலட்டு
20. அடையும்— கிட்டும்
21. கனடாவில் வெளியான இசைத்தட்டின் பெயர்—ராகவி
24. ஒரு திசை—வடக்கு
26. மனோகரா திரைப்படம் இதற்குப் பெயர் போனது— வசனம்
28. கிழக்குத் தமிழ் ஈழத்தில் ஒரு கிராமம்— செட்டிபாளையம்
29. இரவு—அல்

யூன் மாத விடை (மேலிருந்து கீழ்)

1. சிவாஜி கணேசனின் பழைய தமிழ்ப்படம்— தூக்குத் தூக்கி
2. தலைமுடி—கேசம்
3. வணங்கு— துதி
4. பரிமாற்றம் நடைபெறும் வெளி— ஊடகம்
5. எம்ஜியார் புதியவானம் புதியபூமி பாடி நடித்த இடம்— சிம்லா
6. சிகையை இப்படியும் அலங்கரிக்கலாம்— குடும்பி
8. சுழலு ம் சிறுவர் விளையாட்டு—ராட்டினம்
11. அடுப்பின் மேல் தட்டு—பரன்
12. சூரியனைக்கண்டு "சிரிப்பது"—கமலம்
13. நாணிசைக் கருவி—தம்புரா
17. அறிவதற்காக முதற் கேட்பது தம்பி—எவ்விடம்
18. அம்மா அடிக்கடி வதியுமிடம்—அடுப்படி
19. உச்சஸ்தாயியில் அழைப்பது—கூக்குரல்
22. அவதானம் அவசியமானது—கவனம்
23. பாத்திரம்—குவளை
25. தமிழ்நாட்டு ஓவியர் ஒருவரின் முதலெழுத்துக்கள்— ம.செ
27. சங்கரா போற்றி— சய

இது

கடைசிப் பக்கம்!

அல் ல

'மறுமொழி' - ஒரு (கொள்கை !!?) விளக்கம்

மறுமொழி விற்றுத் தீர்ந்து விட்டது. ஒரு நிச்சயமான வெற்றி.

வெற்றியின் காரணகர்த்தாக்கள் பலர். மூர்த்தி, ஜோர்ஜ், மொனிக்கா, தாஸ், நடேஸ், சுகு, ரணா, வாசகர்கள், வர்த்தகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள் இப்படிப் பலர்கள்.

நிறைய விமர்சனங்கள்- அஞ்சல் மூலமும், தொலை நகல் மூலமும், தொலை பேசி மூலமும், நேரிலும்-கிடைத்தன. பெரும்பாலானவை வாழ்த்தியே வந்தன. அட்டை கவர்ந்ததைப்போல் உள்ளே விடயமில்லை என்றார்கள் சிலர். அட்டையின் கவர்ச்சிக்காகவே 'மறுமொழி' யை வாங்கினோம் என்றார்கள் பலர். அப்புகழெல்லாம் மூர்த்திக்குரியவை.

அரசியலில் ஆசிரியரின் கொள்கை தடம் புரண்டு போவதாக பல 'தோழர்கள்' குறைப்பட்டுக் கொண்டார்கள். 'நீங்கள் எங்கள் பக்கமில்லை' என்றார்கள். 'சிலரைத் தூக்கிப் பிடிக்கிறீர்கள்' என்றார்கள் , 'இலங்கை அரசாங்கம் பணம் தருகிறது' என்றார்கள். பலருக்கும் பலவித குறைகள்.

இருந்தாலும் "'மறுமொழி' எம் பக்கம்'" என்று சொல்லிக்கொண்டு எவரும் உரிமை கொண்டாட வரவில்லை. அது போதும்.

எல்லோரையும் எப்போதும் திருப்திப்படுத்த முடியாது. 'மறுமொழி' ஒரு அரசியல் சஞ்சிகை இல்லை. ஒரு கட்சிப் பத்திரிகை இல்லை. மனநிறைவான வாசிணைக்கு ஒரு வாய்ப்புத்தர மட்டுமே முயலும் ஒரு சஞ்சிகை. நாம் எங்கு நிற்கிறோம், எப்படியானவர்கள் என்றெல்லாம் சொல்லியாகி விட்டது. சுவருக்கு ஒரு பக்கத்தில் மட்டும் நின்று கொண்டு மற்றப் பக்கத்தில் என்னதான் நடக்கிறது என்று அறிய விரும்பாத மனிதப் பிறவிகளை விடவும் மதிலின் மேலிருந்து கொண்டு இரண்டு பக்கத்தையும் பார்த்துக் கொள்ளும் பூனை பரவாயில்லை என்று கருதுகிறோம். மாற்றம் என்பது மாறாத விதி என்பதற்கமைய மாறிக் கொண்டிருக்கின்ற நியதிகளுக்கு ஈடு கொடுக்காமல் கருங் கல்லாய்ச் சமைந்து கொண்டிருக்கின்ற 'கொள்கை' கள் எம்மை நிச்சயம் நிறுத்தியே வைத்துக் கொள்ளும்.

கனடாவில் தமிழ் அரசியல்வாதிகள் இன்னும் களத்தில் இறங்கவில்லை. இயக்கவாதிகள் அரசியல் பேசுகின்றனர். பத்திரிகையாளர்கள் அரசியல் பேசுகின்றனர். இவர்களில் எவர் பேசுவது சரி என்று தீர்மானிக்க தேர்தல் என்ற சோதனைக் களம் இல்லை. யார் வேண்டுமானாலும் எதையும் பேசலாம். வாசகர்களுக்கு உண்மை நிலை புரியும். இதயசுத்தியோடு ஒரே கொள்கையைக் காலம் காலமாக அனுஷ்டிப்பது உத்தமமான கொள்கையாகவிருக்கலாம். ஆனால் அது யதார்த்தமானதல்ல.

சென்ற இதழில் 'ரொறோன்டோ ஸ்டார்' பத்திரிகைக்கு விருது கொடுத் விடயத்தில் தமிழர் தகவல் ஆசிரியர் செய்தது சரி என்பதாக எமது அபிபிராயத்தைத் தெரிவித்தோம். இதனால் இவ்வாசிரியருக்கு எதிரான அபிப்பிராயத்தைக் கொண்டவர்கள் நாம் 'முற்போக்குக் கொள்கை'யிலிருந்தும் பிறழ்ந்து விட்டதாகக் குறைபட்டனர். முற்போக்கு , நற்போக்கு, பிற்போக்கு என்று எந்தவித கொள்கைகளையும் சார்ந்தவரல்லவர் நாம். யதார்த்தமான சிந்தனைகளும் செயற்படுத்தக் கூடிய திட்டங்களும், தீர்க்கதரிசனமுள்ள தலைவர்களும் தேவைகளையறிந்து அனுசரித்துப் போகும் மக்கள் கூட்டமும் உள்ள சமூகமே நாகரீகமான சமூகமாகக் கருதப்படும். தனிமனிதர் ஒருவருடைய கொள்கைகள் அவருடைய சுய விருப்பு வெறுப்புகளைத் தாண்டி வெளியே வரவேண்டும். துரதிர்ஷ்ட வசமாக சாதாரண மனித பலவீனங்கள் விருப்பு வெறுப்புகளையே முன்தள்ளும் வலிமை கொண்டனவாக இருக்கின்றன. இந்தப் பிடியிலிருந்து வெளியே வந்து சமூகத்திற்கு நல்லதென்று படுவதை நல்லதென்றும் பிழையென்று படுவதைப் பிழையென்றும் அபிப்பிராயம் தெரிவிப்பது நல்லதொரு கொள்கையென்றே நாம் நினைக்கிறோம்.

தமிழர் சுயநிர்ணயத்திற்கான போராட்டத்தில் எமது அரசியல் நிலைப்பாடு பற்றியும் பல குறைகள் தெரிவிக்கப்பட்டன. சென்ற இதழில் இதுபற்றி நாம் தெரிவித்த கருத்துக்கள் இன்றைய காலகட்டத்தில் தமிழருக்கு எது சாத்தியமானது என்ற அளவுகோலின் பிரகாரமே தெரிவிக்கப்பட்டது. சரியான தீர்வொன்றுக்கான அடித்தளம் உறுதியாக அமைக்கப்படும்வரை பலச்சமநிலையைப் பேணுவதற்கு ஒரு சக்தியின் தேவை அவசியம். இதற்கான மாற்றுக் கருத்து எதுவும் இருக்க முடியாது. எதையும் எதிர்க்க வேண்டுமென்பதற்காக எதிர்ப்பது என்பதே 'கொள்கை' என்றால் அப்படியான கொள்கையிலிருந்தும் நாம்

நிச்சயம் வழுவியேயாகுவோம். நாம் தடம் புரண்டோமா அல்லது குத்துக்கரணம் அடித்தோமா என்பதைக் காலம் கருத்திலெடுக்கும்.

பலமும் பலவீனமும் எல்லோருக்குமுள்ள இயல்புகள். எங்கள் எல்லோரினதும் வாழ்க்கையின் ரகசியங்களே இவை இரண்டும்தான். தன்னை முழுமையாக அறிந்தவனுக்கு தான் எங்கே நிற்கிறேன் என்ற உண்மை நன்றாகவே தெரிந்திருக்கும். இருப்பினும் சூழலின் ஆளுமைக்கும், யதார்த்தத்தின் கட்டுப்பாட்டுக்கும், மனச்சாட்சியின் நெருடலுக்குமிடையில் அவன் ஒரு நிலைப்பாட்டை அனுசரித்தேயாக வேண்டும். நாடும் மக்களும் முதன்மை பெறின் அவனது முடிவு ஒன்றாகவும், குடும்பமும் பிள்ளைகளும் முதன்மை பெறின் அவனது முடிவு இன்னொன்றாகவும் இருக்கலாம். இங்குள்ள நமக்கு இந்த இரண்டும் தேர்வுக்குரியனவாகவும் (chioce), தாய்நாட்டிலுள்ளவர்க்கு இவ்விரண்டுமே அவசியமானவையாகவும் (necessity) இருக்கின்றன. துரதிர்ஷ்ட வசமாக இங்கு நாங்கள் எடுக்கின்ற நிலைப்பாடுகள் மக்களின் உயிர்களைப் பாதிப்பதில்லை. அதனால் விரும்பியவாறு பரீட்சித்துப் பார்க்கலாம். தாய்நாட்டிலோ 'கொள்கை' ப் பரிசோதனைகளுக்கு அவகாசம் இல்லை. வாழ்வுக்கும் சாவிற்குமிடையில் கொள்கை பற்றிச் சிந்திப்பதானால் சுவாசங்களை நிறுத்தியாக வேண்டும். எமது கருத்துக்களும் நிலைப்பாடுகளும் இப்பின்னணிகளையே சார்ந்திருக்கும்.

வரட்டுப் பிடிவாதங்களை வாழ்க்கையின் வேதாந்தங்களாக்கி வாழவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கில்லை. இயக்கவியற் தாற்பரியங்களை உணர்ந்து கொண்டவர்களுக்கு குழப்பமெது தெளிவு எது என்று நன்றாகவே தெரியும். இலட்சிய நிலையில் வாழ்வதற்கு நாமொன்றும் அண்டவெளி மனிதர்கள் இல்லை. எங்கள் வாழ்வின் சூத்திரங்கள் 'கருதப்பட்ட மாறிலிகளை' நிறையவே கொண்டிருக்கின்றன. இலட்சியமான சமன்பாடுகளை எவராவது தரும் வரைக்கும், யதார்த்தமாக வாழ எத்தனிக்கின்ற சாமானிய மனிதர்கள் நாம்.

சுயபரிசோதனை செய்து பார்க்கில் நாம் எல்லோருமே பாவம் செய்தவர்கள்தான். மற்றவர்கள்மீது கல்லெறிந்து கொல்லுமளவிற்கு பரிசுத்த மனிதர்களல்ல. முதுகுகளில் பாரமிருப்பதைப் புரிந்து கொள்பவர்கள் வேதனையைக் காட்டிக் கொள்வார்கள்.

புரியாதவர்கள்?

"மறுமொழி" மாத சஞ்சிகை
வெளியீடு: ஷாலி பப்ளிகேஷன்ஸ் - கனடா
ஆசிரியர்: த. சிவதாசன்
கணனி அச்சு: மொனிக்கா
கணனி வரைகலை, அட்டை: மூர்த்தி
விளம்பரம்: தாஸ், சுகு
விநியோகம்: நடேஸ்

"Marumoli" *Tamil Monthly Magazine*
Published by Shali Publications - *Canada.*
Editor: T. Sivathasan
Type setting: Monica
Layout & Cover: Moorthy
Advetising: Thas & Suku
Distribution: Nades

ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

முகவரி / *Address*
'Marumoli'
Shali Publications-Canada
Box 55301
300 Borough Drive
Scarborough, On.
M1P 4Z7

தொலைபேசி / *Phone: (416) 410 MOLI*
தொலைநகல் / *Fax: (905) 294 8001*
பேஜர் / *Pager: (416) 719 5031*